குடிஅரசு

மலர் - 6

ஜனவரி - 1932

ஜட
ஊ:7211, N25TN.
N32.6.
179293




LODHRA
FOR
LADIES'
TROUBLES & DISORDERS.


"டாஸ்லோ"
டைமண்ட் நகைகள்
பார்ப்பவர்கள்
வைரநகைகளென்று
பிரமிக்கிறார்கள்
ஆயிரக்கணக்காய்செலவாகின்றன
கண்ணாடிகற்களை வாங்கி ஏமாறவேண்டாம்
நகை கேட்லாக் இனாம்.
பி. கோபாலஸ்வாமி நாயுடு & சன்ஸ்
பரங்கிமலை போஸ்டு (மதராஸ்)

79293

## "தமிழகம்" கிடைக்குமிடங்கள்.

ரயில்வே ஸ்டேஷனிலுள்ள ஹிக்கின்பாதம்ஸ் & சுதேசமித்திரன் புஸ்தகசாலைகள்.

எம். சிதம்பர தேசிகர்,
சிவன் கோவில் தெருவு, காரைக்குடி.
எஸ். வாம தேவ சாஸ்திரி,
திருவண்ணாமலை.
கே. சுப்பையா பண்டாரம்,
கோட்டார்.
என். வி. ஆர். நடேசன்,
கோட்டையூர்.
நவீனகதா புத்தகசாலை,
ரெங்கோன்.
கே. வி. நாராயண அய்யர்,
திண்டுக்கல்.
எம். காசிநாதன்,
தேவக்கோட்டை.
ஓ. கே. மோகிதீன் சாகிப்,
கொளம்பு.
வி. ஆப்பாவு செட்டி அண்டு சன்ஸ்,
புத்தக வியாபாரிகள், பெங்களூர்.
M. N முத்து குமாரசாமி பாவலர்,
திருப்பாபுலியூர்.
N. L. ஐயர், தஞ்சாவூர்.
இண்டோ மலையன் டிபோ,
பினாங்கு.
M. A. கிருஷ்ணசாமி பிள்ளை,
மதுரை.
ஈஸ்வரம் பிள்ளை, தென்காசி.
K. சீனிவாசன்,
தெப்பகுளம், திருச்சி.
ச. ம. சே காதர் சாஹிப்,
சேர்லியா தெரு, பினாங்கு.
கி. ரங்கநாயக்கலு, சிதம்பரம்.
ஏ. வி. கன்னைய நாயுடு, ஆரணி.

நாராயணசாமி, திருப்பத்தூர்.
ஷேக் உசேன், காரைக்கால்.
கோவிந்தசாமி, பாபு காசம்.
பரமசிவம் பிள்ளை,
திருநெல்வேலி.
கோவிந்தராஜு முதலியார்,
வேலூர்.
பாலகிருஷ்ண ஐயர்,
சேலம்.
லிங்கப்ப கௌண்டர்,
பொள்ளாச்சி.
சபாபதி பிள்ளை, புதுக்கோட்டை.
ராஜா பழனியப்ப முதலியார்,
சேர்மாதேவி.
ஞானப்பிரகாசம்,
உதகமண்டலம்.
நாச்சி முத்து, திருப்பூர்.
பூவலிங்கம் பிள்ளை,
ஸ்ரீ வைகுண்டம்.
வெங்கடாசலம் பிள்ளை, ஈரோடு.
சுப்பிரமணிய பிள்ளை,
திருத்துறை பூண்டி.
முத்துசாமி, சாத்தூர்.
விஸ்வநாத சேர்வை,
திருப்பத்தூர் (ராமநாதபுரம்).
சௌந்தரராஜலு நாயுடு,
பொன்மலை.
பழனியாண்டி மூப்பன்,
பாலக்காடு.
A. நடேச அய்யர்,
டர்பன் (நெட்டால்)

மற்ற விடங்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.

"தமிழகம்" ஆபீஸ் ஜி. டி. சென்னை.


கவனியுங்கள்! கவனியுங்கள்!!

"உங்கள் நம்பிக்கையான கடை"

K. ராமமூர்த்தி அய்யர் கம்பெனி

உத்திர வாதமுள்ள அசல்
பொன் வெள்ளி நகை வியாபாரம்.

87, சைனா பஜார் ரோட், மதராஸ்.

நம்பிக்கையான சவர, பொன், அசல்
வெள்ளி சாமான்கள் கிடைக்கு மிடம்.

பி. வாசீஸ்வர அய்யர் கம்பெனி,
(குருக்கள் கடை)
பொன், வெள்ளி நகை வியாபாரம்,
194, சைனாபஜார் ரோட், சென்னை.


461

# தமிழகம்

நேர்த்தியான படங்களுடன் கூடிய
ஓர் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை

மலர் 6 தைமீ பிரஜோத்பத்தி௵

ஆசிரியர்:
A. K. சந்திரசேகரன்

ஆபீஸ்: ஜி. டி. சென்னை.

# தமிழகம்

——:o:——

## அட்டவணை

——:o:——


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| இந்தியா கதி | ... | 1 |
| மின் வெட்டு | ... | 4 |
| புத்தாண்டு வாழ்த்து | ... | 7 |
| உலகச் செய்திகள் | ... | 8 |
| சிங்கமும், சுண்டெலியும் | ... | 9 |
| யுத்த கொலையாளிகள் யார்? | ... | 12 |
| திமிங்கில மந்தை | ... | 14 |
| மீன்களிடமிருந்து மனிதர் | ... | 17 |
| முத்திரைக் கொலை மாயம் | ... | 20 |
| வெள்ளைப் பெண்கள் பிழைக்கும் அதிசயம் | ... | 22 |
| சீனர் அதிசய வாழ்க்கை | ... | 25 |
| நாணய நடமாட்டம் | ... | 29 |
| சிரசில் விளக்குள்ள மீன்கள் | ... | 30 |
| குயிலோசை கடியாரம் | ... | 31 |
| சிறுவர்—சிறுமியர் | ... | 33 |
| இந்திய புராதனமும், தற்காலமும் | | 36 |
| என் துயர் | ... | 41 |
| விகடன் | ... | 47 |
| ஸாமுத்திரிகா லக்ஷணம் | ... | 49 |
| ஸரோஜனி நாடகம் | ... | 53 |
| மதிப்புரை | ... | 57 |






"கேஸரியின்"

டெண்டல் கிரீம்

(பற் பசை)

எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்.


கேஸரி குடீரம்,

ஆயுர்வேத ஔஷதசாலை,


எழும்பூர், மதறாஸ்.



Edited & Published by A. K. Chandrasekaran, G. T., Madras
& Printed at Lodhra Press, Egmore, Madras.




தாயின் அன்பு




# இந்தியா கதி

———:o:———

"இந்தியா விதி" என்று சென்ற மாதம் குறிப்பிட்டு எழுதியிருந்தோம். "இந்தியா கதி" எனத் தற்போது ஏற்பட்டிருக்கும் துர்ப்பாக்கிய நிலைமையைப் பற்றி எழுத



மகாத்மா காந்தி

நேரிட்டிருப்பதற்கு வருந்துகிறோம். உலக உத்தமர்—சாத்வீக சாந்தமூர்த்தி—இந்தியாவின் கதியைத் தன்னகத்தே யடக்கிய தயாள புருஷோத்தம தியாகி, மகாத்மா காந்தி, துருப் பிடித்துக் கிடந்த, உருப்படாத 1827வது ரெகுலேஷன் 25வது பிரிவின்படி கைது செய்யப்பட்டு மீண்டும் ஏரவாடா சிறையில் அடைப்பட்டிருக்கிறார். இதே சட்டத்தைப் பிரயோகித்து மகாத்மா காந்தியின் உற்ற துணைவரும், வலது கை போன்று விளங்கிய பர்டோலி வீரர் சர்தார் வல்லபாய் பட்டேலையும் கைது செய்து ஏரவாடா சிறையில் அடைத்திருக்கிறார்கள். இதற்குச் சில தினங்களுக்கு முன் வங்க தீரர் சுபாஷ் சந்திரபோசை பம்பாய்க்கு வெளியில் 30வது மைல் தூரத்தில், அவர் வங்காளம் திரும்பிய போது கைது செய்திருக்கிறார்கள். இச் சம்பவங்களுக்குச் சில வாரங்களுக்கு முன் இந்திய இளஞ் சிங்கம் பண்டித ஜவார்லால் நேருவையும், எல்லைப்புற 'காந்தி' அப்துல் காபூர் கானையும் அவரது சகாக்களையும், ஷெர்வானியையும் கைது செய்து விட்டனர். பண்டித ஜவார்லாலை

யும், ஷெர்வானியையும், கபூர் கான் சகோதாரையும் நைனி சிறையில் வைத்திருக்கிருர்கள். எல்லேப்புறக் காந்தியை பர்மாவுக்கு நாடு கடத்தி விட்டார்களெனத் தெரிகிறது. இந்தியாவில் இவ்வித துரிதத்தில் அடக்கு முறை தாண்டவமாடுமென எவரும் எதிர்ப்பார்த்திருக்க மாட்டார்களென்பது நிச்சயம். எனினும் இதில் ஆச்சர்ய மொன்று மில்லே!

◆ ◆ ◆

பிரிட்டிஷ் ராஜ தந்திரத்தை ஓரளவு அறிந்தவர்களுக்கு இது வியப்பாகத் தோன்ருது. அதிலும் இந்திய வைசிராயாயிருப்பவர் யாரென்பதை அறிந்தவர்களுக்கும் தற்போது பிரிட்டிஷ் மந்திரி சபையில் முதன் மந்திரி யாயிருக்கும் ஸ்ரீ மாக்டனுல்டு, இந்திய மந்திரி சர். சாமுவேல் ஹோர், ஸ்ரீ பால்டுவின் முதலியோர் பிறவிக் குணங்களே அறிந்தவர்களுக்கு இது வியப்பல்ல! லண்டன் இரண்டாவது மகாநாடு முடிவடைந்தது. அதுவும் முதல் மகாநாட்டின் கதியை யடைந்து, மூன்ருவது மகாநாட்டுக் 'குட்டி' போட்டது. இரண்டாவது மகாநாடு முடிவடைவதற்குள்ளேயே, சர்க்கார் போர் முழக்கஞ் செய்யத் தலேப்பட்டார்கள். அவசரச் சட்டங்களும் தலேகால் தெரியாமல் உருவாக்கப் பட்டன. லண்டன் மகாநாட்டுக்குச் சென்றிருந்த மகாத்மா காந்தி இந்திய கரையில் காலடி எடுத்து வைப்பதற்குள், அவாது உத்தம சகாக்களே சிறை பிடித்தனர். அது போதாக்குறைக்கு கல்கத்தாவில் ஐரோப்பிய சங்க விருந்தில் வைசிராய் இந்திய காங்கிரஸ் தலேவர்களே அறை கூவியழைத்தார். சாந்த மூர்த்தி மகாத்மா காந்தி பம்பாய் வந்ததும் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் நிலேமையைக் கண்டு திடுக்கிட்டார். வைசிராய் போர் முழக்கமும் அவர் செவியில் தொனித்துக் கொண்டிருந்தது. பொறுமையே பூஷணமாகக் கொண்ட அவர், மீண்டும் சமாசம் கோரி, வைசிராய்க்குத் தந்தியடித்து, நேரில் கண்டு பேச விரும்பினூர். வைசிராய் மறுத்து விட்டார். மீண்டும் கண்டு பேச மன்ருடினூர். வைசிராய் அதற்கும் மறுத்து விட்டார். வைசிராயின் செயல் பழுத்த மிதவாதிகளுக்கும் ஆத்திரத்தை மூட்டினதென்ருல் அதைப்பற்றி நாம் இங்கு குறிப்பிடுவானேன். பம்பாய் மிதவாதத் தலைவர்கள் கூட வைசிராய்க்குத் தந்தி யடித்து, மகாத்மாவை எவ்வித நிபந்தணையுமின்றி கண்டு பேசும்படி கேட்டுக் கொண்டார்கள். ஆனுல் அதற்குள் கிடைத்த பலனென்ன? மகாத்மாவையும் சர்தார் பட்டேலேயும் கைது செய்து சிறையிலடைத்தனர்.



சுபாஷ் சந்திர போஸ்



அதே தினத்தில் நான்கு அவசரச் சட்டங்களும் பின் தொடர்ந்து பறந்து வந்தன.

◆ ◆ ◆

அவசரச் சட்டங்களின் போக்கைப்பற்றி இங்கு நாம் விவரித்துக் கூற விரும்பவில்லே. ஆனுல் அவற்றின் முக்கியாம்சங்களே மட்டும் சுருக்கமாகக் கூற விரும்புகிருேம். எல்லேப்புறம், ஐக்ய மண்டலம், வங்காளம் முதலிய இடங்களில் எந்த விதமான அவசரச் சட்டங்கள் தாண்டவ மாடுகின்றனவோ, அவ்வளவு சட்டங்களும் பம்பாய், பாஞ்சாலம், சென்னே, பீகார் — ஒரிஸா, மாகாணங்களுக்கும் பிரயோகிக்கப் பட்டிருக்கிறது. பத்திரிகை வாய்ப்பூட்டு சட்டங்கள் ஊர்ஜிதஞ் செய்யப்பட்டிருக்கின்றன. சாத்வீக மறியலும் குற்றமாம்! காங்கிரஸ் ஸ்தாபனங்கள் சட்ட விரோதமானவையாம்!! இச் சட்டங்களின் போக்கைப் பற்றி வியாக்கியானம் செய்வதை விட, அவை நடை முறையில் எந்த விதமான ஆனந்தக் கூத்தாடுகின்றனவென்பதைப் பார்த்துத் தெளிவதே மேலென நம்புகிருேம்.



ஜவார்லால் நேரு

◆ ◆ ◆

சுருங்கக் கூறின் காங்கிரசிற்கும் சர்க்காருக்கும் போர் ஆரம்பமாகி விட்டது. காங்கிரஸ் சட்ட மறுப்பை மீண்டும் ஆரம்பித்து விட்டது. சர்க்கார் அதை நசுக்க ஏற்கனவே தடை முறைகளேக் கைக் கொண்டு விட்டார்கள். சர்க்கார் இவ்வளவு துரிதத்தில் இவ்வளவு துணிகரமாகக் கண்டிப்பான முறைகளேக் கைக் கொண்டதில் சில மர்மங்கள் அடங்கி இருக்கின்றன. சென்ற சட்ட மறுப்பு இயக்கத்தின் போது சர்க்கார் ஆரம்பத்திலேயே அதை நசுக்காமல் விட்டதுதான் முடிவில் ஆபத்தாக முடிந்ததென்பது பிரிட்டிஷாரின் அந்தரங்க நோக்கம். ஆகவே, முளேயிலேயே காங்கிரஸ் இயக்கத்தைக் கிள்ளி எறிய முனேந்துவிட்டனர். சென்ற போராட்டத்திலும் அக் காலத்தில் வைசிராயா யிருந்த லார்டு இர்வின் ஒன்பது அவசரச் சட்டங்களேச் செய்தார். தடியடிகளும், துப்பாக்கிக் குண்டுகளுக்கும் குறைவில்லாம லிருந்தன. முடிவில் என்ன பயன் ஏற்பட்டது? சுதந்தர உணர்ச்சி தட்டி எழுந்த ஒரு நாட்டினரை நசுக்கி விடுவதென்பது பகற் கனவே யாகும். பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள், தங்கள் நவீன முறையால் பயனேற்படக் கூடுமெனக் கனவு காணலாம். ஆனுல், அவர்கள் கனவு பகற் கனவாக முடியுமா அல்லது நினேவாக மாறுமா வென்பதைப் பொறுத்துப் பார்ப்போம்.


◆ ◆ ◆

உலக மெங்கும் வியாபார மந்தமும், பொருளாதார நெருக்கடியும் மக்களேப் பிடுங்கித் தின்னும் இச் சந்தர்ப்பத்தில் இந்தியாவில் இவ்வித துர்ப்பாக்கிய நிலேமை ஏற்பட்டதற்கு எந்த இந்தியனும் மனம் வருந்தாமலிருக்க முடியாது. இந்தியாவின் கதி எவ்வாறு முடிகிறதோ ஈசனுக்கே வெளிச்சம்! சத்தியம் என்றும் சாகாது. இந்தியர் எத்துறையிலும் சத்தியமாகவும், பொறுமையுடனும், பொறுப்பை யுணர்ந்து நடந்து கொண்டால் ஈசன் அருள் சத்தியத்தின் பாலிருக்கு மென்பதற்குச் சந்தேக மில்லே. இந்தியாவின் கதி என்னவாகுமோ வென்ற கிலேசம் சகல இந்தியருக்கு மிருக்கு மென்பதை எவரும் மறுக்க முடியாது. இந்தியாவின் கதி என்னவாகு மென்பதைப்பற்றி இப்பொழுது ஒன்றும் கூற முடியாது. யாவும் பொறுத்துப் பார்ப்பதே நலமாகும்.




**தியாக மூர்த்தி செய்தி.**—தியாக மூர்த்தி, மகாத்மா காந்தி தேச மக்களுக்கு விடுத்திருக்கும் செய்தி கவனிக்கற்பாலது. அவர் இறுதி வரையில் சமாசம் ஏற்படுமென்ற நம்பிக்கையே கொண்டிருந்தார். அவர் நம்பிக்கையிலும் மண் விழுந்தது. எனினும், மாசற்ற அவர் உள்ளத்தில் பிரிட்டிஷார் மீது எவ்வித துவேஷமோ, அன்றி பகைமையோ ஏற்படவில்லை. காந்திஜியின் அபூர்வ குணங்களை ஆராய, ஆராய அதற்கு முடிவின்றிப் போகிறது. அது எல்லையற்ற அதிசயமாகவே விளங்குகிறது. லண்டன் மகா நாட்டின் முடிவில் அவர் பிரிட்டிஷாரிடம் தெரிவித்ததையே மீண்டும் தம் தேச மக்களுக்கு வற்புறுத்தி சிறை புகுந்தார். "நான் இந்தியா திரும்பியபின், துரதிஷ்ட வசமாக மீண்டும் சட்ட மறுப்பை ஆரம்பிக்க நேர்ந்தால், பிரிட்டிஷாரிடம் எவ்வித பகைமையு மில்லாத துவேஷ மற்ற போர் தொடுப்பேன்!" என்றார். அதையே வற்புறுத்தி இந்திய மக்கள் சாத்வீக வழியில் அணுவளவும் தவறாமல் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்திச் செல்ல வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். இதற்காக இந்தியர் உயிர், பொருள் ஆவி யாவற்றையும் ஒருங்கே தத்தஞ் செய்ய வேண்டினும் தியாகஞ் செய்யப் பின் தங்கக் கூடாதென வற்புறுத்திச் சென்றார். இந்திய மக்கள் அவர் பெயருக்குப் பங்கம் வராமல் நடந்து கொள்ளுவார்களா என்பதே கேள்வி.

**கஸ்தூரிபாய் கண்ணீர்.**—"உச்சிமீது வானிடிந்து விழுந்தபோதிலும் அச்சமில்லை" என்றார் பாரதி. அதைப் பகிஷ்காரமாக நடத்திக் காட்டினார் காந்திஜி. அண்டமெல்லாம் புரண்டு வரினும் அசையாத வைர மனம் படைத்தவர் மகாத்மா காந்தி என்பதை எவர் மறுக்க முடியும்! பம்பாயில் மகாத்மா வசித்துவந்த "மணிபவன"த்தில் இம்மாதம் 4-ந்தேதி அதிகாலையில் 3 மணிக்குப் பம்பாய் போலீஸ் கமிஷனர்கள் அவரைக் கைது செய்யச் சென்றனர். அவர்கள் வருகிறார்களென்ற செய்தியைக் கேட்டதும் நித்திரை செய்த மகாத்மா எழுந்திருந்து, புன்னகை தவழும் மலர்ந்த முகத்துடன் ஆனந்தமாகக் கைதியானார். தமது மூட்டை முடிச்சுகளுடன் சாந்தமாகப் புறப்படச் சித்தமானார். அஞ்சா நெஞ்சம் படைத்த அவர் உள்ளத்தில் கலக்கமில்லை. அன்று மௌன விரதம். வாய்திறந்து ஒரு வார்த்தைகூட தமது உற்றதோழர்களிடம் பேசினாரில்லை. அவரது உத்தம பத்தினி கஸ்தூரி பாய் காந்தி, கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டியது. அதைக் கண்டும் கலங்கினாரில்லை. "என்னையும் அவர்கள் அழைத்துச் செல்லட்டும்" என்று கலங்கிக் கதறினார் கஸ்தூரி பாய். அம்மையாரின் உள்ளம் எவ்வாறு பதறித் துடித்ததோ பரமனே அறிவார்! தேசத்துக்காக பர்த்தா, மக்கள், சொத்து, சுகம் யாவையும் தத்தஞ் செய்த அம்மையாருக்கு இத் தள்ளாத வயதில் நேர்ந்த சஞ்சலத்தைக்கண்டு உருகாத இந்திய உள்ள முண்டோ!


வல்லபாய் படேல்



**வெள்ளையருக்கு உபதேசம்:**—மகாத்மா கைதியாவதற்கு முன்னரே, பூனாவிலுள்ள தமது உத்தம நண்பர் ரெவரண்டு எல்வினுக்குத் தந்தி யடித்து உடனே பம்பாய் வரும்படி கேட்டுக்கொண்டார். ரெவரண்டு எல்வின் ஒரு ஆங்கிலேயர். கிறிஸ்து சேவா சங்கத்தைச் சார்ந்தவர். அவரும் மகாத்மா காந்தியின் அழைப்பிற்கிணங்கி பம்பாய் வந்து சேர்ந்தார். அவர் மூலமாக மகாத்மா ஆங்கிலேயருக்கு ஒரு உபதேசஞ் செய்திருக்கிறார். "என் தேச மக்களை நான் எவ்வாறு நேசிக்கிறேனோ, அதே போல நான் ஆங்கிலேயரையும் நேசிக்கிறேன். அவர்கள் மீது எனக்கு எவ்வித துவேஷமோ, பகைமையோ கிடையாது. இச்செய்தியை என் சார்பில் நீங்களே ஆங்கிலேயருக்குத் தெரிவித்துக் கொள்ளுங்கள்" என்று கைதியாகி சிறைசெல்லும் அந்த நிமிஷத்தில் ரெவரண்டு எல்வினிடம் எழுதிக் கொடுத்தார். மகாத்மாவின் உள்ளக் கிடைக்கையை வெள்ளையர் இப்பொழுதாவது அறிந்து கொள்ளுவார்களென்று நம்புகிறோம். பிரிட்டிஷாரிடம் மகாத்மாவிற்கு எவ்வித துவேஷமும் கிடையாது. அவர்கள் முறையையே மகாத்மா வெறுக்கிறார். வெள்ளையர் இந்த உத்தமருக்கு என்ன பிரதியுபகாரஞ் செய்தனர். கள்ளரும், கொலைஞரும் வதியும் சிறையில் மகாத்மா தவங்கிடக்க வேண்டி நேர்ந்திருக்கிறது. மகாத்மாவின் பெருந்தவமாவது பாழும் உலகத்தை சீர்படுத்தி, பிரிட்டிஷார் மண்ணாசையை போக்குமென நம்புகிறோம்.

**மனிதர் உணருவார்களா?:**—மகாத்மா காந்தி ஐரோப்பாவிலிருந்து புறப்பட்டு வந்த 'பில்ஸ்னா' என்ற கப்பலில், ஒரு வெள்ளை மாது அருமையான வேட்டை நாயொன்று கொண்டுவந்தார். இத்துடன் வேறொருவர் அருமையான இரு கரும் பூனைகளும் கொண்டு வந்தனர். கப்பலில் மகாத்மா மேற்கூறிய இரு மிருகங்களிடமும் நெருங்கிப் பழகினார். வேட்டை நாயும், இரு பூனைகளும் மகாத்மா காந்தியின் சமீபத்திலேயே சதா காத்துக்கொண்டு கிடந்தன. காந்திஜியும் அவைகள் மீது அன்பு பாராட்டி வந்தார். வேட்டை நாயும், பூனைகளும் ஒன்றை யொன்று கண்டு 'ஊர்' என சீறிச் சினந்து கொள்ளாமலிருந்தது அதிசயமேயாகும். அக்காலத்தில் உத்தம அரசர் ராஜரீகத்தை வர்ணிக்குங் காலத்துப் புலவர்கள் சிங்கமும் ஆடுகளும் ஒரு ஓடையில் தண்ணீர் குடித்து வந்ததாகக் கூறுவார்கள். இந்த உவமை மகாத்மா காந்தியிடம் மெய்ப்பித்தது. பூனைகளும், வேட்டை நாயும் சாந்தமாக அவரிடம் பழகி இருந்தன. கப்பல் இந்தியக் கரை நெருங்கியதும், மிருகங்களை அடைக்கு மிடத்திற்கு அவைகளைப் பிடித்துக் கொண்டு போக முயற்சித்தார்கள். இருபூனைகளும் மகாக் கஷ்டத்துடன் மகாத்மாவை விட்டுப் பிரிந்தன. ஆனால் வேட்டை நாயோ ஒரு க்ஷண நேரங்கூட மகாத்மாவை விட்டுப் பிரிந்து போக மறுத்து விட்டது. பூனைகளின் பிரி

விற்கு மகாத்மா வருந்தினர். ஆகவே நாயையாவது தம்மிடம் விட்டு வைக்கும்படி கப்பல் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார். பம்பாய்க் கரை வந்து சேர்ந்த பின்னும் அந்த வேட்டை நாய் தன் சொந்தக் காரிடம் செல்ல மறுத்துவிட்டது. கடைசியாக மகாத்மா அந்த நாயைத் தட்டிக்கொடுத்து அதன் சொந்தக்காரரிடம் போகும்படி கேட்டுக் கொண்டபின்பே, அந்நாய் அவரை விட்டுப் பிரிந்துபோனது. மகாத்மாவின் சக்திக்கு இது ஒரு உதாரணம் போதும்! ஒரு வேட்டை நாயும் காந்திஜியின் தன்மையை அறிந்து கொண்டது. அவரது சக்தியை உணராத நாயிலும் கேடானவர் எத்தனைபேர் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

---

இம்மருந்து மிகச் சிறந்ததும், உத்திரவாதமுமான தென்று அகில இந்தியா ஆயுர்வேத எக்ஸ்பிஷனில் தங்கமெடல் பரிசு பெற்றது,




"ஜண்டு"
திராக்ஷாஸவம்
சரீரத்திற்கு
ஆரோக்யத்தையும், பலத்தையும்,
இன்னும் பசிதீபனத்தைவிருத்தி
செய்யும் டானிக் பானம்.
விலை 1½ பவுன் புட்டி 2-0-0, 1 பவுன் 1-9-0, ½ பவுன் 0-14-0.
சோல் ஏஜண்ட்ஸ்:- தாமோதர் அண்டு கம்பெனி
78, சைனு பஜார் ரோட், மதருஸ்.

ஆயுர்வேத சிகிஸ்சாசார சங்கம் என்னும் 200 பக்கங்கள் கொண்ட சுகாதார வழி இனாம். ஏஜென்ஸ் நிபந்தனைகட்கு எழுதவும்.

ரிஜிஸ்டர்



நல்ல ரத்தத்தையும் சக்தியையும் பெறுவதற்கு
டாக்டர் வாமன்
ரத்தசுத்தி சரஸபரிலா
சாப்பிடுங்கள்
85 வருஷ காலமாக பிரசித்தி பெற்றது.
கம்பெனி., சைனுபஜார் ரோட், சென்னை.

# புத்தாண்டு வாழ்த்து

தமிழ்ப்புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களியற்றியது.

———:o:———

நிலைமண்டில ஆசிரியப்பா

அன்பின் மிக்க அருங்குண நண்பீர்,
ஆயிரத் துத்தொள் ளாயிரத் தோடே
இயைந்தநன் முப்பா னிரண்டா மாண்டே
ஈண்டுப் பிறந்ததா லின்பம் பயக்க.
உற்றவிவ் வாண்டில் உமக்குறு நலங்கள்
ஊற்றுநன் னீர்போல் ஏற்றமுற் றிலங்குக.
எழிலுந் தொழிலும் இழிவிலாச் செல்வமும்
ஏதமில் இன்பமும் என்றுநீர் பெறுக.
ஐயன தருளால் வையந் தன்னில்
ஒன்றிய நும்புகழ் உத்தமர் புகழ்போல்
ஓங்கநம் மிடையே உறுநட் போங்குக.
ஔவிய நம்மை யணுகா தொழிகவே.

---

குறிப்பு:—எழில்-அழகு, ஏதம்-துன்பம், ஐயன்-கடவுள், ஒன்றிய-பொருந்திய உறுநட்பு-பெருஞ்சினேகம், ஔவியம்-பொறாமை.

# பொங்கல் வாழ்த்து

நிலைமண்டில ஆசிரியப்பா

சீரார் கல்வி சிறந்தொளி ரன்பீர்,
மார்கழித் திங்கள் மகிழ்நனி சிறப்ப
ஆர்கலி யுலகில் அமைந்த தாகலின்
ஏர்திகழ் மதியோ டின்பம் பெருகவும்
பொங்கு மங்களம் எங்குந் தங்கவும்
இனிய காலையில் இன்னிசை பலரும்
ஓதி யோதி யுலக முதல்வனை
ஏத்தின ரன்றியு மெய்திய தையில்
பொங்கலோ பொங்கல் பொங்கலோ பொங்கல்
பொங்குக பொங்குக பொங்குக பொங்கலென்
றெங்கு மிசைத்த இன்னிசைக் கொப்பப்
பொங்குக வாழ்க்கை பொங்குக செல்வம்
இங்குமக் கென்றும் இறைவனின் னருளால்
பொங்கல் நாட்பல பொலிந்தோங் குகவே.

---

குறிப்பு:—திங்கள்-மாதம், மகிழ்-சந்தோஷம், ஆர்கலி-கடல், ஏர்-அழகு

# உலகச் செய்திகள்.

———:o:———

சாதாரணமாக 50 வயதுள்ள ஒருவர் 6000 நாட்கள் தூக்கத்தாலும், 6500 நாட்களை வேலையிலும், 800 நடையிலும், உல்லாச விளையாட்டுகளில் 4000 நாட்களையும், 1500 நாட்களை சாப்பிடுவதிலும், 500 நாட்களை வியாபாரத்தைக் கவனிப்பதிலும் கழித்திருக்கக் கூடுமெனக் கணக்கிட்டு இருக்கிறார்கள்.

லீமிஸ்டன் என்ற இடத்தில் மிஸ். காடோ, என்ற 90 வயதுக் கிழவி இன்னமும் டைப் அடிக்கும் பெண்ணாக உற்சாகத்தோடு வேலை பார்த்து வருகிறார். அவர் தற்காலம் மேனாட்டுப் பெண்கள் செய்து வரும் கோலத்தைக் கண்டு வெறுப்பதோடு, அவைகள் பெண்களின் அடக்க பொருக்கத்திற்கு முற்றிலும் மாறுபட்டதெனக் கருதுகிறார். ஆண்களே பெண்களைவிட உயர்ந்தவர்களென்பது அப் பெண்மணியின் அபிப்பிராயம்.

செந்தாவில் 1927ம் வருடம் ஒரு வகைப் பறவையைப் பிடித்து அதற்கு சில அடையாளங்களைப் போட்டு காட்டில் விட்டு விட்டார்கள். அந்தப் பறவையைப் சமீபத்தில் பிரான்சிலுள்ள வாரோகேல் என்னுமிடத்தில் பிடித்தார்கள். அப் பறவை சுமார் 4200 மைல் பறந்து பிரான்சுக்கு வந்திருக்கிறது.

பெர்லின் தபால் ஆபீசில் தானே தபால்களை நிறுத்தி முத்திரை ஒட்டிக்கொள்ளும் புதிய இயந்திரமொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஒரு தபால் கவரை இந்த இயந்திரத்திற்குள் போட்டுவிட்டு இயந்திரத்திலுள்ள ஒரு கைப் பிடியைப் பிடித்திழுத்தால், உடனே அது நாம் போட்ட கடிதத்தை நிறுத்தி, அதற்கு வேண்டிய முத்திரையையும் ஒட்டி விடுகிறது. இந்த இயந்திரத்தை ஜெர்மனியிலுள்ள சகல தபால் ஆபிசுகளிலும் ஏற்படுத்த ஜெர்மன் சர்க்கார் தீர்மானித்து இருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

பெத்னல் கிரீஸ் கண்காட்சி சாலையில் பல தொழிலாளர் எழுதிய சித்திரப் படங்களை வைத்திருக்கிறார்கள். அத் தொழிலாளர்கள் முன்பின் சித்திரத் தொழிலில் பயின்றவர்களல்ல. என்னும் தங்கள் முயற்சியால் ஓய்வு நேரங்களில் சித்திரம் எழுதிப் பழகியவர்கள். அவர்கள் எழுதிய சித்திரப் படங்கள் கண்களைக் கவரத் தக்கனவாய் இருக்கின்றன.

மனிதர்களைப் போல் செடிகளுக்கும் உணர்ச்சி உண்டென சர். ஜெகதீச சந்திர போஸ் கண்டு பிடித்திருக்கிறார். ஒரு பூந்தோட்டம் அதைப் பரிபாலிக்கும் தோட்டக்காரனையே பொறுத்திருக்கிறது. ஒரே மண்ணுள்ள இரு தோட்டங்களில் ஒரேவித இரண்டு செடிகளை வைத்துப் பரிபாலித்தாலும் ஒரு தோட்டத்திலுள்ள செடி நன்றாகப் பூத்திருக்கக் காணலாம். தோட்டக்காரரின் அன்பையும் பிரியத்தையும் செடிகள் உணருகின்றன. நல்ல அன்பு காட்டி வளர்க்கப்படும் செடிகள் அதிக புஷ்பங்களைக் கொடுக்கின்றன. கடுகடுத்த முகத்தோடு வளர்க்கப்படும் செடிகள் அதிகப் புஷ்பங்கள் கொடுப்பதில்லை.

———


மதன
மஞ்சரி மாத்திரை
உங்களுடைய நபுஞ்சகத் தன்மையைப் போக்கி யௌனர்களாக்குவதில் சிறந்தது.
இந்த பலயீனத்தை போக்க
20 நாள்
மாத்திரை விலை ரூபா 1.
தபால்செலவு வேறு.
உழைப்பு இனும்
நமது பிரசித்தி பெற்ற டாக்டர்
வைத்தியா?
புஸ்தகத்துக்கு இன்றே எழுதுங்கள்.
மதன மஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார்,
சென்னை.


# சிங்கமும் சுண்டெலியும்.

(சென்ற மாதத் தொடர்ச்சி)



“சிறு துரும்பும் பல் குத்த உதவும்” என்ற பழமொழி ஒன்றுண்டு. சுண்டெலியால் உயிர் பெற்ற சிங்கம் அந்நன்றியை மறக்க மாட்டேனென்று எலியிடம் கூறியது. ஆனால், சிங்கம் மிருகங்களுக் கெல்லாம் ராஜனல்லவா? இந்தக் கர்வம் சிங்கத்தை விடவில்லை. பாராக்கிரமம் பொருந்திய சிங்கமா கேவலம் ஒரு சுண்டெலிக்கு நன்றிபாராட்டக் கடமைப் பட்டிருக்கிறது! ஒரு நாளும் இல்லை. சிங்கம் அவ்விடத்தை விட்டகன்றதும், அதன் நன்றி காற்றோடு பறந்து விட்டது. ஆனால், எலியின் ஞாபகம் சிங்கத்துக்கு அடிக்கடி வருவதுண்டு. சுண்டெலி மீது நன்றி யுணர்ச்சி ஏற்படுவதற்குப் பதிலாக, சிங்கத்தின் மனதில் குரோதமும், ஆவேசமும் வளர்ந்து கொண்டே வந்தது. சிங்கம் உயர் பிறவி யல்லவா! மிருகங்களை அடக்கியாளும் பொறுப்பை கடவுளே அதன் தலைமீது சுமத்தி இருப்பதாக அது நினைத்துக் கொண்டது! சிங்கத்திற்கும், சுண்டெலிக்கும் எந்த விதத்தில் பொறுத்தம்! அது அற்ப பிராணி; அதனிடமிருந்து பெற்ற உதவியையா நினைப்பது. அதற்கா, கடமைப் பட்டிருப்பது! முடியாத காரியம். ஆனால், சிங்கத்தின் மூளையில், தானும் ஒரு பிராணி வர்க்கமே என்பது படாமாற் போயிற்று. அது “தேவ லோக பிராணி” யாக நினைத்துக் கொண்டது.

இக் கர்வம் தலைக் கேறி சிங்கம் முன்போல் அக்காட்டில் முன்னிலும் பன்மடங்காய் அட்டகாசம் செய்து வந்தது. தன்வயிற்றுக்குபோதிய மிருகங்களைக் கொன்று தின்பதோடு நில்லாமல் எதிர்ப்பட்ட மிருகங்களை யெல்லாம் வெகு ஆணவத்துடன் கொன்று வீழ்த்தியது. இத்துட

னும் நிற்கவில்லை. மகா இழிவான செயலிலும் இறங்கிவிட்டது. ஒருவருக்கும் தீங்கறியாத சிறு எலிகளையும், அவற்றின் மீதுள்ள துவேஷத்தால் நசுக்கி சின்ன பின்னப் படுத்தியது. இதுவோ ஆண்மை பொருந்திய சிங்கத்திற்கு அழகு!

எலிகளெல்லாம் ஒன்றாகத் திரண்டன. என் செய்வதென்பது தெரியாது விழித்தன. முடிவில் சில, ஓரிடத்தில் ஒன்றுகூடி ஆலோசித்தன. இந்நேரத்தில் சிங்கம் அவ்வழியாக வரநேரிட்டது. எலிக் கூட்டத்தைக் கண்டதும் கர்ஜித்து தன் கூரிய நகங்களடங்கிய கைகளால் ஓங்கி அடித்துப் பல எலிகளைக் கொன்றது. பல குற்றுயிராகத் தவித்துக் கொண்டிருந்தன. சில தப்பித்தோம் பிழைத்தோமென ஓடி வளைக்குள் ஒளிந்தன. கால், கைகளை இழந்து பரிதபித்த எலிகள் பல. சிங்கம் வாலை வீசிக்கொண்டு கம்பீரமாக அப்பால் சென்றது. இச்சம்பவம் தற்செயலாக இதற்கு முன் சிங்கத்தின் உயிரைக் காப்பாற்றிய எலிவளைக்கு சற்றுத் தூரத்தில் நடந்தது. எலிகளின் கூட்டத்தைப் பற்றி இச்சுண்டெலிக்கு ஒன்றும் தெரியாது. ஆகவே அது சிங்கத்தின் கர்ஜனையையும் எலிகளின் கீச்சுக் குரலையும் கேட்டு வளையை விட்டு வெளியில் வந்து பார்த்தது. தன் இனத்தாரின் துயரங்களையும், அங்கு கால் வேறு கை வேறாகக் கிழித்து எறியப்பட்ட எலிகளின் கோர காட்சியையும் இரத்தப் பெருக்கையும் கண்டு திடுக்கிட்டது. மனம் உருகிக் கண்ணீர் உதிர்த்தது. உடனே அவைகளுக்கு வேண்டிய உதவி செய்தபின் மனக் கொதிப்பால், இக்கொடுமை புரிந்த சிங்கத்தை நோக்கி நடந்தது. சிங்கம் சற்றுத் தூரத்தில் வயிறார உண்டு வெகு உல்லாசமாகப் படுத்திருந்தது. எலி சிங்கத்தினருகில் நெருங்கியது.

ஏ! மிருகராஜனே! இது உன் வீரத்திற்கு அழகாகுமோ! என்றது.

சிங்கம் கோபாவேசத்துடன் கர்ஜித்தெழுந்தது. நெருப்புப் பொறி பறக்கும் கொடிய கண்களுடன் எலியை மிரட்டிப் பார்த்தது.

"அற்பனே! என்னை அணுகி வர உனக்கு எவ்வளவு ஆணவம். இதோ பார் உன்னை என்ன பாடு படுத்துகிறேன்" என கோபாவேசத்துடன் பாய எத்தனித்தது.

நான் எவ்வித ஆணவமும் கொண்டுவரவில்லை. என் இனத்தாருக்கு நேர்ந்த கொடுமைகளை எடுத்துக் கூறவே வந்தேன். நான் ஏற்கனவே கூறியது போல் என் உயிர் எனக்கு லட்சியமில்லை. என்னைக் கொல்லுவது உன் வீரத்துக்குத் தகுதியானால் நீ தாராளமாகக் கொன்றுவிடலாம். என் இனத்தாருக்கு என் உயிரை அர்ப்பணஞ் செய்யும் பாக்கியத்தையே நான் என்றும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

சிங்கத்திற்கு எவ்வளவு ஆவேசம் வந்த போதிலும் அந்த எலியைக் கொல்லத் துணியவில்லை. ஏனெனில் இதற்கு முன் தன் உயிரைப் பாதுகாத்த பெரும் நன்றி அதன் மனதை வாட்டியது.

"சரி, கிடக்கட்டும். இப்போது எங்கு வந்தாய்?

நான் ஏற்கனவே கூறிவிட்டேன் என் இனத்தாரை இவ்விதம் இம்சிக்கலாமா?

அதைக் கேட்க நீ யார்? நான் மிருக ராஜன் என்பதை அறியாயோ! எச்சரிக்கை! பத்திரம்; மூச்சுவிடாமல் திரும்பிப்போ! உன் மீது இரக்கங் கொண்டு உன் உயிரை வாங்கவில்லை.

நல்லது. என் உயிரை வாங்காதது பற்றி எனக்குக் கவலையேயொழிய ஆனந்தமில்லை. ஆனால், மிருகராஜனே எச்சரிக்கை! நீ செய்த அடாதகாரியத்தை "நான் மன்னிக்க முடியும்! ஆனால் என் உயிருள்ளளவும் நீ அதை மறக்க முடியாது!!" என்று எலி கூறிவிட்டுத் திரும்பிவிட்டது.

உடனே சுண்டெலி தன் இனத்தாரையெல்லாம் திரட்டி சிங்கத்தைப் பழிவாங்கத் துணிந்தது. சிங்கத்திற்கு வேட்டை அகப்படாமல் அதைப்பட்டினி போட்டு வதைக்க "சாத்வீக எதிர்ப்பை" ஆரம்பித்தது. பல எலிகள் சிங்கம் வரும் பாதையை நோக்கி அதற்கு எதிராக




வரும் மிருகங்களுக்கு சிங்கத்தின் வருகையைப் பற்றி எச்சரித்து விடும். மிருகங்கள்தப்பி உயிர் பிழைத்தோடின. இவ்விதமாக அந்தக் காட்டிலுள்ள ஒரு பாவமும் அறியாத மிருகங்களெல்லாம் ஒன்று சேர்ந்து சிங்கத்தின் ஆணவத்தை அடக்கி சுதந்திரமாக ஜீவிக்க முயற்சித்தன. சுண்டெலிகளின் தீவிர மறியலால் சிங்கத்திற்குப் போதிய இரை கிடைக்கவில்லை. பசியால் வாடி மெலிய ஆரம்பித்தது. வர வர சிங்கத்தின் பலமும் குன்றியது. கர்வமும் அடங்கியது. உயிர் பிழைப்பதும் பரம சங்கடத்திலாகி விட்டது. இப்பொழுதான் பழைய சுண்டெலியின் ஞாபகமும், அதன் எச்சரிக்கையும் நினைவுக்கு வந்தது. உடனே தள்ளாடித் தள்ளாடி சுண்டெலியின் வளையைத் தேடிப்போய்ச் சேர்ந்தது. இதைக்கண்ட சுண்டெலி கொஞ்சமும் அச்சமின்றி வெளிவந்து மிருகராஜனை நோக்கியது.

இப்பொழுதாவது உணர்ந்தனையா? என்று கேட்டது.

ஆம்! நீ சொல்லுவது போல் நடக்கத் தயாராக இருக்கிறேன். என் உயிரைப் பாதுகாத்தால் போதுமெனத் தலை வணங்கி எலியின் கோரிக்கைகளுக்கு உடன் பட்டது.

---


V. Subramaniaiyer
JEWELLER
GOLD & SILVER SMITH
POST BOX 423.
TRIPLICANE.MADRAS.


Telephone No. 3145.
Post Box 423:—
Catalogue free on enquiry.
TRIPLICANE, MADRAS.

மறுபடியும் விலையைக் குறைத்து விற்கிறோம்!
கீர்த்தி பெற்ற
**ருக்மணி குக்கர்**
சமையல் அடுக்கு செப்டெம்பர் 1-ந் தேதி முதல் 1, 2, 4, 6, 8, 12, 16 பேர்களுக்குரிய ஏழு அளவுகளும் முறையே ரூ. 10-8, 14, 18, 23, 29, 35, 41 ஆகக் குறைத்து விற்கின்றோம்.
**ருக்மணி குக்கர் கம்பெனி**, இராயபுரம் (1) சென்னைப்பட்டணம்.
விபா புத்தகம் இனம்.

# யுத்த கொலையாளிகள் யார்?

———:o:———

**யு**த்தங்கள் மகாக் கொடுமையான தென்பதை எவரும் மறுக்க முடியாது. சென்ற மகா யுத்தக் கொடுமையை அறிந்தவர்களுக்கு யுத்தத்தின் நிஷ்டூரங்களைப் பற்றி அதிகம் எடுத்துக் கூற வேண்டியதில்லை. யுத்தங்களில் கோடிக் கணக்காக உயிர் துறக்கும் யுத்தவீரர்களின் கொலைக்குக் காரணம் யார்? யுத்தஞ் செய்யும் ராணுவ தளகர்த்தர்களும், ராணுவ சோல்ஜர்களும் அவர்கள் கொலையாளிகளல்ல. திரை மறைவிலிருந்து யுத்தத்திற்கான ஏற்பாடுகள் செய்யும் அரசர்களும், ராஜீய தந்திரிகளும் நவீன முறையில் யுத்த ஆயுதங்களைக் கண்டு பிடிப்பவர்களுமே மகாக் கொடிய கொலை பாதகர்களாவார்கள். இந்த உண்மையை எவரும் மறுக்க முடியாதென அமெரிக்காவில் வெளியாகும் "சோஸியாலஜி ஜர்னல்" எழுதி இருக்கிறது. அதில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

யுத்தங்களில் உபயோகிக்கும் கொடிய இயந்திரங்களைக் கண்டு பிடிப்பவர்கள் ராணுவ உத்தியோகஸ்தர்களல்ல. அவைகளைக் கண்டு பிடிப்பவர்கள் யுத்தங்களில் சம்பந்தப்படாத சாதாரண ரசாயன நிபுணர்களும், பொதுவாக வேறு வேலைகள் செய்து வருபவர்களுமே யாவர். நவீன ஆயுதங்களைக் கண்டு பிடித்திருப்பவர்களை அது முதல் கவனித்து வந்தால் இவ்வுண்மை வெளியாகும்.

1841ம் வருடம் நவீனமான யுத்த கப்பலை ஜான் எரிஸன் கண்டு பிடித்தார். இவர் கப்பற் படை உத்தியோகஸ்தரல்ல. கப்பல்களில் இயந்திரங்களையும், பாய்லர்களையும் ஜல மட்டத்திற்குக் கீழ் வைக்கும் முறையை இவரே ஆதியில் கண்டு பிடித்தார்.

இயந்திர பீரங்கிகளைக் கண்டு பிடித்தவர் ஹிராம் மாக்ஸிம். இவர் ராணுவ உத்தியோகஸ்தரல்ல.

'கேட்லிங்' என்னும் புது மாதிரியான பீரங்கி இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர் ராணுவ உத்தியோகஸ்தரல்ல. அவர் கண்டு பிடித்த இயந்திரத்திற்குத் தமது பெயரையே வைத்தார். இவர் சாதாரண தோட்ட முதலாளியே யாவர்.

"கோல்ட்" என்னும் நவீன துப்பாக்கியைக் கண்டு பிடித்த ஸ்ரீ கோல்ட், ஒரு அமெரிக்காவர். இவர் ராணுவத்தில் சம்பந்தப்பட்டவரல்லர். இவரது தந்தையின் துணி மில்லில் வேலைசெய்து வந்தபோது துப்பாக்கி செய்யக் கண்டு பிடித்து அதற்குத் தமது பெயரிட்டனர்.

அக் காலத்தில் 'ஊசித் துப்பாக்கி' என ஒரு நவீன துப்பாக்கியைக் கண்டு பிடித்தவர் ஒரு ஜெர்மன் கொல்லர். இவருக்கு இரும்புத் தொழில் வியாபாரம். இவர் கண்டு பிடித்த துப்பாக்கியை பிராஸ்கோ ஜெர்மன் யுத்தித்தில் அதிகமாகப் பிரயோகித்தார்கள். இந்த ஆயுதத்தால் மாண்ட உயிர்களுக்குக் கணக்கே கிடையாது.

சென்ற மகா யுத்தத்தில் சொல்லொண்ணு அட்டகாசம் புரிந்து வந்த நீர் மூழ்கிக் கப்பலைக் கண்டு பிடித்தவர்கள், ஸ்ரீமான்கள் புல்டன், புஷ்னெல், ஹாலண்டு, வேக் முதலியோராவர். இவர்களிடம் எவரும் ராணுவத்தையோ, கப்பற்படையையோ சார்ந்தவர்களல்ல.



அக் காலத்தில் இவ்வித கொடிய ஆயுதங்களைக் கண்டு பிடிப்பதை எந்தத் தேச சர்க்காரும் ஆதரித்தது கிடையாது. அதை மகாப் பாதகமாகவும், யுத்த சட்ட நீதிகளுக்கு மாறுபட்டதாகவும் கருதி வந்தார்கள். உடனே உபயோகத்திற்குக் கொண்டு வரவில்லை. எத்தனையோ வருடங்களுக்குப் பின்னரே இந்த ஆயுதங்களை யுத்தங்களில் பிரயோகிக்க ஆரம்பித்தார்கள். உதாரணமாக, 1777ம் வருடத்திலேயே நீர் மூழ்கிக் கப்பல் செய்யும் முறையை டேவிட் புஷ்னெல் கண்டு பிடித்தார். ஆனால், அவரது நவீன முறையை சர்க்கார் கவனிக்கவுமில்லை; அதை ஆதரிக்கவும் முற்படவில்லை. இவரிடமுள்ள ஆஸ்திகளை யெல்லாம் இவ்வித நீர் மூழ்கிக் கப்பலொன்று செய்வதிலேயே செலவிட்டார். சர்க்கார் இதை ஆதரிக்காததால் இவர் அமெரிக்கா சர்க்காருக்குத் தமது திறமையைக் காட்ட ஒரு பிரிட்டிஷ் கப்பலை சமித்திரதில் உடைத்து நீரில் மூழ்கடிக்கச் செய்து காட்டினார்.

1814ம் வருடம் புல்டனும் நீர் மூழ்கிக் கப்பல் செய்யும் முறையைக் கண்டு பிடித்தார். இவரையும் பிரிட்டிஷ் சர்க்கார் ஆதரித்தார்களில்லை. ஆகவே இவர் நீராவிக் கப்பலைக் கண்டு பிடித்து, "டெமலாக்ஸ்" என்னும் முதல் நீராவிக் கப்பலைச் செய்து செய்து முடித்தார். ஆனால் சர்க்கார் இந்தக் கப்பலை உபயோகித்ததாகத் தெரியவில்லை.

ராபர்ட், எல். ஸ்டீவென்ஸ் என்பவர் சுமார் 20 லக்ஷம் பொன் செலவு செய்து முழுவதும் இரும்பு மூடி போட்ட பெரிய யுத்தக் கப்பலொன்றை செய்து முடிக்க ஏற்பாடு செய்தார். ஆனால், கடற்படையில் பலவித மாறுதல்கள் செய்து கொண்டே இருந்ததால் இவர் செலவு செய்து ஏராளமான பொருளும் வீண் விரயமானது.

இதற்குப் பின் சுமார் 20 வருடங்கள் கழித்து ஸ்ரீ ஜான் எரிசஸன் 'மானிட்டர்' என்னும் பெரிய யுத்தக் கப்பலொன்றை செய்து முடித்தார். இதற்குப் பின்னரே சர்க்கார் ஸ்ரீ ராபர்ட் ஸ்டீவன்ஸ் முயற்சியைத் தெரிந்து கொண்டனர்.

இதற்கு முன் அதாவது பிரிட்டன் உள்நாட்டு யுத்தங்களிலும், அமெரிக்கா சுதந்திர யுத்தத்திலும் துப்பாக்கியினுள் குண்டுகள் போட்டு கெட்டித்தே சுட்டு வந்தார்கள். அதற்குப் பின்னரே துப்பாக்கிகளைக் கெட்டிக்காமல் துப்பாக்கிக் குண்டு வைத்துச் சுடும் (காட்ரிஜ்) முறையைக் கண்டு பிடித்தார்கள். அதன் பின் படிப்படியாய் ரசாயன நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கும் யுத்த தளவாடங்களுக்கு ஓர் எல்லையில்லை. அவற்றை மனதாலும் சிந்திக்க முடியாது.

———


**ஹெர்பல் க்ளிசரைன்.**

இது மூளையின் உஷ்ணத்தை தணிக்கும் மயக்கத்தைப் போக்கி கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். கூந்தல் உதிர் தலை நிறுத்தி மயிரைக் கருப்பாக்கி வளர்க்கும்.




தலைமயிரைப் பட்டு போல் பளபளப்பாகச் செய்யும். சுண்டு, சொரி, சொட்டை இவைகளைப் போக்கி இள நரைப்பு இல்லாமல் காப்பாற்றும். நரம்பு களுக்கு வலுவைத் தரும்.


ஒரு தடவை உபயோகித்துப் பார்த்தால் இதன் குணம் பிரத்தியட்சமாய் காணலாம்.

4, 6, 8, அவுன்ஸ் புட்டி
ஒன்றுக்கு விலை அணா. 8, 11, 14.

ஏஜெண்டுகள் தேவை.

விலாசம்:—

**எம். எஸ். மெடிகல் ஹால்,**
**159, பிராட்வே, மதராஸ்.**
தபால் பெட்டி 132.




## சமுத்திரங்களில் போட்டி.

:o:

தரையில் வசிப்பனவற்றுள் யானையே அதிகம் பெரியதெனக் கூறுவர். ஆனால், பூமியில் தரை மூன்றில் ஒரு பங்கேயாகும். சமுத்திரங்களோ மூன்றில் இருபங்காகின்றன. இந்த சமுத்திரங்களில் யானையையும் விட எத்தனையோ மடங்கு பெரிய மச்சங்கள் ஜீவிக்கின்றன. சமுத்திரங்களில் வாழ்வனவற்றுள் திமிங்கிலமே மகாப் பெரியது. இவைகளில் ஓங்கி வளர்ந்த திமிங்கிலங்கள் 600, 700 அடி நீள மிருப்பதாகக் கூறுகிறார்கள். இத்திமிங்கிலங்கள் தங்கள் வால்களை சுழற்றி அடிக்குமேயானால் பெரிய கப்பல்களும் ஆகாயத்தில் பறக்க வேண்டியது தான். திமிங்கிலங்கள் வாழும் சமுத்திரங்களில் திமிங்கில வேட்டைக்குச் செல்லுவதா யிருந்தால் அதற்கென தனிக் கப்பல்கள் பல கொண்டு செல்லுவது வழக்கம். திமிங்கில வேட்டையும் மகாப் பயங்கரமானது. இவ்வேட்டைக்குச் செல்லுவோர் தங்கள் உயிர்களை வெறுத்தே செல்லவேண்டு மெனக் கூறுகிறார்கள். இவ்விதம் சமுத்திரங்களில் ராஜாதி ராஜனாக விளங்கும் திமிங்கிலங்களுக்கும் கடவுள் அழிவு காலத்தை உண்டு பண்ணாம லில்லை. மேனாட்டினர் இவற்றின் உபயோகத்தை நன்கறிந்து இவைகளை வேட்டையாடி வருகின்றனர். திமிங்கில வேட்டையும் அதிகரித்தே வருகிறது.

### திமிங்கில சத்துரு.

சமுத்திரங்களில் திமிங்கிலங்களை எதிர்த்துக் கொல்லக் கூடிய வேறு பெரிய மச்சங்கள் கிடையாதென்றே சொல்லலாம். ஆகையால், அவைகள் சமுத்திரங்களில் ஏகாதி பத்தியஞ் செய்து வருகின்றன. எனினும் கடவுள் அத்திமிங்கிலங்களுக்கு சமுத்திரங்களிலேயே சிறு சத்துருக்களை உண்டு பண்ணி யிருக்கிறார். திமிங்கிலங்களுக்கு பிராண சத்துரு ஆமைகள் என்றால் எவருக்கும் ஆச்சரியமாக விருக்கலாம். சிறிய ஆமைகள் எவ்வாறு பெரிய திமிங்கிலங்களைக் கொல்லக் கூடுமென்ற சந்தேகம் பிறக்கலாம். அவ்வித சந்தேகத்துக்கு இடங்கொடுக்க வேண்டாம். திமிங்கிலங்கள் சமுத்திரங்களில் ஒரு மீனைக் குறிப்பாகக் குறிபார்த்து விரட்டி வேட்டையாடுவது கிடையாது. அவைகளுக்குப் பசி வந்து விட்டால் தங்கள் வாலை சுழற்றி யடித்து சமுத்திரங்களில் படை படையாக வரும் மீன்களைத் திரட்டிப் பெரிய வாயைத் திறந்து அப்படை மீன்களை ஜலத்தோடு விழுங்கும். இந்நேரத்தில் திமிங்கிலங்களின் வாய் வழியாக வழிந்தோடும் ஜலத்துடன் லக்ஷக்கணக்கான மீன்கள் உயிர் தப்பி யோடும். அதெல்லாம் திமிங்கிலங்களுக்கு அவ்வளவு பொருட்டல்ல. ஆயிரம் கவளத்தில் ஒரு கவளம் தப்பி விட்டால் அதற்காகத் இத்திமிங்லங்கள் கவலைப்படுவது கிடையாது. வயிறு நிறைந்ததும் இவைகள் அதற்குமேல் எந்த மீன்களுக்கும் உபத்திரவம் செய்யாமல் ஒதுங்கி விடுவது வழக்கம். இவ்வாறு ஒரு திமிங்கிலம் இரை உட்கொள்ளும் பொழுது தான் அதன் உயிருக்கு ஆபத்து நேரிடுகிறது. இவ்வாறு திரள் திரளாய் லக்ஷக்கணக்கான மீன்களைத் தின்னும் போது தப்பித்தவறி ஏதேனும் சிறு ஆமைக்குட்டிகள் மீன்களுடன் திமிங்கில வயிற்றினுள் அதை அறியாமலே போய்விடுகிறது. இந்த ஆமைக்குட்டி திமிங்கில வயிற்றினுள் சென்றதும், அங்கு அதற்கு நீந்தி திரிவதற்கும், இரை தேடுவதற்கும் நல்ல வசதிக விருக்கின்றன. திமிங்கில வயிற்றினுள் இரை தேடுவதற்கு சிறு மீன்களிருக்கின்றன. அவற்றைப் பிடித்துத் தின்று வளரும் திமிங்கில வயிற்றினுள் இருக்கும் இரையை ஜீரணிக்கச் செய்யத் திமிங்கில குடல் சுருங்கி விரியும் சமயங்களில் ஆமை தன் கால்களையும் தலையையும் தன்னுள் இழுத்துக் கொள்ளுகிறது. ஆமையோடு அதிக உரமானது. அதை ஜீரணிக்கச் செய்ய திமிங்கிலத்திற்குச் சக்தி கிடையாது. இவ்வாறு திமிங்கில வயிற்றினுள்ளிருந்தே ஆமைக்குட்டி வளர்ந்து பெரியதாகி விடுகிறது.

### திமிங்கிலத்திற்கு ஆபத்து.

இக்காலத்தில் தான் திமிங்கிலத்தின் உயிருக்கு ஆபத்து நேரிடுகிறது. ஆமை திமிங்கிலத்தின் வயிற்றினுள்ளிருந்து வெளியேற விரும்பி திமிங்கிலத்தின் வயிற்றைக் கடிக்கும். திமிங்கிலத்தின் வயிற்றின் கீழ்பாகம் அதிக மெல்லியதானது. ஆமை கடிக்கும் வேதனை பொறுக்க மாட்டாமல் திமிங்கிலம் அங்கு மிங்கும் ஓடி அட்டகாசம் செய்ய ஆரம்பிக்கும். சமுத்திரமே அல்லாகோலம் கொண்டு விடும். இக்காலத்தில் திமிங்கிலத்தின் எதிரே வரும் கப்பல்களுக்குப் பெரும் ஆபத்து என்பதற்குச் சந்தேகமில்லை. வயிற்றினுள்ளிருந்து கடித்துக் கொண்டிருக்கும் ஆமை படிப்படியாய் கடித்துத் தான் வெளியே வரக் கூடிய துவாரம் செய்து வெளிவந்து தப்பித்து ஓடி விடுகிறது. திமிங்கிலத்தின் கதி அதோகதி தான். அவை உயிரழிந்து செத்து சமுத்திரத்திலேயே பெரிய குன்று மிதப்பதுபோல மிதந்து விடுகிறது. சமுத்திரங்களில் திமிங்கிலங்கள் இயற்கையாக மடிந்து மிதப்பதற்கு இது ஒரு காரணமாகும்.

### திமிங்கில உபயோகம்.

பிரமாண்டமான மிருகமாகிய திமிங்கிலங்கள் மனிதருக்குப் பலவகைகளில் அதிக உபயோகப்படுகிறது. "யானை இருந்தாலும் 1000 பொன், இறந்தாலும் 1000 பொன்" என்பது உலகச் சொல். யானையை விடப் பன் மடங்கு பெரிதான ஒரு திமிங்கிலத்தால் மனிதருக்கு எத்தனை பொன் லாபம் என்பதை சொல்லாமலே அறிந்து கொள்ளலாம். திமிங்கிலத்திலிருந்து ஒருவகை எண்ணெய் எடுத்து அதைக் கப்பல்களுக்கும் பெரிய இஞ்சின்களுக்கும் உபயோகித்து வருகிறார்கள். அதன் எலும்புகளோ பொத்தான் முதலிய பலவகையான எலும்புச் சாமான்கள் செய்ய உபயோகப் படுகிறது. ஒரு திமிங்கிலத்தில் டன்கள் கணக்காக மாமிசமும் எலும்புகளு மிருக்கின்றன.

### மாமிச உபயோகம்.

இது வரையில் திமிங்கிலத்தின் மாமிசத்தை உபயோகித்தது கிடையாது. அது துற்நாற்ற முடையதெனக் கருதி ஒருவரும் சாப்பிட விரும்பவில்லை. ஆனால், அந்த மாமிசத்திலுள்ள துற்நாற்றத்தைப் போக்கவும், அதை மனிதர் சாப்பிடக்கூடிய பிரியமான உணவாக்கும் முறையை ஒரு ஜெர்மன் ரசாயன நிபுணர் கண்டு பிடித்திருக்கிறார். இதனால், திமிங்கிலத்தின் மாமிசத்திற்கே அதிகக் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. இனிமேல் இதை விடப் பன்மடங்காக ஜீவிக்க ஏற்படக் கூடுமெனக் கூறுகிறார்கள். தற்போது மேனாடுகளில் சிறு மீன்களைப் பக்குவப் படுத்தி டின்களில் அடைத்து ஏராளமாக வெளி தேசங்களுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார்கள். இதனால் ஐரோப்பிய நாடுகளுக்குப் பெரும் லாபம் கிடைத்து வருகிறது. இதே போல் மாட்டு மாமிசம் முதலியவைகளையும் பக்குவப் படுத்தி ஏற்றுமதி செய்து வருகிறார்கள். இனிமேல் திமிங்கில மாமிசத்தையும் மேற்கூறியவாறு ஏராளமாக டின்களில் அடைத்து ஏற்றுமதி செய்வார்களென்பதற்குச் சந்தேகமில்லை. சமுத்திரங்களில் முடி சூடாமன்னர்களாக விளங்கும் திமிங்கிலங்கள் இனிமேல் சிறு மீன்களைப்போல் சிறு டின்களில் அடைக்கப் பட்டு வெளிதேசங்களுக்கு அனுப்பப்படும்.

இவ்வளவு பெரிய திமிங்கிலங்களுக்கும், சிறு மீன்களுக்கு முள்ள வித்தியாசம் யாதெனில், பல சிறுமீன்களை அடைக்க ஒருடின் தேவைப்படும். ஆனால் ஒரு திமிங்கிலத்தை அடைத்துப் பந்தோபஸ்து செய்ய லக்ஷக்கணக்கான டின்கள் தேவைப்படும்!

## திமிங்கில வியாபாரம்.

திமிங்கில வியாபாரம் வரவர அதிகரித்துக் கொண்டு வருகிறது. இதைப் பற்றி ஆராய ஏற்பட்ட நிபுணர்கள் இத்தொழில் 300 மடங்கு அதிகரித்திருப்பதாகக் கூறுகிறார்கள். சில வருடங்களில் இத்தொழில் இவ்வளவு துரிதமாக அபிவிருத்தி யடைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. 1919—1920 வருடத்தில் சுமார் 407000 பாரல் திமிங்கில எண்ணெய் எடுத்தார்கள். அதாவது 400 ருத்தல் எண்ணெயாகும். 1924—25-ம் வருடத்தில் இத்தொகை 1040000 பாருலுக்கு அதிகரித்துவிட்டது. 1925—26ம் வருடம் இது 1152000க்கும், 1926—27ம் வருடத்தில் 1176000க்கும், 1928—29ம் வருடத்தில் 1319000 பாரலுக்கும் அதிகரித்து விட்டது. சென்ற வருடத்தில் இத்தொகை இன்னமும் அதிகரித்திருக்கக் கூடுமெனவே தெரிகிறது.

## திமிங்கில மந்தை.

பூமியின் தென் கோடியிலுள்ள கடல்களில் ஏராளமான திமிங்கிலங்க ளிருப்பதாக இதைப் பற்றி ஆராயச் சென்ற பிரிட்டிஷ் நிபுணர்கள் கூறுகிறார்கள். இதற்கென "டிஸ்கவரி" என்னும் தனிக் கப்பலை பிரிட்டன் ஒதுக்கி வைத்திருக்கிறது. இக் கப்பல் சமீபத்தில் தான் தென் கோடிக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறது. திமிங்கிலங்களை வளர்த்துப் பாதுகாப்பதற்கு, அதன் இரை, குணாதிசயங்கள் முதலியவைகளைக் கவனித்துவர அக் கப்பலில் பல நிபுணர்களும் சென்றிருக்கிறார்கள். இதுவரையில் திமிங்கில எண்ணெயை சோப் செய்வதற்கும், இஞ்ஜின்களுக்கும் உபயோகித்து வந்தார்கள். இனிமேல் திமிங்கில மாமிசத்தை தீனியாக உபயோகிக்க ஆரம்பிப்பார்களே யானால் இனிமேல் அதன் எண்ணெயை மேற்கூறியவாறு உபயோகிக்க மாட்டார்க ளென்பது நிச்சயம். ஆகவே இதற்காக திமிங்கிலங்களை வளர்ப்பதற்கு யோசனை செய்து வருகிறார்கள். சமுத்திரங்களில் ஆயிரங்கணக்கான மைல் விஸ்தீரணத்தில் திமிங்கில மந்தைகள் ஏற்பாடு செய்ய பெரும் போட்டி உண்டாகு மென்பதற்கு அணுவளவும் சந்தேக மில்லை. திமிங்கிலங்களை ஆட்டு மந்தைகளைப் போல் வளர்த்துப் பாதுகாக்க பிரிட்டன் இப்பொழுதே ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்திருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் செய்ய தீவிரமாக வேலைசெய்து வருகிறார்கள்.

---


மூலம்

மூன்றே நாட்களில் சோஸ்தம்

ரத்தம் வடிந்தாலும் அல்லது வடியாவிட்டாலும் நாள் பட்டதானாலும் அல்லது புதிதாக சம்பவித்திருந்தாலும் எவ்வளவு அபாய கரமானதாக விருந்தாலும் இம் மருந்தை உபயோகித்த மூன்றே நாட்களில் ஆச்சரியகரமானபடி சொஸ்தமாகின்றது. சொஸ்தமாகாவிடில் நான்கு பங்கு பணம் வாபீஸ். புட்டி விலை ரூபா 2.


செவிடு

நமது "பைரோடிப்பான்" தைலத்தை உபயோகித்து வந்தால் உங்கள் காதைப் பற்றிய சகல வியாதிகளும் பறந்து போகும். ஆயிரக்கணக்கானவர்களை சொஸ்தம் செய்துள்ளது. நமது மருந்து பிரயோஜன மில்லாவிடில் பணம் வாபீஸ்.

விலை ரூ. 2—0—0

"கடிதங்கள் யாவும் இங்கிலீஷிலேயே எழுத வேண்டும்."

SAKTI SUDHA KARYALAYAM
4th Kumbharwada, Bombay, No 4.

# மீன்களிடமிருந்து மனிதர்.

காலத்தின் கோலத்தை எவரே, அளவிட்டுக் கூற முடியும்? காலச்சக்கிரம் சுழன்றுக் கொண்டே போகிறது. மனிதரின் போக்கும் காலத்திற்குத் தக்கபடி மாறிக் கொண்டே போகிறது. நமது கண் முன்னிலையிலேயே எத்தனையோ அதிசயங்களைக் காண்கிறோம். நாம் கனவிலும் நினைத்தறியாத அற்புதங்களைக் கேட்டு வருகிறோம். ரசாயன அபிவிருத்தியின் போக்கே இதற்குக் காரணமாகும். உதாரணமாக மனிதனையே சிருஷ்டிக்க ரசாயன நிபுணர்கள் முயன்று வருகிறார்கள். அமெரிக்காவில் சிக்காக்கோ நகரத்தில் ஒரு ரசாயன நிபுணர் மனிதனை சிருஷ்டித்து உயிர் கொடுக்க முயற்சித்து வருகிறாராம்! மனிதர் எதிலிருந்து தோன்றினா ரென்பது நெடுங்கால விவாதமாகும். மனிதர் குரங்கிலிருந்துவந்தனரெனதார்வின் என்பவர் அக்காலத்தில் ஒரு விவாதத்தைக் கிளப்பினார். வேறு பலர் அதை மறுத்துக் கூறினார்கள். ஆனால் பேர்பெற்ற பண்டிதரான ஸ்ரீ. எச். ஜி. வெல்ஸ் மனிதர் அணுவிலுள்ள உயிரிலிருந்து புழுவாகி, புழு மச்சமாகவும், பாம்பாகவும் மாறி, கடலை விட்டுத் தரைக்கு வந்து உருமாறி குரங்காகவும் அதன் பின் மனிதக் குரங்காகவும் மாறி, பின்னர் மனித ரூபம் கொண்டதாகவும் கூறுகிறார். மனிதர் எதிலிருந்து தோன்றினா ரென்பதை இன்னும் எவரும் கண்டு பிடிக்கவில்லை. நமது உயிரின் இரகசிய மென்ன வென்பதை இன்னும் ஒருவரும் அறியவில்லை. ஆனால் ரசாயன ஆராய்ச்சியாளர் இந்த ரகசியத்தையும் சீக்கிரத்தில் கண்டு பிடித்து விடுவார்களென்றே நம்பவேண்டி இருக்கிறது.

ரசாயன முறையால் மனிதனை சிருஷ்டித்து அதற்கு உயிர்கொடுக்க முடியுமென எவரும் நம்பமாட்டார்கள். மனிதன் எலும்பும் தோலும் ரோமமும் ரசாயன முறையின் சேர்க்கையால் செய்யக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதற்கு உயிர் கொடுப்பதே இப்போதைய முயற்சியா யிருந்து வருகிறது. இவ்விதம் உயிர் கொடுப்பதும் சாத்யமே என பல ரசாயன நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். அதற்காக அவர்கள் பகீரதப் பிரயத்தனங்கள் செய்து வருவதும் குறிப்பிடத் தக்கது. இவர்கள் ரசாயன முறையால் எந்தெந்த விஷயங்களில் வெற்றி பெற்றிருக்கிறார்க ளென்பதை ஒருவாறு ஆராய்வோம்.

பெண்கள் குழந்தைகளைப் பெற்றெடுப்பது இயற்கையே. இதில் தங்கள் இஷ்டம் போல் மக்களைப் பெற்றெடுக்கும் முறையைக் கண்டு பிடித்திருப்பது தான் வேடிக்கை. ஒரு பொருள் எதிலிருந்து உண்டாகிற தென்பதைக் கண்டு பிடித்தால், அவ்வித பொருளை சிருஷ்டிப்பதும் பெரிய காரியமில்லை. ஒரு கோழி முட்டையின் கருவை இரு பிரிவாய் பிரித்து, இரட்டைக் குஞ்சு

பொரிக்கும்படி செய்திருக்கிறார்கள். இதே போல் மனிதரது கருவையும் இரண்டாகப் பிரித்து இரட்டைக் குழந்தைகளைக் கர்ப்பந் தரிக்கச் செய்ய முடியுமாம்!

மனிதர் பொதுவாக 70 முதல் 80 வயது மட்டும் வீரமாகவும், நல்ல தேக சௌக்ய முடையவர்களாகவும் ஜீவிக்க முடியும். இவ்விதம் ஜீவிப்பதற்கு இளமைப் பருவத்திலிருந்தே நமது தேக பலத்தை விருத்தி செய்திருக்க வேண்டும். சிறு வயதில் ஏற்படும் தேகப் பயிற்சியே பொதுவாக வயது முதிர்ந்த காலத்தும் மனிதருக்குப் பக்கப்லமா யிருக்கிறது. மரணத்துக்குப் பின் மனிதர் ஜீவியம் என்ன வென்பதை அறியத் தற்காலத்தவர் யாவரும் அதிக ஆவலுடன் எதிர் பார்ப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. நமது சடலத்தை விட்டு உயிர் பிறிந்ததும் அந்த உயிர் எந்த நிலைமை அடைகிறது. அவ்வுயிரின் கதி என்னவென்பதைப் பற்றி இதுவரையில் எவரும் உறுதியாக ஏதுவும் கண்டு பிடிக்க வில்லை. பற்பலர் பற்பல விதமாகத் தங்களுக்குத் தோன்றியதை எழுதி வைத்திருக்கிறார்கள். நமது சடலம் மறித்ததும் அத்துடன் உயிர் அழிந்து விடுவதாகக் கூறுவதற்கில்லை. உயிர் சாகாமல் தொடர்ந்து மற்ற உயிர்களுடன் சம்பந்தப்பட்டே இருக்க வேண்டி இருக்கிறது. பூமியிலுள்ள நதிகளெல்லாம் இயற்கையாகவே கடலைத் தேடி ஓடி அடைவது போல் இந்த உயிர்களும், உயிர்களைத் தேடியோடி அடைகின்றன. ஒன்றின் பின் ஒன்றாய் அந்த உயிர்கள் பல பொருள்களைத் தேடி அடைந்துக் கொண்டே இருக்கும். இதையே மறு பிறப்பிற்கு ஆதாரமாகக் கூறுகிறார்கள்.



கலாராம் போலீஸ்.

மனிதர் மீன்களிடமாய் உற்பத்தியாயினர் என்பதைக் காட்டும் பொருட்டு ஸ்ரீ வெல்ஸ் எழுதி இருக்கும் புஸ்தகத்தில் பலவித படங்கள் பதிப்பித்திருக்கிறார். மீன்கள் கடலிலிருந்து நீந்தி கரைக்கு வருவது போலும், கரைக்கு வந்ததும் அவை பாம்புகளாக மாறுவது போன்றும், அதன் பின் அப்பாம்புகள் பலவித சிறு பிராணிகளாக உருமாறி குரங்காக மாறிய பின் மரத்திலேறி மனிதக் குரங்குகளாக மாறி விடுகிறது. அதன் பின் காட்டு மனிதராகவும் பின்னர் நாகரிகமான மனிதர்களாக மாறுவதாகவும் அப்படங்கள் குறிக்கின்றன. அதாவது மனிதர் சிறு மச்சங்களாக சமுத்திரங்களில் நீந்தித் திரிந்து கரைக்கு வந்து மிருகங்களாக ஜீவித்துக் குரங்காக மாறி அதன் பின் மனிதராக மாறுகிறார்கள் என்பதைக் குறிக்கவே அப் படங்களைப் பிரசுரித்திருக்கிறார் எனத் தெரிகிறது.



மனிதர் குரங்குகளிலிருந்து உற்பத்தியானார்களென்பது தவறு. ஆதியில் மனிதர் சமுத்திரங்களில் சிறு மச்சங்களாகவேயிருந்திருக்கவேண்டும். மீன்களிலிருந்து இன்னம் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். இம்மீன்கள் குரங்குகளாக மாறுவதற்குக் கோடிக் கணக்கான வருடங்கள் ஆகியிருக்கக்கூடும். ஆனால் வேறு பல ரசாயன சாஸ்திரிகள் கூறுவதையும் இச்சந்தர்ப்பத்தில் கவனிக்க வேண்டியது அவசியமாகும். அதாவது, ஆயிரங்கோடி வருடங்களுக்கு முன் மனிதர்கள் அணுவில் அடங்கி இருக்கும் உயிர்களாகவே யிருந்தார்கள். அவ்வுயிர் புழுக்களாக மாறி இருக்கலாம். சுமார் 300 கோடி வருடங்களுக்கு முன் அவை மீன்களாக மாறி சமுத்திரங்களில் நீந்தித் திரிந்திருக்கும். அதன்பின் மேலே கூறியபடி பல உருக்களாக மாறி மனிதர்களாகி இருக்க வேண்டும். ஆனால் ஆரம்பத்தில் பூமியில் புழுக்கள் எவ்வாறு உண்டாகிறதென்ற கேள்வியை எழுப்பலாம். இயற்கையாயுள்ள அணுவில் உயிர் நிறைந்திருக்கிறது. பூமியைச் சுற்றியுள்ள இதர கிரகங்களின் இரணத்திலும், இதர மாற்றங்களிலும் அணுவிலுள்ள உயிர்கள் புழுக்களாக மாறி இருக்கின்றன. ஆகவே, ஆயிரங் கோடி வருடங்களுக்கு முன் நாம் சிறு பூச்சி புழுக்களாக இருந்திருக்கிறோம். இதிலிருந்து நமது உயிருக்குச் சாவு கிடையாதென்பது உறுதியாகிறது. ஆனால் நமது சடலமே சாகின்றது. உயிர் மாறி மாறி, பல தேகங்கள் எடுக்கின்றன. ஒரு தேகத்திலிருந்து மற்றொரு தேகத்துக்குச்சென்று உயிர் ஜீவித்துக் கொண்டே போகிறது.

எதிர் காலத்தில் மனிதர் ஜீவியம் என்னவென்பதை ஆராய வேண்டியது அவசியமாகும். அதைப் பற்றி ஆலோசிக்கும்பொழுது பெரும் மனக்கலக்கமே ஏற்படுகிறது. மனிதரின் எதிர்காலம் மகா ஆபத்தாக முடியக் கூடுமென்றே கருதவேண்டி இருக்கிறது. மனிதரின் நாகரீகப் போக்கும், ரசாயன அபிவிருத்தியும், ரசாயன ஆராய்ச்சியில் நவீனமான விஷயங்களைக் கண்டு பிடிப்பதுமே இவ்வித ஆபத்துக்குக் காரணமாகும். மனிதர் ஜீவியத்தில் பெறும் மாற்றங்கள் ஏற்படப் போகிற தென்பதற்குச் சந்தேக மில்லை. ஆனால் அவ்வித மாற்றங்கள் மனிதவர்க்கத்தைப் பெரும் சீர் கேட்டில் கொண்டு வந்து விடுமோ வென்று பயப்பட வேண்டி யிருக்கிறது. மனிதர் ஜீவியத்தை அதிகரிக்கத் தக்க மார்க்கத்தை இன்னமும் ஒரு ரசாயன நிபுணரும் கண்டு பிடிக்கவில்லை. அது அவர்களுக்குப் பரம ரகசியமாகவே இருக்கிறது. அரசியல், சமுதாயம், பொருளாதாரம் முதலிய விஷயங்களில் மனிதர் எவ்வளவோ முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள். ஆனால், இவ்வித முன்னேற்ற மடைந்திருப்பவர்களெல்லாம், மனிதரில் படித்த வகுப்பினரே என்பதற்குச் சந்தேகமில்லை. இதர வகுப்பினர் இவ்விஷயத்தில் போதுமானபடி முன்னேற்ற மடையவில்லை. உலகில் தோன்றியிருக்கும் பல சிறந்த முன்னேற்றத்துக் குரிய சாதனங்களெல்லாம் கற்றுத் தேர்ந்த சில ஆயிரக்கணக்கானவர்கள் கைவசமே இருக்கின்றன. உலகிலுள்ள இதர பாமர மக்களை இந்த சில ஆயிரக் கணக்கானவர்கள் மேற்கூறிய ஸ்தாபனங்களின் உதவியால் ஆண்டு நடத்தி வருகிறார்கள். மேற்கூறிய பாமரர்கள் 1000 வருடங்களுக்கு முன் எந்த நிலைமையி லிருந்தார்களோ அதே நிலைமையில் தான் இன்னமும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இந்நிலைமையிலிருப்பதே உலகில் தற்போது ஏற்படும் அனர்த்தங்களுக்கெல்லாம் காரணமாகும்.

---

# முத்திரைக் கொலை மாயம்!

———:o:———

அபூர்வமான தபால் முத்திரைகள் சேகரித்து வைப்பது பல இடங்களில் வழக்கமாயிருந்து வருகிறது. இவ்வித முத்திரைகளுக்கு ஏராளமான பொருள் கொடுத்து வருகிறார்கள். சமீபத்தில் ஜெர்மனியில் பெர்லின் நகரத்தில் ஒருவர் ஒரு அபூர்வமான முத்திரை வைத்திருந்தார். அதைப் பெருந் தொகையான பொருளுக்கு விற்கவும் மறுத்து விட்டார். அதை விலைக்குக் கேட்டவர் அந்த முத்திரையை எப்படியாவது கைப்பற்ற வேண்டுமென்ற போராவல். அம் முத்திரையைத் தருந்தவரையும், அவர் குடும்பத்தினரையுமே படுகொலை செய்து முத்திரையைப் பறித்துக் கொண்டு போய் விட்டார். இம் மாயக் கொலை செய்தவரெவரென்பது இன்னமும் மர்மமாகவே இருக்கிறது.

### 10,000 பவுன் முத்திரை.

நல்ல அபூர்வமான ஒரு முத்திரைக்கு 2000 பவுன் கொடுத்து முதலாய் பல முறை வாங்கி இருக்கிறார்கள். இது போன்ற பல பகையான ஸ்டாம்புகள் உலகில் பல பக்கங்களில் இன்னமும் இருந்து வருவதாகத் தெரிகிறது. இவ்வித முத்திரைகளுக்கு 5000 பவுன் முதல் 10000 பவுன் வரையில் கூட விலை கொடுத்து வாங்கத் தயாராக இருக்கிறார்கள்.

### நீக்ரோ மாயக் கொலை.


1910-ம் வருடம் ஆப்ரிக்காவில் கேப் டவுனில் ஒரு நீக்ரோ வேலைக்காரர் உலகிலுள்ள பல அபூர்வமான ஸ்டாம்புகள் சேகரித்து வைத்திருந்தார். ஒரு நாள் இவர் அந்நகரின் வீதி வழியாகப் போய்க்கொண்டிருந்தபோது ஒரு சிறு கடையில் மற்றொரு நீக்ரோ ஒருவர் பலவித ஸ்டாம்புகளைக் கடையில் பார்வைக்காக வைத்திருந்தார். அவைகளில் அக்காலத்தில் மோரிசியஸ் தீவில் விற்று வந்த ஒரு பென்னி அதாவது ஒரு அணு ஸ்டாம்பு ஒன்று இருந்தது. இவ்வித ஸ்டாம்புகள் ஒரு அணுவாக இருந்த போதிலும் அதை ஆயிரக்கணக்கான பொன் கொடுத்து வாங்கப் பலர் தயாராக இருக்கிறார்கள். ஏனெனில் அவ்வித முத்திரைகள் தற்போது உலகில் கிடைப்பது அரிது. உலகிலேயே அவ்வித ஸ்டாம்புகள் 23 தான் இருக்கின்றனவாம். இந்த முத்திரையின் அபூர்வத்தைக் கண்ட அந்த நீக்ரோவர், கடைக்காரரிடம் சென்று அந்த ஒரு மோரிசியஸ் முத்திரையையும் சொற்பத் தொகைக்கு வாங்கினார். அதை ஏராளமான பொருளுக்கு விற்கக் கூடுமென்ற ஆனந்தத்தால் அவர் அந்த முத்திரையையும் இன்னும் பல அபூர்வ முத்திரைகளையும் எடுத்துக் கொண்டு ஒரு ஹோட்டலுக்குச் சென்றார். அங்கு கூடி இருந்தவர்களிடம் தம்மிடமுள்ள பல வகையான முத்திரைகளைக் காட்டினார். சொற்ப நேரத்திற்குப் பின் அவர் தம் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார், ஆனால் வீடு போய்ச் சேரவில்லை. அவர் உறவினர் அவரைத் தேடி வந்த போது ஓரிடத்தில் கத்தியால் குத்துண்டு இறந்து கிடக்கக் கண்டனர். அவரிட



சுலோசனா
சினிமா கன்னி



சொக்கநாத நீர் வீழ்ச்சி, திருவிதாங்கூர்



திருமலை நாயக்கன் மஹால், மதுரை



யானை சண்டை



முள்ள அபூர்வமான முத்திரைகள் மாய மாய் மறைந்து விட்டன. இவரைக் கொலை செய்தது யாரென்பது தெரியவில்லை. ஆனால் சொற்பக் காலத்துக்குப் பின் மேற்கூறிய மோரிசியஸ்தீவு முத்திரையை ஒருவர் விற் பனைக்குக் கொண்டு வந்தபோது அது மாயமாய் மாண்ட நீக்ரோவருக்குச் சொந்த மான முத்திரை யெனவும், அவரே அவ ரைக் கொலை செய்திருக்கக் கூடுமெனவும் சந்தேகித்துக் கைது செய்து தூக்கிலிட்ட னர். இந்த முத்திரையை 4000 பொன் னுக்கு விற்றன ரெனத் தெரிகிறது.

## 4 லக்ஷம் பொன் முத்திரை.


உலகில் பல அற்புதமான முத்திரைகள் சேகரித்து வைத்திருப்பவர் பாரிஸ் நகர வாசியான பாரன். பி. வொன் பொரரி என் னும் பிரஞ்ச் பிரபுவே யாவர். இவர் 1865-ம் வருடத்திலிருந்து இவ்வித முத்திரைகளை சேகரிக்க ஆரம்பித்தார். இம்முத்திரைகளை சேகரிக்க அவருக்கு இதுவரையில் 4 லக்ஷம் செலவாகி இருக்கிற தெனத் தெரிகிறது. இவரிடம் சுமார் 10 லக்ஷம் வகையான ஸ்டாம்புகளிருக்கின்றன. அநேகமாக உல கின் சகல நாடுகளிலும் ஆதிகால முதல் விற்பனை செய்து வந்த பலவிதமான முத்தி ரைகள் இவரிடம் இருக்கிறது. பிரிட்டிஷ் மன்னர் ஜியார்ஜ் சக்கரவர்த்தியும் பலவித மான அபூர்வ முத்திரைகள் சேகரித்து வைத்திருக்கிறார். இம்முத்திரைகள் சேக ரிப்பதற்கென அவர் இதுவரையில் 250000 பொன் செலவிட்டிருக்கிறார். பிரிட்டிஷ் பொருட் காட்சியிலும் பலவிதமான ஸ்டாம் புகள் சேகரித்து வைத்திருக்கிறார்கள். இதற்காக வருஷக்கணக்காக பொருள் செலவிட்டு ஸ்ரீ. டி. கே. டேப்பிலிங் சேக ரம் செய்தார். இவை அவருக்கே சொந்த மாயிருக்க போதிலும் அவர் அதைப் பிரிட்டன் தேசத்துக்கு 40 வருடங்களுக்கு முன்னரே அர்ப்பணஞ் செய்து விட்டார். தற்பொது அது பிரிட்டன் தேச சொத் தாகி விட்டது. உலகில் இரண்டாவதாகக் கூறக் கூடியது பிரிட்டிஷ் பொருட்காட்சியி லுள்ள முத்திரைகளே யாகும். முதன் முதலில் இவ்வித முத்திரைகளைச் சேகரிக்க ஆரம்பித்தவர் பிரிட்டிஷ் டாக்டர் கிரே என் பவரே யாவர். இவர் விக்டோரியா மகா ராணி காலத்தில் விற்று வந்த ஒரு பென்னி முத்திரைகளைக்கூட அக்காலத்தில்சேகரிக்க லாயினர். முத்திரைகள் சம்பந்தமாக சரித் திர ஆராய்ச்சி செய்யும் சங்கங்கள் பல பற் பல நாடுகளிலிருந்து வருகின்றன. இவற் றுள் லண்டனி லிருக்கும் ஒரு சங்கமே அதிக முக்கியமான தாகும்.

உலகில் அற்புதமாகக் கிடைக்கும் முத் திரைகளை பலர் அறியாமையால் குப்பைத் தொட்டிகளில் கிழித்து எறிந்து விடுகிறார் கள். இவ்விதம் குப்பைத் தொட்டியிலிரு ந்து ஒரு ஏழை மாணவர் ஒரு அபூர்வமான முத்திரையைத் தேடி எடுத்தார். அம்முத்தி ரையின் விசேஷம் யாதெனில், அம் முத்தி ரையைப் பதிப்பிக்க ஆரம்பித்த காலத்தில் அதில் சில தவறுகள் இருந்ததே யாகும். இவ்வித ஸ்டாம்புகளுக்கும் கிராக்கி அதி கம் ஏற்பட்டிருக்கிறது. மோரிசியஸ் முத் திரையில் "தபால் ஆபீஸ்" என்ற வார்த் தைகளை மட்டுமே அச்சடித்திருக்கிறார்க ளாம் இதுவே இம்முத்திரையில் காணும் விசேஷமாகும். அதற்குப் பின் அம்முத் திரைகளைத் திருத்தி விலை முதலியவைகளை சேர்த்துக் கொண்டனர். இவ்விதம் தவறு தலாக அச்சடித்தவைகளில் 23 முத்திரை களே தற்போது உலகி லிருக்கின்றன வாம். முத்திரைகளின் விசேஷத்தை அறி யாமல் தினந்தோறும் எத்தனையோ ஜனங் கள் அவற்றைக் கிழித்துக் குப்பைத் தொட்டிகளில் போட்டு வருகிறார்கள்.

# வெள்ளைப் பெண்கள் பிழைக்கும் அதிசயம்.

—:o:—

உலகில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து விட்டது. வேலையில்லாமல் பலர் படும்பாடு பரமசிவன் அறிவார். ஆனால் மேனாடுகளில் பெண்கள் பலவிதத்திலும் அதிசயமான வழிகளில் பிழைத்துக் கொள்ளுகிறார்கள். உதாரணமாக அப்பெண்கள் பிழைக்கும் சில அதிசய வழிகளைப் பற்றி சீமையில் வெளியாகும் பத்திரிகைகள் எழுதி வருகின்றன.



**சிகாகோ நகரிலுள்ள ஸ்டீவன்ஸ் என்னும் ஓட்டல்.**

மனிதர் அணியும் பூட்ஸ்களைத் தற்போது தோலினாலும், ரப்பராலும் செய்து வருகிறார்கள். இவ்வித கைத்தொழில் செய்யும் பெரிய கம்பெனிகள் தங்கள் பூட்ஸ்களின் திறமையை ஜனங்கள் அறிவதற்கும் அதை விளம்பரப் படுத்துவதற்கும் நவீன முறைகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதற்காக சில பெண்களை வேலைக்கமர்த்திக் கொள்ளுகிறார்கள். இப் பெண்கள் அக் கம்பெனியில் செய்யும் பூட்ஸ்களை அணிந்து கொண்டு தினந்தோறும் பல தெருக்கள் சுற்றவேண்டும். ஒரு நாளைக்கு சுமார் 12-மைல் தூரம் நடக்கவேண்டும். இவ்விதமாக அதே பூட்ஸ்களை அணிந்து கொண்டு மறு நாளும் நடக்க வேண்டும். இதனால் அந்த பூட்ஸ்களின் திறமையும் மற்றும் விசேஷங்களும் பிறர் அறிவதோடு அதற்கு நல்ல கிராக்கி ஏற்படுகிறது. கம்பெனிகளுக்கு ஏராளமான லாபம் கிடைப்பதால் அக் கம்பெனிகளில் இப் பெண்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்கிறார்கள். இவ் விதமாக விளம்பரம் செய்து பல பெண்கள் ஜீவியம் நடத்தி வருகிறார்கள்.

◆ ◆ ◆

லண்டனில் ஒரு வெள்ளைப் பெண் கறி பதார்த்தங்களை சுவை பார்த்து ஜீவியம் நடத்தி வருகிறாள். இப் பெண் பல தனவந்தர் வீடுகளுக்குச் சென்று அங்கு சமைத்திருக்கும் கறி பதார்த்தங்களைச் சுவை பார்த்து வர வேண்டும். கறி பதார்த்தங்களில் சேர்க்க வேண்டியது இன்னது அல்லது குறைக்க வேண்டியது இன்னதென சமையற்காரருக்குத் தெரிவிக்கிறாள். இதற்காக இப்



பெண்ணுக்கு நல்ல சம்பளம் கிடைக்கிறது. இவ்விதம் பல தனவந்தர் வீடுகளுக்குச் சென்று இப்பெண் ஏராளமான பொருள் சம்பாதிக்கிறாளெனத் தெரிகிறது.

◆ ◆ ◆

லண்டனில் வேறு சில பெண்கள் இன்னமும் அதிசயமான வழிகளில் பொருள் தேடி வருகிறார்கள். பிரயாணம் போகும் தனவந்தர் வீடுகளுக்குச் சென்று அவர்கள் பிரயாணத்துக்கு வேண்டிய சகல சாமான்களையும் சித்தஞ் செய்ய வேண்டியதே இவர்கள் கடமையாகும். இவர்கள் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தமில்லை. இவர்களுக்கு உதவிக்காகப் பல வேலைக்காரர்களிருப்பார்கள். இப்பெண்கள் அவற்றை மேல் பார்த்து அத்யாவசியமான சாமான்களை மறந்து விடாமல் பத்திரமாகப் பெட்டிகளில் அடுக்கி வைக்கும் முறையைச் சொல்லிக் கொடுக்க வேண்டியதே. இவர்கள் இவ்வேலையில் நல்ல திறமை வாய்ந்தவர்களாக இருக்கிறார்களெனத் தெரிகிறது. ஒரு பெட்டியில் சாமான்களைப் பத்திரமாக அடுக்குவதற்கு இவ்வளவு சம்பளமெனப் பேசிப் பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

◆ ◆ ◆



**நாய்களுக்கு ரோமம் கத்தரிக்கும் வேலை.**

வேறு சிலர் நாய்களுக்கு மயிர் கத்தரிக்கும் வேலை பார்த்து வருகின்றார்கள். இவ் வேலையில் இவர்கள் மகா சமர்த்தர்களாக இருக்கிறார்கள். பொதுவாக நாய் காட்சி ஏற்படும் காலத்தில் இவர்களுக்கு நல்ல வேலை அகப்படுகிறது. நாய்களின் மயிரை வெட்டி அழகாக சிங்காரிக்கிறார்கள். இவ் விதம் கத்தரிக்கப் பட்ட ரோமத்தைக் கொண்டு, விளையாட்டு நாய்ச் சாமான்களுக்கு ரோமம் ஒட்டியும் பொருள் சம்பாதிக்கிறார்கள்.

வேறு சில பெண்கள் வாசனைத்திரவியங்களை முகர்ந்து பார்க்கும் வேலை செய்து வருகிறார்கள். இவர்களுக்கு சகலமான வாசனைத் திரவியங்களிலும் நல்ல அனுபவமுண்டு. பெண்களுக்கும், ஆண்களுக்கும் மனோரம்மியமான விதத்தில் வாசனைத் திரவியங்கள் செய்ய இவர்கள் கம்பெனிகளுக்கு உதவியாயிருக்கிறார்கள். இவர்கள் கூறும் விதத்தில் வாசனைத்திரவியங்கள் செய்து அது மார்க்கட்டில் நல்ல விற்பனையாகுமேயானால் அவ்வாசனைத் திரவியங்கள் செய்யும் கம்பெனியார் இப்பெண்களுக்கு உயர்ந்த சம்பளம் கொடுப்பதோடு, விற்பனையாகும் விலையில் கமிஷனும் கொடுக்கிறார்கள். இவ்விதம் வேலை செய்து பிழைக்கும் பெண்கள் பலர் இங்கிலாந்திலிருக்கிறார்கள்.

◆ ◆ ◆

அமெரிக்காவில் நியூயார்க் நகரில் வேறு சில பெண்கள் நூதன முறையில் பொருள் சம்பாதித்து வருகிறார்கள். இவர்களின் வேலை இதர பெண்களுக்கு உற்சாக மூட்டுவதே யாகும். விதவைகளுக்கும், கவலையிலாழ்ந்திருக்கும் பெண்களுக்கும் இவர்கள் உற்சாக மூட்டவேண்டும். அவர்களிடம் வேடிக்கையான கதைகளையோ இதர விஷயங்களையோ பேசி சந்தோஷமுண்டுபண்ண வேண்டும். இதற்காகத் தனவந்தர்கள் குடும்பங்களில் சம்பளம் கொடுத்து இப் பெண்களை வேலைக் கமர்த்திக் கொள்ளுகிறார்கள். இவர்கள் நிலைமை எப்படி இருந்த போதிலும் சரி இவர்கள் கவலைக்குள்ளாகி இருந்த போதிலும், அதை மறந்து தங்கள் எஜமானிகளுக்குச் சந்தோஷத்தையும், உற்சாகத்தையுமூட்ட வேண்டியதே இவர்கள் கடமை.

மேனாடுகளில் பெரிய கடைகளில் அடிக்கடி திருட்டுப் போவது வழக்கம். பெண்


கள் சாமான்கள் வாங்க வந்து பல சாமான்களைத் திருட்டுத் தனமாக எடுத்து மறைத்துக் கொள்ளுவார்கள். ஆண்கள் இதை அறிந்தபோதிலும் வெட்கத்திற்கு அஞ்சி விட்டுவிடுவது வழக்கம். இதற்காக அப்பெரிய கடைகளில் பெண்கள் ரகசியப் போலீசாரை நியமிக்கிறார்கள். இவர்களும் சாமான்கள் வாங்க வரும் பெண்களைப்போல் நடித்து அங்குவந்திருக்கும் பெண்கள் மீது கண் வைத்துக் கொண்டே இருப்பார்கள். பெண்கள் திருடினால், அல்லது சந்தேகப்பட்ட பெண்களை ஒரு தனி அறைக்கு அழைத்துக் கொண்டுபோய் சோதிப்பது வழக்கம். சிறு சாமான்களைப் பெண்கள் எந்த விடத்தில் மறைத்து வைக்கக் கூடுமென்பதை இவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். இந்த வேலைக்காக இவர்களுக்கு வருடத்திற்கு ஆயிரக்கணக்கான பவுன்கள் சம்பளம் கொடுத்துவருகிறார்கள். சம்பளம் பொதுவாக இவர்கள் திறமையையே பொறுத்திருக்கிறது.

◆ ◆ ◆

அன்றி பெண்களுக்கு நவீனமுறையில் ஆடைகள் தைப்பதற்கு மாதிரிகள் தயாரித்தும் பெண்கள் ஜீவியம் நடத்தி வருகிறார்கள். பெரிய கம்பெனிகளில் இவ்விதம் ஆடைகளுக்கு ஆலோசனை கூறும் பெண்களுக்கு சம்பளம் கொடுத்து வருகிறார்கள். பெண்கள் ஆடை விஷயத்தில் ஆடவர் கூறும் யோசனைகளைவிட இப்பெண்கள் கூறும் யோசனைகளே சிறந்தவைகளாயிருக்கிறது.

———:o:———


## G. கன்னையா கம்பெனி, இரும்பு பெட்டிகள்.




எங்களுடைய தொழிற்சாலையில் புது தகட்டினால் உற்பத்தி யாகும் முதல்தரமான கெட்டி இரும்பு பெட்டிகள் நீண்ட காலம் உழைக்கக் கூடிய பல ரகங்களிலும் சைஸ் வாரியாக புது மாதிரிக் கள்ளறை முதலியன நேர்த்தியாக வைக்கப் பெற்றும், நெருப்புக்கு பயமில்லாத இங்கிலீஷ் மேக் பெட்டிகளைவிட உறுதியாகவும், வேலைத் திறமாகவும் அமைக்கப் பெற்ற பயர் புரூப் (Fire Proof) பெட்டிகளும் பெயிண்டிங் (அதாவது கலர்கள்) கொடுத்து அவரவர்களுக்கு திருப்திகரமாகும்படி மானேஜர் பார்வையுடன் ஆர்டர்தாரர்களுக்கு டயம்போல் கொடுக்கப் படும்.

வேண்டுபவர்கள் அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

G. கன்னையா கம்பெனி,
இரும்பு பெட்டி உற்பத்திசாலை, 137, பிராட்வே, சென்னை.


# சீனர் அதிசயவாழ்க்கை.

## நாய், பூனை, பாம்புகளை தின்னும் வழக்கம்.

———:o:———

தேசங்கள் தோறும் பழக்க வழக்கங்கள் வேறு ஒவ்வொரு நாட்டிலும் பற்பல வழக்கங்களை அனுஷ்டித்து வருகிறார்கள். அதிசய உணவுகளை உட்கொண்டும் வருகிறார்கள். ஒரு நாட்டினர் வெறுக்கும் நடையுடை பாவனை உணவுகள் வேறு நாட்டினருக்கு அதிகப் பிரியமாயிருக்கக் காண்கிறோம். உதாரணமாக சீனர்கள் பழக்க வழக்கங்களையும், உணவு, உடைகளையும் எடுத்துக் கொள்ளுவோம். சீனர் பழக்க வழக்கங்கள் மேனாட்டினருக்கு விசித்திரமாயிருக்கின்றன. சீனர்களின் சில பழக்க வழக்கங்களை இதர நாட்டினர் அறியாமலே இருக்கிறார்கள்.

### பயங்கரக் கடவுள்.

சீன மதக் குருக்கள் பொது ஜனங்களை எப்பொழுதும் பயமுறுத்தி அடிமையாக்கி வைத்திருப்பது வழக்கம். தங்களிடம் அபார சக்திகள் அடங்கியிருப்பதாக அவர்கள் ஜனங்கள் எண்ணிக்கொள்ளும்படி நடந்து கொள்ளுகிறார்கள். சீனர்களை மதசம்பந்தமாய் பயமுறுத்தி வைக்கும் நோக்கத்துடன் கோவிலின் வெளிவாசல் கதவுகளில் பயங்கர ரூபமுடைய கடவுளின் உருவங்களை செதுக்கியோ அல்லது கோவிலின் முன்பக்கங்களில் பயத்தை உண்டு பண்ணக்கூடிய பயங்கர சிலைகளை நாட்டியோ வைத்திருக்கிறார்கள். அன்றி அவர்களே கடவுளுக்கும் மனிதர்களுக்கும் தரகர்களாக இருந்து வருகிறார்கள். இறந்த ஆன்மாக்களுக்காகக் கடவுளிடம் பரிந்து பேசும் வக்கீல் தொழில் அவர்களுக்கே உரியது என்றும் அவர்கள் கோரிக்கைகளை கடவுள் நிறைவேற்றி வைப்பது போலும் நடந்து வருகிறார்கள். தாங்கள் இஷ்டப்பட்டால் ஒரு ஆன்மாவை நரக வேதனையினின்றும் காப்பாற்றி விடுவதாகவும் இஷ்டப்படாவிட்டால் அந்த ஆன்மாவை தங்கள் மனம்போல நரகவேதனைக் குள்ளாக்க முடியுமென்றும் ஜனங்களிடம் ஒருவித மூட பக்தியை உண்டாக்கி இருக்கிறார்கள். இதைத் தங்களுக்கு சாதகமாகக் கொண்டு, அக்குருக்கள் தாய் தகப்பனை இழந்திருக்கும் மக்களைப் பயமுறுத்தி விடு[illegible]. அவர்கள் பெற்றோர் உலகத்தில் ஜீவித்த காலத்தில் மகா பாபிகளாயிருந்தார்களென்றும்,



சீன தேச மாணவிகள்.

அவர்கள் ஆன்மக்கள் நரகத்தில் சொல்லொண்ணா வேதனை யடைந்து வருவதாகவும் அவர்கள் மக்களிடம் கூறுவர். அவர்கள் தங்கள் பெற்றோர் ஆன்மாக்களின் வேதனையைக் குறைக்கும்படி இக்குருக்களை மன்றாடுவது வழக்கம். அதற்காக நிதி கொடுக்கும்படி இக்குருக்கள் மக்களைத் தூண்டுவர். இக்குருக்கள் காகிதத்தால் தயாராக செய்து வைத்திருக்கும் பொய் மனிதன், மிருகங்களின் உருவங்களை பணம் கொடுத்து வாங்கி தீயிலிட்டுக் கொளுத்தும்படி உத்தரவு செய்வார்கள். இவ்வுருவங்களுக்கென ஒவ்வொரு வாரமும் பெருந்தொகையான பொருள் கொடுத்து வர வேண்டும். சிலர் தங்கள் தாய் தகப்பன் ஆன்மா எக்கதிக்குள்ளானாலென்ன வென்று அலட்சியமா யிருப்பார்களே யானால், அவர்களிடம் புத்தமதத்தில் நரகவேதனைகளைப்பற்றி கூறியிருக்கும் வசனங்களையும் கொடிய வேதனைகளைக் காட்டும் நரகப் படங்களையும் காட்டி பயமுறுத்துவார்கள். கொதிக்கிற எண்ணெயில் பாபிகளின் ஆத்மாக்களைத் தள்ளி தீயிட்டு எரிக்கும் படங்களையும், பேய்கள் வாள்களைக் கொண்டு இரு துண்டாக அறுக்கும் கோரக் காட்சியான படங்களையும், அங்க அவயவங்களை வெவ்வேறாகக் கிழித்தெறியும் கொடிய படங்களையும், காட்டி வருவார்கள். இக் காட்சிகளைக் கண்ட மக்கள் மனம் பொறுக்காமல் பெருவாரியான பொருள்களைக் குருக்களுக்கு வாரி இரைப்பது வழக்கம்.

## குருக்கள் மந்திர ஜாலம்.

மத விஷயத்தில் இக்குருக்கள் ஜனங்களை பயமுறுத்தி வருவதோடு லௌகீக விஷயத்திலும் இவர்கள் ஜனங்களை ஏமாற்றி வருகிறார்கள். தெய்வத்தினிட மிருந்து ரோக தரகர் வேலையை ஒப்புக்கொண்டதோடு, ஜனங்களைக் குணமாக்கும் மாய தந்திரங்களையும் கடவுள் அவர்களுக்குக் கொடுத்திருப்பதாகக் கூறி வருகிறார்கள். ஒருவனுக்குத் தேக அசௌக்யம் ஏற்படுமே யானால் அவன் டாக்டரிடம் சென்று மருந்து சாப்பிடுவது வழக்கம். தெய்வாதீனமாக



தாய் கையைப் பிடித்துக்கொண்டு தடமாட்டத்துடன் நடக்கிறான்.

அவன் குணப்பட்டால் நல்லது, இன்றேல் அவர்கள் திரும்பவும் டாக்டர்களிடம் போவதுகிடையாது உடனே தந்திரம் நிறைந்த இக்குருக்களையே அவர்கள் நாடுவார்கள் இதற்கென இக்குருக்களும் எப்பொழுதும் தயாராக இருந்து கொண்டிருப்பார்கள். சில அபூர்வ சின்னங்கள் வரைந்த கடிதங்களில் இவர்களுக்குத் தெரிந்த ஒருவகை மருந்து சுற்றி வைத்து விற்பனை செய்து வருவார்கள் சுமார் 500 வகையான மருந்துகளை இவர்கள் தயாரித்து வருகிறார்களெனத் தெரிகிறது. இவை பெரும்பாலும் பல்லிகளின் தோல், ஆமை ஓடு காண்டா மிருகத்தின் கொம்பு, மான் கொம்பு, நாய் இறைச்சி முதலியவைகளி லிருந்தும் பலவிதமான மூலிகைகளி லிருந்தும் தயாரித்து வருகிறார்கள். அன்றி புலியின் நகங்களைப் பஸ்பம் செய்து ஒயின் என்னும் சாராயத்தில் கலந்து மருந்தாக உபயோகித்து வருகிறார்கள். இம்மருந்துகளை ஏழைகள் முதல் தனவந்தர் வரையில் வெகு



பூர்ணமான நம்பிக்கையுடன் வாங்கி சாப்பிட்டு வருகிறார்கள். இது சீன மதக்குருக்களுக்கு நல்ல வியாபார மென்றே சொல்லலாம்.

## நரிகளுக்கு விருந்து.

சீனர்களிடமுள்ள பிரேதச் சடங்கும் வழக்கமும் அதிக விசித்திரமானது. இச்சடங்குகள் அவரவர் தனத்தைப் பொறுத்தே இருக்கிறது சீனாவில் பணமின்றி எதுவும் நடைபெறாது ஒரு தனவந்தன் இறப்பானே யாகில் அவன் ஜடலத்தை விலையுயர்ந்த வெள்ளிப் பட்டாடையால் அலங்கரித்து வீட்டில் யாவரும் பார்க்கக் கூடிய இடத்தில் பகிரங்கமாக வைக்கிறார்கள்



சீன ஸ்திரீகளின் சிரோபூஷணம்.

பிரேதத்தின் வாயில் ஒரு தங்க நாணயத்தையும் பொருத்தி விடுவது வழக்கம் அன்றி, பிரேதத்தின் அருகில் அபினி, முதலிய லாகிரி வஸ்துக்களை வைப்பார்கள். பொதுவாக இறந்தவர் எந்த லாகிரியை அதிகமாக உபயோகிப்பாரோ அதே லாகிரி வஸ்துவை பிரேதத்தின் அருகில் வைப்பது வழக்கம், இறந்தவருக்கு மக்கள் இருப்பார்களே யாயின், அல்லது இறந்தவர் சொத்துக்குரியவர், சில நண்பர்களுடன் அருகிலுள்ள நதிக்குச் சென்று தங்கள் அந்தஸ்துக்குத் தக்க பல நாணயங்களை நதியில் வீசி யெறிவது வழக்கம் அதன்பின் வீடு திரும்பி, ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து அதைக்கொண்டு இறந்தவர் முகத்தைக் கழுவி துடைத்து அதன் பின் புத்தமத குருக்களுக்களை வரவழைத்து மதச் சடங்குகளை நிறை வேற்றக் கோருவார்கள். அப்பொழுதும் இவர்களுக்கு நடுக்கந் தான். தங்கள் மந்திர சக்தியால் குருக்கள் பல பேய் பிசாசுகளைத் தருவித்து விடக் கூடுமெனப் பயந்து குறிப்பிட்ட சில மந்திரங்களையே ஜெபிக்கும்படி வேண்டிக் கொள்ளுவார்கள். அதன் பின் பிரேதத்தை எடுத்து மயானத்துக்குச் செல்லுவார்கள். பிரேத ஊர் வலத்துக்கு முன் ஒரு வெள்ளைச் சேவலை ஒருவர் எடுத்துக் கொண்டு போவார். அந்தச் சேவல் ஓயாது சப்தமிட்டுக் கொண்டே போகும். இதனால் இறந்தவருடைய ஆன்மா வீட்டில் தங்கிவிடாமல் சேவலின் சப்தத்தைக் கேட்டு பிரேதத்துடன் வந்து விடுவதாக இவர்கள் நம்பிக்கை. இத்துடன் சவப் பெட்டியிலும் பலவித வர்ணங்களில் பேய் பிசாசுகளின் உருவங்களை சித்தரித் திருப்பார்கள். இதனால் இறந்தவரின் ஆன்மா பேய் பிசாசுகளுக்குப் பயந்து வேறு எங்கும் ஓடாமல் சவப் பெட்டியைப் பின்பற்றி வருவதாக இவர்கள் மூட நம்பிக்கை, சவத்தை தரையில் புதைத்தும் இவர்கள் கொண்டு போன வெள்ளைச் சேவலை அங்கு வந்திருக்கும் யாவருக்கும் நமஸ்காரஞ் செய்யும்படி சேவலின் தலையை அங்குள்ள வருக்கு எதிராக சாய்ப்பார்கள். சீனாவில் காண்டன் பிரதேசத்தில் வேறு விதமான வழக்கம் இருந்து வருகிறது இறந்தவரின் சவத்தைப் புதைப்பதற்கு நல்ல லக்கனம் பார்க்கும் வழக்கமிருந்து வருகிறது. பொறுத்தமான லக்கனம் இன்றேல் சவத்தை எடுத்து அதற்கெனத் தனிமையாக ஒரு குடிசை கட்டி அதில் பிரேதத்தை வைத்து நல்ல நாள் வரும் வரையில் காத்திருப்பார்கள் இதற்கிடையில் அந்தக் குடிசையில் பலவித காகித விளக்குகளையும், பேய் பிசாசுகள் வரைந்த படங்களை

யும் குடிசை எங்கும் தொங்க விட்டிருப்பார்கள் அடிக்கடி இறந்தவரின் சவத்தி னருகில் தேத் தண்ணீரை சுடச்சுட வைப்பார்கள். அதன் பின் சரியான நாள் வந்ததும் பிரேதத்தை அடக்கஞ் செய்வார்கள். ஏழைகளின் சவங்களை வேறு விதமாகப் புதைக்கிறார்கள் அந்தச் சடலங்களை மனிதர் நடமாட்டமில்லாத இடங்களுக்கு எடுத்துச்சென்று அங்கு எறிந்து விட்டு வருகிறார்கள். அந்தச் சவங்களை நரிகளும் இதர காட்டு மிருகங்களும் தின்று உயிர் வாழுகின்றன. நரிகளுக்கு இவ்விதம் சவத்தை கொடுத்துப் போஷிப்பதை சிறந்த தருமமாகக் கருதுகிறார்கள். வேறு சிலர் இறந்த சவங்களை மீன்களுக்கு இரையாகும்படி, ஏரி குளங்களில் எறிந்து விடுவார்கள். இதனால் ஜனங்களுக்குப் பல அசௌகரியங்கள் ஏற்படுவதால், சர்க்கார் "ஏரி குளங்களில் வெரும் சவங்களை எறியக் கூடா"தென பெரிய அறிக்கைகளைத் தொங்க விட்டிருப்பது வழக்கம். ஆனால் சர்க்காரின் உத்திரவுக்குக் கீழ்ப்படிபவர் வெகு சொற்பமே இன்னமும் ஏரி, குளங்களில் சவங்களை விட்டெறியும் வழக்கம் இருந்து வருகிறது.

### விசித்திர உணவு.

சீனர்களில் ஏழைகள், மீனும் நாலைந்து பிடி சாதமும் சாப்பிடுவது வழக்கம். தனவந்தர்கள் தங்கள் ஆகாரத்துடனும் பாம்புகளையும், எலி, நாய் மாமிசம், கருத்தப்பூனைகளையும் சாப்பிட்டு வருகிறார்கள் கோடை காலத்தில் ஏற்படக் கூடிய நோய்களுக்குக் கருத்தப் பூனையின் மாமிசம் சிறந்த மருந்தாகக் கருதுகிறார்கள். தலையில் ரோமம் அதிகம் உதிர்ந்துவிடாமல் தடுப்பதற்கு எலிகளின் மாமிசம் தகுந்த மருந்தாம்! பொதுவாக எலிகளை வருவல் செய்தே சாப்பிடுகிறார்கள் பொதுவாக பறக்கும் எறும்புகள், வீட்டில் பூச்சி இவைகளை வருவல் செய்து சாப்பிடும் வழக்கம் சகல சீனர்களிடமும் இருந்து வருகிறது. இதை தெருக்களில் சாதாரணமாக விற்றும் வருகிறார்கள்.

### பூனைத்திருட்டு.

பூனை மாமிசத்தில் தான் சீனர்களுக்கு அதிக விருப்பம் இதனால் சீனாவில் பூனைகள் திருட்டு அதிகமாக நடந்து வருகிறது ஒருவர் ஒரு பூனையை அதிகப் பிரியமாக வளர்ப்பாரேயின் அதை அவர் பத்திரமாக வீட்டில் கட்டி வைத்து வளர்க்க வேண்டும். பூனையை வெளியில் விடுவாரே யாயின் அதன் உயிருக்கு ஆபத்துத்தான் பூனைக் கிருக்கும் கிராக்கி நாய்களுக்குக்கிடையாது. ஆதலால் நாய்களை தெருக்களில் அலைய விட்டு விடுவார்கள் இந்த நாய்கள், நாய்களைக் கொன்று மாமிசம் விற்பனை செய்யும் கடைகளுக்குச் சமீபத்தில் செல்லுமே யாயின் அவைகள் திரும்ப உயிருடன் வரப்போவதில்லை. தாங்கள் வளர்த்த நாய்கள் இழந்து விடுவதற்காக சீனர்கள் அவ்வளவாக வருந்த மாட்டார்கள் ஆனால் பூனைகளை எவரேனும் திருடிக்கொண்டு போனால் அதற்காகப் பெரிதும் வருத்தமடைவார்கள்.

### சீனர்கள் வியாபாரம்.


சீனர்கள் வியாபாரத்தில் சமர்த்தர்கள் அவர்கள் தங்கள் சரக்குகளைப் பற்றி விளம்பரஞ் செய்வதில் சலிப்பதே கிடையாது அவர்கள் கடைகளுக்கு முன் ஏராளமான விளம்பரப் போர்டுகளைக் காணலாம். அன்றி அவர்கள் கடனுக்கு வியாபாரஞ் செய்யும் வழக்கம் வைத்துக் கொள்வது வெகு அபூர்வம் தெருக்களில் மீன் கூடைகளை சுமந்து சென்று விற்று வருவார்கள். இந்த வியாபாரிகளையும் சீன குருக்கள் விட்டபாடில்லை நல்ல வியாபாரஞ் செய்யும் வியாபாரிகளிடம் கடவுள் அவர்களைக் கண்ணோக்கியதற்காகக் கடவுளுக்கு ஏதேனும் தானம் கொடுக்கும்படி பெருந் தொகையான பொருளை பெற்றுக் கொள்ளுவார்கள்.

---

ஜட்ஜ்:—நீ பணம் திருடியதுடன் அவ்விருந்த நகைகளையும் திருடினாயா?

குற்றவாளி:—நானும் எனது பெண்சாதியும் உல்லாசமாக இருக்க இரண்டும் தேவையாக இருக்கிறது.

---



# நாணய நடமாட்டம்.

(கருமாணிக்கம் எழுதியது.)

---

(காபிரைட் ஆசிரியரது)

—:o:—

தங்கத்தாலும், வெள்ளியாலும் ஆக்கப்பட்ட நாணயங்களை யல்லாமல் செம்பு, நிக்கல் நாணயங்களும் செலாவணியிலிருப்பது இன்றியமையாதது. அவையில்லாது போயின் எவ்வளவு குறைந்த பிரமாணமுள்ள பொருள்கள் வாங்கவேண்டிய திருப்பினும் தங்க, வெள்ளி நாணயங்களையே கொடுக்க நேரிடும். ஆகவே சிறு வியாபாரங்கள் தட்டின்றி நடைபெற திட்ட நாணயங்கள் (Standard) தவிரத் தாழ்ந்த உலோகங்களால் ஆக்கப்பட்ட சில்லரை நாணயங்களும் (Token coins) அவசியம் நடமாட்டத்தில் இருக்கவேண்டும். இச் சில்லரை நாணயத்திற்கும் திட்ட நாணயத்திற்கும் சம்பந்தம் எப்பொழுதும் ஸ்திரமாகவே யிருக்கும். (16 அணா, 1 ரூபாய்; 12 தம்பிடி, 1 அணா; 3 தம்பிடி, காலணா என்பது போல) செலாவணி யிலிக்கும் திட்ட நாணயத்தின் அளவைப் பொறுத்தே சில்லரை நாணயங்கள் வெளிக்கு விடப்படும். நியதியின்றித் திட்ட நாணயங்களே உலாவுமாயின் ஏற்படக் கூடிய கஷ்டம் அளவிடத் தக்கதல்ல. தங்கத்தையும் வெள்ளியையுமே போற்றுகின்றவர் அளவில்லாமல் செப்பு நாணயங்களைப் பெற்றுக் கொள்ள மாட்டார்களல்லவா? ஆதலால் வியாபார பரிவர்த்தனைக் கடனைத் தீர்ப்பதில் எவ்வளவு சில்லரைப் பணம் கொடுக்கலாமென்றும் அரசாங்கத்தார் நிர்ணயிக்கிறார்கள். எந்த நாணயத்திலே பெரிய தொகைகளும் கொடுக்கப் பட வேண்டுமென்று அரசாங்கத்தார் நிர்ணயிக்கிறார்களோ, அதற்கு "நியாய சம்மதப்பணம்" (Full Legal Tender) என்று பெயர். இந்தியாவிலும் இந்தக் கட்டுப்பாடுண்டு. அதாவது கடன் முழுவதும் ரூபாயிலேயே செலுத்தப்பட வேண்டுமென்பது.

'நியாய சம்மதப் பணமே' ஒரு நாட்டின் திட்டச் செலாவணி, எந்த உலோகத்தாலாக்கப்பட்ட நாணயம் இந்த உரிமையைப் பெற்றிருக்கிறதோ, அதுவே நாட்டின் "திட்ட உலோகம்" (Standard).

நியாய சம்மதப் பணம் ஒரே தேசத்தில் தங்க நாணயங்களாகவும், வெள்ளி நாணயங்களாகவு மிருப்பின் அதற்கு இரட்டைத் திட்டமென்று பெயர். கடன் தீர்ப்பதில் இவை இரண்டும் ஒப்புக்கொள்ளப்படும். ஒரே தேசத்தில் இரட்டைத் திட்ட மிருந்தால் சங்கடங்கள் பல ஏற்படும். தங்கமும், வெள்ளியும் திட்ட உலோகமாக

விருந்தால் இரண்டிற்கும் ஓர் சம்மந்த மேற்பட்டிருக்க வேண்டும். அவற்றின் விலைகளில் ஏற்றத் தாழ்வு நேரும்போது இந்தச் சம்மந்தமும் பாதிக்கப்படும்,

இத்தகைய சங்கடங்களை முன்னிட்டே, அநேகமாக எல்லாத் தேசங்களிலும் வெள்ளி அல்லது தங்கம் இவ் விரண்டிலொன்றையே, "திட்ட"மாக வைத்துக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் பலதடவைகள் இரட்டைத் திட்டம் ஸ்தாபிக்கப்பட முயற்சிகள் செய்யப்பட்டு, ஒவ்வொரு தடவையும் ஏதாவது சங்கடத்தால் அது கையாளப் படாமல் நின்றிருக்கிறது. ஆனால் இந்திய அரசாங்கத்தாருக்குத் தங்க நாணயச் செலாவணியை ஏற்பாடுசெய்ய இஷ்டமே கிடையாது. தங்கத்தின் மகிமை யறியாது மக்கள் அதை வியர்த்தஞ் செய்து விடுவார்களாம். அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. தற்காலத்தில் நடைபெறும் செலாவணி முறையைப் பற்றியே நமக்கு அக்கறை யிருக்கின்றது. செலாவணியிலிருக்கும் நாணயத்திற்குப் பல நிபந்தனைகளிருப்பினும், இப்பொழுது இத்தேசத்தில் காகிதப்பணம் நடமாட்டத்தி லிருப்பதைக் காண்கிறோம். காகிதப்பணச் செலாவணியைப்பற்றிய விஷயம் வெகு ருசிகரமானதாதலின் அதைப்பற்றித் தனியே விரிவாக எழுத உத்தேசம்.

---

# சிரசில் விளக்குள்ள மீன்கள்.

———:O:———

உலகத்தின் சில பாகங்களிலுள்ள சமுத்திரம் ஆழமானது சுமார் 5 மைலுக்கு மேலுள்ளது, ஜலத்தின் கீழ் கொஞ்ச தூரம் வரையில் வெளிச்ச மிருக்கும் ஆழமாக போகப் போக கொஞ்சம் கூட வெளிச்சமென்பதே இருப்பதில்லை. ஆழம் சுமார் 5 மைலுக்கு மேலுள்ள விடத்தில் ஜலத்தின் நெருக்கம் மிக அதிகமாக யிருக்கும் அம்மாதிரி யான விடத்தில் ஒரு இரும்புத் துண்டை போட்டாலும் நசுங்கி விடும் இவ்விடங்களில் வாழும் மீன்களை காண மிக ஆச்சரியமாக யிருக்கும். இம்மீன்கள் நசுங்கவதில்லை, மிக உறுதியாக விருக்கிறது இவ்விடத்தில் கொஞ்சம் கூட வெளிச்சமென்பதில்லாம லிருப்பதால் இறை தேடுவதற்கு கஷ்ட மில்லாம லிருக்கும் பொருட்டு அதன் சிரசில் இரண்டு விளக்குகள் உள்ளது. இதற்கு எண்ணை ஊற்றி ஏற்றவோ, அல்லது அணைக்கவோ வேண்டியதில்லை அது தானாகவே வெளிச்சம் தருவதற்குறிய ஒருவித அற்புத சக்தி கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது இம்மாதிரியாகவே அவ்விடத்தில் வாழும் மற்ற ஜீவ ராசி களுக்கு முண்டு இறை தேட வேண்டுமானால் வெளிச்சமின்றி கொஞ்சம். தூரம் வாயைத் திறந்தபடியே போனால் சிறு மீன்களெல்லாம் இதன் வாயில் அகப்பட்டு இறையாகி விடுகின்றது.

---

என்ன சார்? சாப்பிட ஓட்டலுக்கு வந்து விட்டீரே வீட்டில் ஒருவருமில்லையோ?

வந்தவர்:—எங்கள் வீட்டிற்கு "ஏகாதசி" வந்து விட்டதினால் இங்கே வர நேரிட்டது.

◆ ◆ ◆

ஐயங்கார்:—ஐயா? வைகுண்டத்திற்கு ஒரு டிக்கட்டு கொடுங்கள்.

புக்கிங் கிளர்க்:—முன்னே ஸ்ரீரங்கத்துக்கு டிக்கட்டு வாங்கிக் கொள்ளுங்கள். அங்குபோனபின் வைகுண்டம் போகும் வண்டியில் ஏறிக் கொள்ளலாம்.

# குயிலோசை கடியாரம்.

———:O:———

பழய காலத்தில் நாம் விடியற்காலம் படுக்கையிலிருந்து விழித்துக் கொள்ளும் வழக்க மிருந்தது. ஒருவேளை அலுப்பாக விருந்து பொழுது விடிவது தெரியாமலிருந்தாலும், சேவல், காகம் முதலிய பட்சிகள் கூவி எழுப்பி விடும், ஆனால் இக்காலத்தில் விடியற்காலை எழுந்துக்கொள்ள வேண்டுமானால் அதற்குத் தக்கபடி கடியாரத்தை மணி 4½ அல்லது ஐந்து என்று முள்ளை திருப்பி அலாரமடிக்க செய்து விட்டு படுத்துக் கொள்வதுண்டு. அதே மாதிரி மறு நாட்காலையில் தூக்க கலகத்தில் அலாரமடிக்க ஆரம்பித்த உடன் நமக்கு கோப முண்டாகி எழுந்து அலார மடிப்பதை நிறுத்தி விட்டு பழயபடி 8 மணி வரையில் கும்ப கர்ணம் சேவிப்பது வழக்கம் இதைக் குறித்து நாம் அதிகமாக கவ




லைப் படாவிட்டாலும் நமது தர்மகர்த்தாக்களான வெள்ளையருக்கு சிறிது கவலை யேற்பட்டு அதற்கு அநேகவித முயற்சி எடுத்துக் கொண்டார்கள் இந்த பிரயத்தனத்தில் பிரசித்தி பெற்ற கார்ல் ஜோஸப் டோல் அண்டு சன்ஸ் கீர்த்தி பெற்று விட்டார்கள் அவர்கள் தற்காலத்திற்கு தக்கவாறு மேலே குறிப்பிட்டுள்ள கடியாரத்தை உற்பத்தி செய்து விட்டார்கள். இது மற்ற கடியாரங்களைப் போல் அலாரமடித்து கோபத்தை உண்டு பண்ணாமல் குயில் ஓசையைப் போல் இன்பமாக கூவுகின்றது. இதனால் நாம் தூங்கி விழிக்கும் சமயத்தில் இது ஒரு சுபசகுனமா யிருப்பதுடன் மனதிற்கு ஒருவித உற்சாகமளிக்கின்றது. குயில் ஓசையை கேட்பதற்கும் ஒரு குறிப்பிட்ட காலமுண்டு. ஆனால் இந்த உயிரில்லா குயிலோசையை எக் காலத்திலும் கேட்டு ஆனந்த மடையலாம்.

---

உலகப் பிரசித்திப் பெற்ற மூக்குக் கண்ணாடி வியாபாரிகள்




விக்ஸன் அண்டு கம்பெனி,
மூக்குக் கண்ணாடி வியாபாரம்,
நெ. 165, பிறட்வே, சென்னை
கிளை:—(589, டைகிருப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி.)





ஸ்ப்ளிவரால்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

காஸ்ட் ராலக்ஸ்
மூலிகை சேர்ந்த
சிற்றுமணக் கெண்ணெய்

ஜ்வரேக்
எவ்வித ஜ்வரங்களுக்கும்

நஞ்சன்கூடு பல்பொடி
சோல் ஏஜண்ட்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதறாஸ்





பிரபல ஜோதிஷர்

மஹா இராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும், தங்க மெடல்களும் நற்சாட்சி பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூபா 5. 1 வருஷ பலன் எழுத ரூபா 5, எதிர்காலத்தைப் பற்றிய 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழு[illegible] தேவை).

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாசாச்சாரியார்,
"ஸரஸ்வதி" 4, எல்டாம்ஸ் ரோட்,
தேனாம்பேட்டை P.O., மதறாஸ்.



இந்தியா வெங்கும் யெஜத்துடன் விளங்கும்


ராஜன் பட்டணம் பொடி




காரம், மணம், குணம், நிறம் முதலிய எல்லாவற்றிலும் நிகரற்றது.

ஒரு முறை தருவித்து உண்மை அறியவும். விலை விவரங்களுக்கும், மற்றவைகளுக்கும் எழுதுக.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
ஆர். எஸ். சுகந்த மூக்குத்தூள் பாக்டரி,
44, கோவிந்தப்ப நாயக்கன் தெருவு, மதறாஸ்.
தந்தி விலாஸம்:—" நஸ்யம் " மதறாஸ்.


## நாய் காட்டிய நல்லறிவு

இறைவனை வணங்காச் சென்னி இருந்தென்ன?

(பண்டித. பா. பக்கிரிசுவாமி செட்டியார்.)

—:o:—

இங்கிலாந்து தேசத்தில் ஓர் அழகிய நகரத்திலே கௌபர் என்னும் ஆங்கில மகாகவி ஒருவர் இருந்தார். அவர் எப்பொழுதும் கவிகள் கட்டுவதே தமது வேலையாகக் கொண்டவர். அவரது சிறந்த கல்வியறிவையும், நற்குண நற்செயல்களையும் கண்டு களித்த புலமை வாய்ந்த இருபெண்மணிகள் ஓர் அழகிய நாயை அவருக்குத் தங்கள் ஞாபகார்த்தமாக அளித்தார்கள். புலவரது அன்பைப் பருகிய நாய், அவரை விட்டுச் சற்றும் பிரிவதேயில்லை. அவர் எங்குச் சென்றாலும், அது கூடவே போய்க் கொண்டிருந்தது. அது நாயின் இனத்தில் மிக உயர்ந்ததாகும்; தன் எஜமானரது உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை அவரது முகக் குறிப்பி லிருந்து அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றது.

புலவர் பெருமான் இருந்த நகரில் ஊஸ் என்னும் வற்றாத பெருக்குடைய நதி ஒன்று உண்டு. அந்நதியின் இருமருங்கிலும் நடந்துசெல்லத் தகுந்த பாதைகள் இருந்தன. பாதைகளுக்கு அநேக நாணற் காடுகள் அதிகம். நானாவித பறவைகளின் இன்னிசையும், ஊஸ் நதியின் அமைதியும் அந்நகரத்தையே சிறப்பித்தது என்னலாம்.

ஒரு நாள் சூரியன் இளவெயில் பரப்பி இன்புற்று இருந்தான். மாலைப் போது மாண்புடன் நெருங்கியது புலவர் ஆற்றின் ஒரு கரை மீது உலவச் சென்றார். அருமை நாயும் அவரைப் பின்பற்றியது கரையின் அருகிலே இருந்த நாணற் புதரில் ஒரு பக்கம் புகுவதும், மற்றொரு வழியே வெளி வருவதுமாக அந்நாய் தன் காலத்தைக் கழித்தது. புலவரோ இயற்கைத் தோற்றத்திலே தம் உள்ளத்தைச் செல்லவிட்டார் கவிகளின் மனம் கல்லிலும், மண்ணிலுங் கூட அழகைக் காணுமல்லவா?

ஊஸ் நதியின் நீர்ப் பரப்பில் ஆம்பல் மலர்கள் மலர்ந்து அப்பக்கத்தை அழகு செய்தன; எட்டிய தூரம் நறுமணம் வீசின

வண்டினங்கள் மது உண்ண இனிய இசையோடு அவற்றை நாடிச் சென்றன. கவிஞர் அவை அனைத்தையும் கண்டார்; ஆனந்தம் கொண்டார்; பூவொன்றைப் பறிக்க ஆவல் பூண்டார்; உடனே தமது கைத்தடியால் ஒரு மலரைப் பறிக்க முயன்றார். அப் புஷ்பம் கைத்தடியால் இழுக்கப்பட்டுக் கரையை அடையும் நிலையில், புலவர் விருப்போடு தம் கையை நீட்டி அதனைப் பறிக்கப் பார்த்தார் பாவம்! அவரது கை மலரண்டைச் செல்வதன்முன், பூ வழுக்கிக் கொண்டு தான் முன்னிருந்த இடத்தை அடைந்தது மற்றும் இரு முறை புலவர் அப்புஷ்பத்தைக் கொய்ய முயன்றார்; முடியவில்லை விற்பன்னர் முயற்சி வீணாயிற்று.

புலவரது நாய் அவர் செய்த காரியத்தைக் கூர்மையாகக் கவனித்தது; தன் காதுகளை உயர்த்திக் கொண்டு நுண்ணிய பார்வையோடு புலவரது முயற்சியைக் கண்ணுற்றது; அறிஞருடைய விருப்பத்தை அறிந்தது போலத் தலையை அசைத்தது. இந்நிலையில் புலவர் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார் நாயும் அவரைப் பின்பற்றி நடந்தது புலவர் சிறிதுநேரம் அக் கரையோரமாக உலவினர்; மீண்டும் வந்தவழியே தமது வீட்டிற்குத் திரும்பினர்.

அவ்வாறு, புலவர் திரும்புகையில் அவரது நற்குணமுள்ள நல்லியல் வாய்ந்த நாய் வெகு வேகமாய் அவருக்கு முன்னேபாய்ந்தோடியது ஓடியநாய், புலவர் மலர் கொய்ய முயன்ற விடத்தில் நின்றது; அங்கிருந்து ஆற்றில் குதித்தது. குதித்த நாய் விரைவில் நீந்திச் சென்று, தன் தலைவர் எப்புட்பத்தைப் பறிக்க முயன்று தோல்வி யுற்றாரோ, அதனையே தனது பற்களால் பற்றிப் பறித்தது; பறித்த அம் மலரைத் தன் வாயில் கௌவிக் கொண்டு கரையை யடைந்தது. அதற்குள் புலவரும் அவ்விடம் வந்து சேர்ந்தார். நாய் அதிக உற்சாகத்துடன் அவரை யடைந்து அவரது இணையடிகளில் அம் மலரைப் போட்டுத் தன் வாலை ஆட்டித் தான் கொண்ட களிப்பைக் காட்டியது. தமது நாயின் செய்கையைக் கண்ட புல்வர் அடைந்த ஆச்சரியத்திற்கும், ஆனந்தத்திற்கும் அளவுண்டோ குழந்தைகளே! உங்கள் நாய் அவ்வாறு செய்தால், நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சி யடைவீர்கள்?

புலவர், தம் நாயின் நல்லறிவை நினைக்க நினைக்க, அவர் கண்களில் ஆனந்த நீர் பனி போலத் துளித்தது; தமது நானய அன்புடன் தடவிக் கொடுத்தார். "என் அன்பே! உனது அரிய செயலை உலகத்தார்க்கு உணர்த்துவேன் அவர்கள் அவசியம் இதனை அறிய வேண்டும் தங்களை விடப் பிறப்பால் உயர்ந்தவர்கள் இல்லை என நினைந்து அவர்கள் கர்வங் கொண்டுள்ளார்கள். உயர்ந்த பிறப்பினரான அவர்கள் செய்கையைக் காட்டிலும், தாழ்ந்த பிறப்பை யுடைய நினது செயல் சாலச் சிறந்ததே யாகும். ஆதலால், இதனை உலகத்திற்கு உணர்த்த வேண்டியது இன்றியமையாத எனது கடமையாகும். மேலும், உனது அரிய நடத்தையால் நீ எனக்கு ஒரு நல்ல படிப்பினையைக் கற்பித்திருக்கிறாய். அதாவது, உணவு, உறைவிடம் முதலியன உதவும் எஜமானனாகிய என்னிடத்தில் நீ எவ்வாறு நன்றியோடு நடந்து கொண்டனையோ அவ்வாறே, யானும் எனக்கு இவ்வரிய மானிடப் பிறப்பை அளித்து, அறிவுச் சுடர் கொளுத்திச் சகல சுகங்களையும் கொடுத்துக் காக்கும் எல்லாம் வல்ல இறைவன் தனிப் பெருந்தலைவன் அருட் பெருஞ் ஜோதி ஆண்டவனாகிய பரம பிதாவினிடம் என்றும் நன்றி யறிதலுள்ளவனாக நடந்து கொள்ள வேண்டுமென்பதே" என்று உரைத்தார்.

சிறுவர்களே! நாயின் நல்லறிவினைப் பாருங்கள்! நாம் என்றும் நம்மைப்படைத்துக்காக்கும் கடவுளிடம் நன்றியறிதலோடு நடந்து கொள்ள வேண்டுமென்பதை அது தனது சிறந்த நடத்தையால் நமக்கு அறிவுறுத்துகின்றது.

'இறைவனை வணங்காச் சென்னி,
இருப்பினும் பயனென்? காட்டில்
எரிப்பினும் இல்லை தானே.'
—விவேக சிந்தாமணி


## என்றும் தங்களுக்கு ஊழியம் செய்தலே நமது கடமை

சுதேச
பொருட்களை
ஆதரித்தல் பொது
மான சம்மதம்

ஸ்ரீமதிகளுக்கோர் உறுதிமொழி

நாகரீக சேலைகள் பல ரகங்களில் ரம்யமான வர்ணங்களில் எப்பொழுதும் எம்மிடம் ஏராளமாக உள்ளன.

வெகு மரியாதையுடன் உங்களை வரவேற்று வேண்டியதை திருப்தியுடன் உங்களுக்கு கொடுத்தனுப்ப காத்துக்கொண்டிருக்கிறோம்.

## S. R. பாலுசாமி ஐயர் & சன்ஸ்.,

பிரதம, மதுரை, காசி ஜவுளி வியாபாரம்,

நாம் கையாண்டுவரும் சில தினுசுகள்.

காரச்சி, பெனாரிஸ் முதலிய பட்டு சரிகை சேலைகள்; பெங்களூர், பிலேச்சர் சில்க் சேலைகள்; தர்மாவரம், காஞ்சீபுரம், சொந்த தறியில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டு சேலைகள்; மதுரை, டக்கா நூல் சேலைகள்; துப்பட்டா, அங்கவஸ்திரம் முதலியன. சேலம், பெத்தாபுரம் பட்டு வேஸ்டிகள்; ஜரிகை தலைநூட்டைகள், நவீன நாகரீக ரவிக்கைத் துண்டுகள்; ஜம்பர்கள், சால்வைகள், சேலம் வேஷ்டிகள் முதலிய நம் நாட்டிலேயே நெசவு செய்யப்படும் ரகங்கள்.

அநேக வருஷங்களாக சுதேச பொருட்களையே கையாண்டுவரும் எம்போன்றவர்களை ஆதரிப்பதற்கு இதுவே ஏற்ற சமயம். அதிலும் நாமோ இதுவரையில் உயர்ந்த சரக்குகளையே எப்பொழுதும் கை வசத்தில் நிறுத்தி, சாயத்திற்கும் நெடுநாளுழைப்பிற்கும் பல்லாண்டுகளாக உத்திரவாதம் கொடுத்து வந்திருப்பதால் எமக்கு பேரும் புகழும் ஏற்பட்டுள்ளது. ஆகையால் சுதேசப் பொருட்களை ஆதரவு செய்யவேண்டுமென்ற தீவிர உறுதி கொண்ட அனைவரும எமது சரக்குகளையும் உறுதிமொழிகளையும் ஓர் முறை பரிசீலனை செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இந்திய கிருஸ்தவர்களால் நாம் மிகவும் கொண்டாடப்பட்டுள்ளோம்.

ஸ்தாபிதம் 1901. டெலிபோன் 3506.

83, நயினியப்ப நாயக்கன் தெருவு பார்க் டவுன், சென்னை.

# இந்தியா புராதனமும் தற்காலமும்.

## மகாத்மா காந்தியின் ரேடியோ பிரசங்கம்.

:o:

[மகாத்மா காந்தி ரேடியோ மூலம் அமெரிக்காவுக்குப் பிரசங்கஞ் செய்ய அமெரிக்கர்கள் கேட்ட வண்ணம் ஆங்கிலத்தில் வெளி வந்ததன் சாரம் கீழ் வருமாறு.]

இந்திய கான்பெரன்ஸின் ஜயாபஜயங்கள் இந்தியாவை மட்டும் பொருந்திய தன்று; ஆனல் அகில உலகத்தையும் பொருந்தத் தென்றே என்னுடைய அபிப்பிராயம். இந்தியாவை ஒரு தேசமென்று எண்ணக் கூடாது. அதை ஒரு கண்டமென்றே சொல்ல வேண்டும். உலக மனித சமூகத்தின் ஐந்திலொரு பாகத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கின்றது. புராதன நாகரீகங்களை மேற்கொண்டிலங்கும் நாடுகளில் இஃதொன்ருகும். பதினயிர வருஷக் கணக்காக நற்சரிதங்களைப் பாரம் பரியமாக வழங்கிக் கொண்டு வருகின்றது. அந்த நற்சரிதங்களைக் கண்டும் கேட்டும் உலகத்தினர் போாச்சரியப் படுகின்ருர்கள். காலக் கேடானது அத்தகையப் பரிசுத்தமான நாகரீகத்தைப் பாழாக்கி விட்டது வாஸ்தவம் தான். அதே காலக் கேடானது இன்னும் இதர கல்வி கேள்விகளையும் தாக்கிப் பாழ் செய்துவிட்டது.

### சுதந்தரத்துக்கு அவசியம்.

இந்தியா தன் பண்டைய கீர்த்திப் பிரதாபத்தைக் கொண்டாட வேண்டு மென்ருல், அது சுதந்தா மடையும் போது அவ்வாறே கொண்டாட்டங்கள் செய்து கொள்ளலாம். அதற்கு யாதொரு தடையுமிராது இந்தயுத்தத்தின் காரணம், உலகத்தினர்க்கு வெட்ட வெளியாயிருக்கிறது என்பதை நான் அறிவேன். இன்னும் இந்தியர்கள் அவர்களின் சுதந்திரத்திற்காகப் போராடுகிருர்கள் என்பது மட்டும் போதுமான காரணமாகாது நாம் கையாடிவரும் முறை சுதந்தரம் பெற உபயோகிக்கும் ஒரு விசேஷமான நூதன முறையாகும். சரித்திரங்களை யெல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும் இம்மாதிரியான முறைகளைக் கையாண்டவர்களே இல்லை யென்பதை உணாலாகும்.

எங்களது முறைகள் ஹிம்சை விளைவிப்பனவல்ல ரத்தம் சிந்துவதுமல்ல; ரத்தமின்றி சக்தி யின்றி யுத்தம் செய்ய வல்லோம் இக்காலத்தில் பொருள் படுத்துவதுபோல் ராஜ தந்திரமு மல்ல; ஆனல் அம்முறைகள்; சாதாரண மானவைகளும் பரிசுத்த மானவைகளு மான சத்தியமும் அஹிம்சையுமே இம்முறைகள் உலகத்தினரது கண்களையும் கவனத்தையும் கவர்ந்தல் ஓர் ஆச்சரியமுமில்லை. இது வரையிலும் ஜன சமூகத்தார்கள் மிருகங்களைப்போன்று முரட்டுத்தனமாகப் போர்செய்து வந்தார்கள். அவர்கள் தங்களுக்குப் பகைவர்களாயிருப்பவர்கள் மீது பழிவாங்கி வந்திருந்தார்கள்.

### மிருகபலம் இழிவுடைத்து.

உயர்ந்த ஜாதியினர்கள் நடைமுறையில் புழங்கி வரும் தேசிய ஞான கீர்த்தனங்




கலிபோர்னியாவில் பெண்கள் சைக்கிள் பந்தயத்தில் புறப்படும் காக்ஷி.



ஆங்கில பெண்கள் பாஞ்சோ வாத்தியம் வாசித்தல்.



களில் (National anthems) முன் சொல்லிய பகைவர்களைக் குறித்த விஷயங்களும் அடங்கி யிருப்பதை நாம் பார்க்கின்றோம். அவர்கள் அப்பகைவர்களின் அழிவை நாடிப்பிரார்த்தனைகளும் செய்திருந்தார்கள் கடவுளது பெயரையும் அத்துடன் சம்பந்தப்படுத்தத் தயங்கினார்களில்லை. அவ்விரோதிகளைச் சின்னபின்னப்படுத்த தெய்வ சகாயத்தையும் நாடினார்கள். இந்தியாவிலுள்ள நாங்களோ, இம்முறையைத் தலைகீழாக்கித் திருப்பியுள்ளோம். மிருக சிருஷ்டியை அடக்கும் சட்டதிட்டங்கள் ஜன சமூகத்தைத் திருத்தும் சட்டங்களாக மாட்டா என்பதை நாங்கள் உணர்ந்திருக்கின்றோம் அந்தச் சட்டம் ஜன சமுதாய அந்தஸ்துக்கும் பெருந்தன்மைக்கும் ஏற்றதல்ல.

என்னைப் பொருத்த மட்டில், வேண்டுமானால் இன்னும் சில காலமும் கூட தாமதித்திருப்பேன். எனது சுதேசஜனங்களின் சு[illegible] இந்த ரத்த முறைகளை நான் கையாள மாட்டேன். அதற்குப் பதிலாக இன்னும் பல வருஷங்கள் வேண்டுமானாலும் காத்திருக்கச் சம்மதமும் படுவேன். உலகம் ரத்தம் சிந்துவதைப்பற்றி அருவருப்பு கொள்ளும் விஷயத்தை நான் அல்லும் பகலுமா யுழைத்த இந்த முப்பத்தைந்து வருஷ நீண்ட கால அனுபவத்தைத் [illegible] நான் இருதயகமல பூர்வமாக உணர்[illegible]கின்றேன். இவ்வுலகம் இதற்கு ஒரு [illegible] கண்டு பிடிக்க முயன்று வருகின்[illegible] இவ்விஷயத்தில் பகீரதப் பிரயத்தனம் செய்[illegible] கத்தினர்க்குப் புராதன இந்தியா தானே வழி காட்ட வேண்டும் என்று நான் நம்பிக்கை கொள்வதால் [illegible] பெருமை படுத்திக் கொள்ளுகின்றேன்.

## உலக கூட்டுறவை நாடுதல்.

இந்தியா இப்போது இறங்கி யிருக்கும் பெருத்த யுத்தத்தில் உலகத்தின் கண்ணுள்ள பெரிய பற்பல அரசாங்கத்தினர்கள் யாவரும் தத்தம் மனமார்ந்த கூட்டுறவை யளித்துச் சகாயம் புரியவேண்டும் என்று இறைஞ்சி கேட்டுக்கொள்ளுவதற்கு நான் சிறிதும் பின் தங்கமாட்டேன்; தயங்கவு மாட்டேன். இந்தியர்கள் தங்கள் குலத்தின் மேம்பாட்டிற்குப் பழுது வாராமல் படிக்குத் தங்களது பெருமையையும் அந்தஸ்தையும் உயர்ந்த நோக்கமெனக் கொண்டு, மிருக பலங் கொண்டு எதிர்க்காமல் அஹிம்சையை கைப்பிடித்துத் தாங்கள் பற்பல இன்னல்களுக்கு ஆளாகி இருக்கின்றார்கள். கோடிக் கணக்கானப் பிரஜைகள் இவ்வண்ணம் பாதிக்கும் காட்சி ஒவ்வொருவரின் மனதையும் உருகச் செய்யும் தன்மையது.

## துயருறுவது, "தான் பரிசுத்தமடையவே"

[illegible]ருறுவதை நான், தான் பரிசுத்தமடையும் வழி என்பதாகக் கூறியுள்ளேன் அது என்னுடைய தீர்மானமான முடிவாகும், தன்னுடைய பலஹீனத்தால் தான் ஒவ்வொருவனும் தன் சுதந்தரத்தை இழக்கின்றான். எங்களுடைய பலஹீனங்களை நான் வெகு வருத்தத்துடன் உணர்ந்தேயிருக்கின்றேன். உலகத்தின் கண்ணுள்ள அகில மதத்தினர்களுக்கு இந்தியர்களாகிய நாங்கள் பிரதிநிதிகளாக யிருக்கின்றோம் ஒரு வீட்டில் அபிப்பிராய பேதத்துடன் உள்ளவர்களைப் போன்று வேறுபட்ட மனத்தினராய் ஒற்றுமையின்றி இருப்பதை வெளியிட்டுக் கொள்ளவும் மிக்க வருத்தப்படுகின்றேன். இந்துக்களாகிய நாங்களும் மகம்மதியர்களும் நேர் விழியுடன் விழிக்காமல் சச்சரவிட்டு வருகின்

றோம் இந்துக்களாகிய நாங்கள் லக்ஷக்கணக்கான எங்களது குலத்துதித்தவர்களையும் நாங்கள் தொடக்கூடாது அருகிலும் செல்லக்கூடாது என்று நீக்கி இருக்கின்றோம் என்று நான் சொல்வது பின்னும் மனவருத்தத்தை அதிகரிக்கச் செய்கின்றது தீண்டத்தகாதவர்கள் என்பவரைக் குறித்தே நான் சொல்கின்றேன்.

### பலஹீனம் எதிர்க்கப்பட்டது.

சுதந்தரமடையப் போராடும் ஜாதியினர்க்கு இவைகள் சின்னஞ் சிறிய பலஹீனங்களாகமாட்டா தான் பரிசுத்தமடையும் மார்க்கத்தின் மூலமாய்ப் போராடும் இவ்வியக்கத்தில் தீண்டாமை சாபக் கேட்டை உடைத்தெரியும் வழிகளைத் திட்டஞ் செய்திருக்கின்றோம் இந்தியாவிலுள்ள பற்பல ஜாதியினர், பற்பலமதத்தினர்களின் அபிப்பிராயங்களையும் ஒற்றுமையையும் பெற்றுமிருக்கின்றோம் அவ்வண்ணமே மதுபான சாபக் கேட்டையும் ஒழிக்க மார்க்கங்களைத் தேடி யிருக்கின்றோம். எங்களுக்கு அனுகுணமாகவும் அனுகூலமாகவும் இந்தக் குடிப்பழக்கம் நல்ல காலத்திற்காக மிகக் குறைந்தவர் களிடத்தே இருக்கின்றது. அதிலும் கீழ் மக்களிடத்திலும், தேகவுழைப்பு கொள்ளும் தொழிற்சாலைகளிலுள்ளவர் களுமே இதனால் பாதிக்கப்படுகின்றவர்கள்.

அதிர்ஷ்ட வசமாக எங்களுக்கு இந்தக் குடியும், கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை உண்பதும் நிஷித்தமாகத் தள்ளப்பட்டிருக்கின்றன. மனிதர்களும் ஸ்திரீகளும் மதுபானம் செய்யவோ, மற்று போதை தரும் மருந்துகளை உண்பதோ நாகரீக முதிர்ச்சி என்ற கொள்கை யென மதிக்கப்படுவதில்லை, எப்படிக் கிருந்தபோதிலும் இது ஒரு கஷ்ட சாத்தியமான வேலையே. எங்களிடமிருந்து இந்த மதுபான வழக்கத்தை ஒழிக்க எம்மாலான பிரயத்தனங்களெல்லாம் செய்து வருகின்றோம். அதை ஒழிக்கத் தீவிரமான உழைப்புக்களை எடுத்து வருகின்றோம்.

### மாதரும் மதுபானக் கேடும்.

இப்பொழுது இருக்கும்படியான அரசாங்கத்தார் இந்தக் கேட்டினால் பெருத்த தொகைகளை வருமானமாகச் சுமார் 25 கோடி ரூபாய்கள் வரையில் பெற்று வருகின்றார்கள் என்று நான் சொல்வதற்கு மிகவும் விசனமாக இருக்கிறது. அதைப்பற்றி எண்ணவும் எனக்கு அதிக கிலேசம் உண்டாகின்றது ஆனால் இந்தியாவிலுள்ள மாதர்கள் மிக்க அமைதியாக இதை எதிர்த்துப் போராட வெளி வந்திருப்பதற்காக நான் அவர்களுக்கு வந்தனங்களிடுகின்றேன் அவர்கள் சமாதான முறையிலும் இன் சொல்லால் குடிகாரர்களுக்கு உபதேசம் செய்து குடிப்பழக்கத்தின் கெடுதிகளையும் அவமானங்களையும் எடுத்துச் சொல்லி மறியல் செய்தும் வருகின்றார்கள். இன்னும் அம்மாதர்கள் மதுபான வகைகளை விற்கும் வியாபாரிகளையும் தங்களது இனியவசனங்களாலும் முறைப்பாடுகளாலும் அவைகளை விற்காமலிருக்கவும் வழி தேடி யிருக்கின்றார்கள். இந்த விதமான இரண்டு கேடுகளிலும் அவஸ்தை யுறுவார்களிடையில் நல்ல பலன் ஏற்பட்டிருக்கின்றது. இவ்விஷயத்தில் மட்டிலுமாவது சமஸ்தானாதிபதிகளின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு கிடைத்துக் கொண்டிருப்பதைப் பாராட்டி நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். சட்ட பூர்வமாக இராமல் ஒத்துழைப்பின் மூலமாக நாம் ஜெயம் பெற்றிருப்போமே யானால் இந்தச் சீர் திருத்தமும் மதுபானக் கேட்டையும் போதை தரும் மருந்துண்ணும் பழக்கத்தையும் அடியோடு நம் நாட்டை விட்டுத் துரத்தி



விட்டே யிருப்போம் என்று நான் சொல்லத்துணிவேன்.

இப்போராட்டத்தில் பிரஜைகளினாலேற்பட்ட ஒரு இயக்கம் அபிவிருத்தி யடைந்து பலனளிக்க முன் வந்திருக்கின்றது 1900 மைல் நீளமும் 1300 மைல் அகலமும் கொண்ட நம் இந்தியாவில் இங்கும் அங்குமாகச் சிதறியுள்ள சுமார் 700,000 கிராமங்களிருக்கின்றன அவைகளில் வாழும் மக்கள் கால் பட்டினியும் அரைப் பட்டினியும் கிடக்கின்றார்கள். அவர்கள் மீதும் இவ்வியக்கம் சற்று கவனிப்பு கொண்டிருக்கிறது இந்தச் சாமானிய கிராம வாசிகள் வருஷத்தில் ஆறுமாதகாலம் வீணே காலங் கழிக்கின்றார்கள் அதற்கு அவர்கள் ஒரு நாளும் ஜவாப்தாரிகளல்லர் அவர்களுக்கு வேலை வேறொன்று கிடைக்கப் படாமையே அதற்குக் காரணம் அது மிகவும் வருந்தத்தக்க விஷயமே.

### இந்தியாவின் பண்டைப் பெருமை.

ஒவ்வொரு கிராமமும் தன் அளவில் பூர்த்தியாக விருந்த காலம் வெகு நாளைக்கு முன்பு அல்ல, பிரதி கிராமமும் தன் ஆகாரத்திற்கும் தன் ஆடைக்கும்போதுமானதாக விருந்தது. அவைகளுக்கு வேறொருவரின் தயவையும் நாடி யிராத காலமும் இருந்தது. அதுவும் சொற்ப காலத்துக்கு முன்னும் இருந்தது. நமக்கு துரதிஷ்டமோ என்னவோ, கிழக்கு இந்தியா கம்பெனியார் நான் வாயினால் வெளியிட விரும்பாத வழிகளில் பிரதானமான ஆடை கைத்தொழிலை அழித்துப் பாழாக்கி விட்டார்கள். தங்களது கைத் திறமையினாலும் சாமார்த்தியத்தினாலும் மிக்க மெல்லிய இழைகளை நூற்று நெசவு தொழிலைச் செய்து பேரும் பிரக்கியாதியும் பெற்றிருந்தார்கள் அத்தகைய சன்னமான நூலை யந்திரங்கள் இன்னும் செய்ய முயலுகின்றது அப்படிப்பட்ட வேலைத் திறம் பெற்ற கிராமவாசிகள் ஒரு நாள் உறங்கி விழித்தெழுந்த போது தங்கள் கைத்தொழில் மறைந்தொழிந்ததைக் கண்டார்கள். அந்த நாள் முதற் கொண்டு இந்தியா வர வர ஏழ்மை ஸ்திதியை யடையத் தொடங்கியது.

கிழக்கு இந்திய கம்பெனிக் காரர்கள் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னர் கிராமவாசிகள் வெறுமென காலத்தைக் கழிக்காமலும்—இப்போதுள்ளவர்களைக் கண்டால் தெரியும்—கைத்தொழில் அபிவிருத்தியுடன் இருந்தார்களென்பது சரித்திரங்களில் காணும் உண்மை விஷயங்களாகும் வருஷத்தில் ஆறு மாதகாலம் வீண்காலம் போக்கினால் அவர்கள் பட்டினி இராமல் என்ன செய்வது இதை யறியப் பிரமாதமானபடிப்பும் முயற்சிகளும் தேவையில்லையன்றோ?

ஆகவே, இவ்வண்ணம் பட்டினிகிடந்துழலும் கோடிக் கணக்கான சகோதரர்களுக்காக உலகத்திலுள்ளவர்களின் அறிவுக்கு இவ்விஷயங்கள் எட்டும்படிச் செய்து அவர்கள் அக் கோடிக்கணக்கானவர்களின் பசிப்பிணியை ஒழித்து சுதந்தரத்தை அடையும் மார்க்கத்தை உபசரிக்க வேண்டும் என்று நான் இறைஞ்சி கேட்டுக் கொள்ளலா மல்லவா?

"ஆசிரியர்"

---

இன்றுதான் ஜனவரி மாதம் 15 தேதி பாக்கியை கொடுத்து விடுங்கள்.


கடன் காரர்:—தயவுசெய்து பிப்ரவரி மாதம் 22 தேதி வாருங்கள்.

கடன் கொடுத்தவர்:—முன் கேட்டதற்கு ஜனவரி மாதம் 15 தேதி வாச் சொன்னீரே?

கடன்காரர்:—இது சொல்வதற்காக தான் வரச் சொன்னேன்.

USE ALWAYS - - -
- - - BEST MISKY

GANDHI ASSAFOETIDA




உயர்ந்த மிஸ்கி

காந்தி பெருங்காயம்

GOPALJI CHAMPSHI & CO.,
21, GOVINDAPPA NAICK STREET
G.T. MADRAS.

கோபால்ஜி சாம்பஷி அண்டு கோ.,
21, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதராஸ்.




## என் துயர்

"பெண்மணி."

---

நான் ஒரு பெண்; அநாதை. வெகு அற்பமானவள். மிருகத்திலும் கேவலமாய்க் கருதப்படுகிறேன். எனது துயர் சொல்லற் கரியது. கண்ணீரும் கம்பலையுமாய் நிற்பதே என் தொழில். என் கண்ணீர் பிரதி தினமும் பெருக்கெடுத்து ஓடுகிறது. பாபத்திற்கெல்லாம் இருப்பிடமாயும் சதா சந்தேகத்திற்கும் கலக்கத்திற்கும் கலனாயும் புருஷரால் இழிவாய்க் கருதப்படுவதுமே நான் இவ்வுலகில் தேடிப் பெற்ற பாக்கியம். என் துயரை போக்குவோர் ஒருவரும் இல்லையா? கவலையை ஒழிக்க யாவரும் முன் வரக் காணோமே! ஹிந்து சகோதரிகள் என்றுசொன்ன மாத்திரத்தில், அச்சொற்றொடரில் எவ்வளவு அநியாயமும், அக்கிரமமும், இழிவும் பொதிந்து கிடக்கின்றன என்று சிறிது உன்னிப்பார்த்தால், இளகிய மனமுடையார்க்குக் கண்ணீர் வருமலிருது. அவர்களது பரிதாப நிலைமையை என்னென்பேன்; எதற்கொப்பிடுவேன்? அவர்கள் முன்னர் உன்னத பதவி பெற்றிருந்தனர். ஒரு காலத்தில் உலகத்தாரால் போற்றப்பட்டு உத்தமிகளாய்த் திகழ்ந்தனர் என்று பழங்கதை படிப்பதனால் யாது பயன்? என் சகோதரிகளின் துன்பங்களை ஒவ்வொரு துறையிலும் ஆராய்ந்தால், அவர்களை பட்டியில் அடைத்து சந்தையில் வாங்கும் ஆடு மாடுகளுக்கு ஒப்பிட்டாலும் மிகையாகாது. ஆனால், நம் சகோதரிகள் முன்னேற வேண்டும் என்ற உணர்ச்சி மட்டும் எங்கும் பரவி வருகிறது. அவர்களின் இன்னல்களை முற்றும் அறிந்தாலல்லவோ அவைகளுக்கு பரிகாரந் தேடலாம். ஆதலால் என் துன்பங்களை, நான் பிறந்தது முதல் அனுபவிக்கும் துயரத்தை, 'தமிழக'த்தின் மூலமாய் 'தமிழர்'களுக்கு தெரிவிக்கத் துணிந்தேன்.

வீட்டிலுள்ள நான்கு சுவர்களால் மூடப்பெற்ற அடுப்பங் கரை என்னும் பட்டியில் அடை பட்டுள்ளேன். சில்லாண்டுகளுக்கு முன் கல்யாணச் சந்தையில் ஆடு மாடுகள் போல் விற்கப்பட்டேன். சூரியனொளியும், சில்லென்ற காற்றும் புத்தி தெரிந்த பிறகு என் தேகத்தில் பட்டதாக எனக்கு ஞாபகமில்லை. என் தாய் என்னை பிரசவித்தது முதல் இது பரியந்தம் சந்தோஷம் என்பதை மருந்திற்கும் கண்டறியேன்; இனிமேலும் கிடையாது. ஏனெனில் நான் ஒரு துர் அதிர்ஷ்ட விதவை. என்னைப் போல் எண்ணிக்கை யற்ற சகோதரிகள் பரிதவிக்கிறார்கள் என்று அறிய மனந் துடிக்கிறது.

ஏழைகள் துயரையும், பெண்மக்கள் கண்ணீரையும் போக்கினால் ஒழிய இந்தியா உண்மை விடுதலையடைய முடியாது. என்னுடைய அனுபவத்தால் நான் அறிந்தது என்னவெனில் பெண்கள் அவர்கள் கஷ்டங்களைக் களைந்தெறிய ஆண்களை எதிர் பார்ப்பது நடுக்கடலில் காற்றால் அலைக்கப் பட்டு பரிதவிக்கும் படகில் உள்ள பிரயாணிகள் கரையிலிருந்து உதவி எதிர் பார்ப்பதையே ஒக்கும். பெண்கள் விடுதலை யடைவதற்கு பெண்களே முனைந்து நிற்க வேண்டும். ஆனால் சிலர் தங்கள் சுதந்திரத்திற்குத் தாங்களே எமனாய் விளங்குகிறார்கள். என் சகோதரிகள் எப்போது பழக்கம் என்னும் பெரும் விலங்கைத் தகர்த்தெறிந்து சுயேச்சை அடைவார்களோ?

என் தாய் தந்தையர்க்கு மூன்றாவது குழந்தையாகவும் இரண்டாவது புதல்வியாகவும் பிறந்தேன் நான் பிறந்ததும் பெண் குழந்தை என்று கேட்டதும் யாவருடைய முகத்திலும் சிறிது அலக்ஷியக்குறியும் ஒருவித விசனமும் உண்டாயிற்று. தாசிகள் இல்லத்தைத் தவிர, யாவருக்கும் பெண் குழந்தை என்றால் ஒருவித அசட்டை தான். அதிலும் முதலில் பிறப்பது பெண்ணானால் யாவர் மனமும் புண்ணாய் விடும். தாயின் கர்ப்பத்திலிருந்து வெளி வந்தது முதல் பெண்ணென்றால் அலக்ஷியமும் அவமரியாதையும் அசட்டையுமே! தாயுமல்லவோ ஆணென்றால் பிரசவ வேதனை சிறிது குறைந்தது போல் கருதுகிறாள். பெண் குழந்தை என்றமாத்திரத்தில் பிரசவவேதனை எக்காரணமும் இல்லாமல் அதிகரித்து விடுகிறது. என்னே அதிசயம்! சர்க்கரை வழங்குவதிலிருந்து தொட்டிலிடுதல், குழந்தைக்கு ஆகாரம் கொடுத்தல் ஈறாக ஆண்குழந்தைக்கு நடப்பதில் பெண்ணிற்கு அரை வரிசைகூட கிடையாது. சில சென்னை வாசிகள் பெண்ணென்றால் பொட்டை பிறந்திருக்கிறது என்று வாய் கூசாமல் சொல்லுகிறார்கள். பிரகாசிக்கும் கண்களுடைய குழந்தை பொட்டையா அல்லது கண்ணிருந்தும் அவ்வாறு அலக்ஷியஞ் செய்பவர்கள் பொட்டையர்? வாசகர்களே கூறுங்கள். ஆண் குழந்தை சாதிப்பது என்னமோ? பெண் மகவு யாரை பாதிக்கிறதோ? அப்படியே இருந்தாலும் பால் மணம் மாறாத பச்சிளங்குழந்தை என்ன பாவஞ் செய்தது? இனிமேல் தாய்மாராவது தங்கள் இனமாகிய பெண் மகவை பெருமைபடுத்துவார்களாக! இன்னும் தாயாரைப் பார்த்து 'நீ புண்ணியவதியாயிருந்தால் ஆண் பிள்ளை பெற்றிருப்பாய்'. 'இப் பெண்ணிற்கு இது உதவாதா? ஆண் குழந்தை போன்று பேசுகிறாயே?' என்றும், குழந்தை ஒன்று இறந்துவிட்டால் 'என்னபாபம்! அது ஆணல்லவோ இறந்து விட்டது? பெண்ணாய் இருந்தாலும் பரவாயில்லை', என்று இவ்வாறெல்லாம் பலபெண்கள் பிதற்றுவதைப் பார்த்திருப்பீர்கள். பெண்கள் இல்லையேல் ஆண்மக்கள் எவ்வாறு தோன்றுவார்களோ தெரியவில்லை' பெண்கள் இன்றி இவ்வுலகமே நீடித்திராது நம்மக்கள் இனிமேல் இயற்கையைக் கவனிப்பார்களா? மிருகங்கள் தங்கள் பெண் இனங்களை அலக்ஷியஞ் செய்கின்றனவா? ஆண்குழந்தைகளைத் தாய்கள் மார்போடு அணைக்கும் போது அடையுஞ் சந்தோஷத்தைப் போலும், பால் சுரப்பது போலும் பெண்மக்களை அணைக்கும்போது சந்தோஷ மடையாமலும் பால் சுரக்காமலுமா இருக்கிறது என்று ஒவ்வொரு தாயும் எண்ணிப் பார்க்கட்டும்.

குழந்தைகளைக் கவனிப்பதிலும், பராமரிப்பதிலும், அவர்களைக் கண்டு பூரிப்பதிலும், பெண்ணென்றால் அவ்வளவு உற்சாகங்கிடையாது. ஒரு இல்லத்தில் இரண்டு குழந்தைகள் இருந்தால், தாய் தந்தையர் வாங்கும் வஸ்துக்களிலெல்லாம் விளையாட்டுச் சாமான்களில் கூட பெண்ணிற்கு அவள் தாயே மாற்றாந் தாயாகி விடுகிறாள். என்னே அநியாயம்! பெண் குழந்தை தெருவிற்குச் செல்லக்கூடாது; அதிகமாய் ஓடியாடக் கூடாது; அன்னியர்களுடன் அதிகமாய்ப் பேசலாகாது எழெட்டு வயதானதும் வேறு வீட்டிற்குச் செல்பவளாகையால் அவளுக்கு ஒரு சௌகரியமும் கூடாது. வீட்டு வேலைகளையெல்லாம் அவள் செய்யவேண்டும் பதட்டமாய் எதையும் சொல்லக்கூடாது. தமிழ்



சிறிது எழுதவும் படிக்கவும் தெரிந்தால் போதும் அடுப்பூதும் பெண்களுக்கு அதிகக் கல்வி எதற்கு? ஆண்மக்கள் படிப்பதற்கு ஆயிரமாயிரமாய்ச் செல வழிப்பார்கள். சிறு பெண்களுக்கு கிழிந்த புத்தகங்களும் உடைந்த கற்பலகைகளும் போதும். நீங்கள் சிரிக்கலாம். பையன்கள் கற்பலகையை உடைத்து விட்டால் உடனே புதுப்பலகை. பெண் அதைச்செய்து விட்டால் துடைப்பக் கட்டையால் அடிகள் தான் சகோதரிகளே! உங்கள் அனுபவத்தை நினைத்துப் பாருங்கள். எனது அனுபவத்தினின்றும் வெகுவாய் வேறு படாது என்று துணிவாய்க் கூறுவேன். எனக்கு கல்வி கற்பதில் மிகுந்த ஆசை. நான் படித்தது ஆறாவது வகுப்பே யானாலும் என் கல்விக்கு எத்தனை விரோதிகள்? அம்மம்மா! பன்னிரண்டாம் வயதிலேயே நான் பள்ளிக்குச் செல்லலாகாது என்றாள் என் தாய். அவளுக்கு நான் இன்னுமோர் ஆண்டு பள்ளிக்குச் செல்ல இஷ்டமேயானாலும் பிறர் என்னைப் பற்றியும் என் அன்னையையும் பலவாறு பேச ஆரம்பித்தனர். அதிகமாய்ப் படித்தால் நான் ஆடவர்களுக்கு திருட்டுக் கடிதங்கள் எழுதுவேன் என்று என் பாட்டி கூறியதை, என் தாயும் அதை நம்பிவிட்டாள். கல்வி ஒரு ஸ்திரீயின் கற்பிற்கு பங்கம் விளைவிக்கும் என்னும் கூற்றை என் னென்பது! ஐயோ! கற்பழிந்தவர்களெல்லாம் கல்வி கற்றவர்களா? அல்லது கற்றோரெல்லாம் கற்பழிந்து நிற்கின்றனரா? ஆண்களின் நயவஞ்சகத்தில் கற்ற சிரோன்மணி ஒருநாளும் ஏமாற மாட்டாள். கல்லாத மூடப் பெண்களே ஆடவர்களின் பசப்பு வார்த்தைகளுக்கு செவி சாய்ப்பார்கள். ஒரு பொருளை நல்வழியிலும் தீய வழியிலும் உபயோகித்தால் அக்குற்றம் ஒருக்காலும் பொருளைச் சாராது; அப்பொருளை யுடையவனையே சாரும். கைத் துப்பாக்கி தன்னை விரோதிகளிடமிருந்து ஆபத்துக் காலத்தில் காத்துக் கொள்ளவும், அடாதவழியில் வழிமறித்துக்கொள்ளை, கொலை செய்யவும் உதவுகிறது. கல்வியும் அதேபோன்று [illegible]னும் 'கல்வியினுமில்லை சிற்றயிற் குற்ற [illegible], பாவிகள் கற்றிருந்தா லன்றோ தங்கள் குற்றங் குறைகளை எப்போதாயினும் உணர்வார்கள். இனிமேலாவது நமது தாய்மார்களும் பாட்டிகளும் பெண் கல்வியை அவ்வளவு மும்முரமாய் எதிர்க்கமாட்டார்களென்று நம்புகிறேன்.

பதின் மூன்றாவது வயதடைந்தேன்; சிறையிலிடப் பெற்றேன். ஆறுமாதக் குழந்தையாயிருக்கும்போதே யார் என்னிடம் எப்போது பேசினாலும் என் மணத்தைப் பற்றியே. திருமணமே, நான் இவ்வுலகில் பிறந்தபயனை அடையும் வகை என்றும், மணம் ஒன்றே என் முடிவு, யாரையாவது வரிப்பதே என் தொழில், என்றெல்லாம் பன்முறையும் பரக்க பலரும் சாற்றுவதை நானும் உண்மை யென்று நம்பினேன். பதின் மூன்றாவது வயதில் பெண்களெல்லாம் இந்தியா நாட்டைத் தவிர வேறு நாடுகளில் கவலை யற்று விளையாடுவதிலும் குதூகலமாய்க் கல்வி கற்பதிலும் காலத்தைக் கழிக்கின்றனர்; நம் நாட்டிலோ தாங்க முடியாத குடும்பபாரத்தை தன்னந்தனியே தாங்கி நிற்கின்றனர். நம் பெண்ணுலகிற்கு இது மிக்க பெருமையே. மணத்தின் பேரால் எவ்வளவு வனிதா ரத்தினங்கள் அநியாய மாயும் ஆடம்பரமாயும் பலி செய்யப் படுகிறார்கள். மிருக பலியைக் கண்டிக்கும் காருண்யம் நிறைந்தவர்களெல்லாம் இம் மானிட பலியைக் கண்டும் காணாதுபோல் உளரே. என் மணத்தைப் பற்றி என் மனத்தை ஒருவராவது அறிய வில்லை. நானும் எனக்கு அப்போது கிடைத்த புதிய சேலைகளையும், பொன்னாபரணங்களையும் கண்டு உளமகிழ்ந்திருந்தேன். ஆடம்பரக் கலியாணத்திற்குப் பிறகு புருஷன் வீடுற்றேன். மணத்திற்கு முன் என் கணவனைக் கண்டும் அறியேன்; கேட்டுமறியேன் என் கணவனும் என்னைப் பார்த்தது கிடையாது. மணக்காலத்தில் இரு திறத்தாரும் வெகுவாய்க் கொட்டிக் கொட்டி பேசியதெல்லாம் குலப் பெருமையும் செல்வச் சிறப்புமே கணவன் மனைவியர் ஒத்த நலனும் ஒத்த பண்பும் ஒத்த அறிவுடனும், இன்னும் மன ஒற்றுமையுடனும் விளங்குகின்றனரா என்று ஆராய்ப் புகின் நம் தமிழ் நாட்டுத் திருமணங்களில் ஆயிரத்

திற்கு ஒன்று கூட விரல் விட்டு எண்ண முடியாது. பெண்களை மணஞ் செய்து கொடுப்பதுடன் தங்கள் கடமை நிறைவேறி விடுகிறது என்று பெற்றோர்கள் கருதுகிறார்கள்; மணத்திற்கு பின் அவர்கள் எக்கதியானாலும் கவலையில்லை. சந்தோஷமோ துன்பமோ அவரவர்கள் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது; தாய் தந்தையரின் அறியாமையும், அற்பத்தனமும், அவசரமும் பெண்ணின் துர் அதிர்ஷ்டம் என்னும் ஒரு பதத்தால் மூடப்பெற்று விடுகிறது.

நான் புருஷன் வீடு சென்று ஒரு வாரம் கழிவதற்கு முன் என் வாழ் நாள் எவ்வாறாய் முடியப்போகிறது என்று எனக்கு நன்குபுலனாயிற்று. என் சுக வாழ்விற்கு விரோதிகள் ஆங்காங்கு தோன்றினர். மாமி நாத்தி முதலியோர் என்னிடம் காட்டிய கருணை நான் கூறாமலே யாவருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனி. நான் என் கணவனை அறியவும் என் புருஷன் என்னைத் தெரிந்து கொள்ளவும் இருந்த சாதனங்கள் எவ்வளவு என்று நீங்களே சுலபமாய் ஊகித்துக் கொள்ளலாம் முடிவாய்க் கூறினால் என் வாழ் நாளென்னும் மரக்கலம் சம்சார சாகரத்தில் தத்தளித்ததே யொழிய சுகமான சந்தோஷ வாழ்க்கை யென்னும் கரையை அடையத்தகுந்த இரக்க முள்ளவனாகிய மாலுமியும் பரஸ்பர அன்பென்னும் சுக்கானும் பெற்றிலது. முற்றிலும் வேறுபட்ட குண முடைய தம்பதிகள் என்ன தான் முயன்றாலும் வெகு காலம் நிம்மதியாய் வாழ்க்கையை நடத்த முடியுமா? ஒவ்வொரு தினமும் என் கணவன் என்னிடம் காட்டிய அன்பு தேய்பிறைச் சந்திரனைப்போல் குறைந்து கொண்டே வந்தது. மணமாகி ஓராண்டு கழியுமுன் என் மாமி எனக்கு மலடி என்ற பெயரையும் ஈந்தாள். நானே ஒரு குழந்தையா யிருந்தபோது எனக்கு ஒரு மகவு பிறக்கவில்லை என்று ஏங்கு வாரைக் கண்டு நான் புன்னகை புரியாம லிருக்க முடியவில்லை. என் வாழ்க்கையில் ஒரு இன்பத்தையேனும் அடையவில்லை. என் வயது சென்ற கணவன் செல்வச்செருக்கில் மறுமணஞ் செய்யவும் கூசவில்லை. என்னே ஹிந்து மனைவிகளின் கதி? இவ்வளவு அட்டூழியங்களையும் அக்கிரமங்களையும் வாய் திறவாமல் தங்கள் கணவரின் சுகத்தையே பெரிதெனக் கருதி அனுபவிக்கும் சகோதரிகளின் பொறுமையையும் பரோபகாரத்தையும் தனக்கென வாழாமையையும் என்னென்று புகழ்வது! ஆனால் ஏழை பங்காளன் மாது சிரோன் மணிகளின் இரத்தக் கண்ணீர் வீணேயாக ஒருநாளும் பார்த்திரான் என்பது திண்ணம். என் கணவன் மறு விவாகம் செய்து கொண்டபிறகு எனக்கு ஒரு குழந்தை பிறந்து மூன்றாம் நாள் நான் அனுபவித்த அநியாயங்களைக் கண்டு பொறாமல் இறந்து விட்டது. அன்னை செவ்வனே தேக வளர்ச்சி பெறுவதன்முன் உதிக்கும் சிசுக்கள் எவ்வாறு நிலவுலகில் நீடித்து நிற்கும்? சிசு உற்பத்திக்கு வேண்டிய தேக பக்குவம் இல்லையேல் அம்மகவு அற்ப ஆயுளாவதன்றி அன்னைக்கும் யமனாய்விடுகிறது. பதின் மூன்று பதினான்கு யாட்டைச் சிறுமிகள் எவ்வாறு தாய்மார்களாவதோ? மேயோ போன்ற அமெரிக்க மாதர்களும் அந்நிய தேயத்தினரும் எள்ளி நகை யாடாமல் வேறு என்ன செய்வார்கள்?

பதினாறாம் பிராயத்தில் தன்னிரு மனைவியரையும் தனியே இவ்வுலகில் தவிக்க விட்டு என் கணவர் விஷ சுரத்தால் திடீரென்று பீடிக்கப் பட்டு பரலோக பிராப்தியானார். நானும் வைதவ்யம் அடைந்தேன். என் பெற்றோரில்லஞ் சேர்ந்தேன். என்னை ஈன்றெடுத்த தாயும் பாபி யென்றும் துர் அதிர்ட முள்ளவளென்றும் தூற்ற ஆரம்பித்தாள் என்னைக் கண்டோருக் கெல்லாம் அபசகுனமாய்த் தோன்றினேன். கணவனுக்கு திரண்ட செல்வ மிருந்தும் நான் உடுக்கும் உடைக்கும் உண்ணும் உணவிற்கும் பிறரிடம் இரந்து நிற்கலானேன். என் பெற்றோரும் என்னை வைத்து பராமரிப்பதில் ஏதோ பச்சா தாபமுள்ளவர்களாயும் என்னிடம் பேரிரக்கங் காட்டுவதாயும் கருதினார்களே யன்றி அவர்கள் கடமை யென நினைக்கவில்லை. ஹிந்து தர்மத்தில்—அதர்மமே ஒரு நாளுந் தர்ம மாகாது—ஸ்திரீகளுக்கு சொத்துரிமையில்லை. மனு நீதியில் வரிசைக் கிரமாக மாதர்கள் பெற்றோர்க்கும், புருஷருக்கும் பின்னர் மக்களுக்கும் அடங்கி நடக்க வேண்டும் என்ற உண்மை பொதிந்து கிடக்கிறது. இது ஒரு பால் நீதியே யாகும். ஆண்மக்கள் பெண்களை கிரகம் என்னும் காராக்கிரகத்தி லிடும் பொருட்டே இவ்வாறு விதித்தனர். சதியைச் சட்ட விரோதமாக்கிய பெண்டிங், ராஜா ராம் மோகன்ராய் முதலியவர்கள் ஹிந்து விதவைகளின் நிலைமையை நன்கு அறியவில்லை என்றே எனது அபிப்ராயம், அறிந்திருப்பரேல் ஸ்திரீகளின் வைதவ்யத்தின் கொடுமையைக் களைந்த பிறகே சதியை ஒழித்திருப்பர் ஸஹஹ மணஞ்செய்வதால் ஏற்படும் துன்பம்விதவைகள் ஆயுள்பரியந்தம் அனுபவிக்கும் இன்னல்களுக்கு எம்மாத்திரம்? மடுவிற்கும் மலைக்குமுள்ள வித்தியாசமே இயற்கையாகவே சிங்காரஞ் செய்து கொள்ள விரும்பும் பதினாறு வயது மங்கை யாகிய நான் எவ்வாறு நல்ல ஆடையின்றியும், பொன்னாபரங்களை வெறுத்தும், புஷ்பத்தை விலக்கியும், சுகத்தை அறவே யொழித்தும் வாழ்வேன்? நான் வயிறு நிறைய புசிக்கலுமாகாது; பஞ்சணையில் துயிலக்கூடாது. மனம், புனர் விவாகத்தை நாடினாலும் வேறு புருஷனை மனதில் நினைத்தாலே பாபம். வாய் விட்டு சொன்னாலோ என்னுயிர் என்னுடையதல்ல புருஷர்கள் எக்காரணமு மின்றி எத்தனை மனைவிகளை வேண்டு மானாலும் கொள்ளலாம். பல்லில்லாத கிழவர்களும் குமரிகளை மணந்து இன்ப நுகரலாம் ஆனால் இளமங்கைகள் விதவைகளாகில் சிற்றின்பத்தை வெறுக்க வேண்டும். இது நியாயத்திற்கும், இயற்கைக்கும், மானிடத்தன்மைக்கும், சமதர்மத்திற்கும் ஒருப்படுமா என்று தான் கேட்கிறேன்? இவ்வித ஆண்பெண் வித்தியாசத்தை அறவேயொழித்து சமதர்மக் கொள்கையைப் பாரெங்கும் பரப்புவதே கற்றோரின் முதற் கடமை யென்று நான் பன்முறையும் பணிவுடன் வற்புறுத்துகிறேன். மேலே கூறிய இன்னல்களை—அவைகள் பெண்கள் அனுபவித்து வரும் துன்பங்களின் ஒரு பாகமே, முழு விவரமல்ல—அகற்ற வேண்டிய சாதனங்கள் யாதென சமயம் நேர்ந்துழி பின்னர் கூறுகிறேன். என்—அதாவது, சகோதரியின் துயரை போக்குவாரில்லையா?

---




போலி மருந்துகளை கண்டு ஏமாறாதீர்கள்.




அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பம்பாய்.

குணத்திலும், மணத்திலும்
சிறப்புற்றோங்குவது

ஜே. எஸ். டௌக்ளஸ்
ஓடிகோலோன் சோப்.




விலை உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிப்பதினால் தேகத்திற்கு ஆரோக்கியத்தையும், நல்ல தேஜஸுடன் சர்மத்தை பாதுகாக்கின்றது.

மணத்திலும் குணத்திலும் இதற்கிணை கிடையா தென்பதை சென்ற 100 வருஷங்களாக ருஜுப்பிக்கப் பெற்றுள்ளது.

உங்கள் மனதுக்கு திருப்தியளிக்கக்
கூடியது இது ஒன்றே.

இன்று முதல் டௌக்ளஸ் சோப்புகளையே
உபயோகித்துப் பாருங்கள்.

*Sole Agents:*

**LUCKMAN & CO.,**

Soap & Perfumery Merchants,

302, LINGI CHETTY STREET, MADRAS.




## விகடப் பேச்சு!

:O:

பள்ளிக்கூடம் திறந்தவுடன் ஒரு சிறுவன் தன்னை சேர்த்துக் கொள்ளுமாறு உபாத்தியாயரிடம் தெரிவித்தான்.

உபாத்தியாயர்:—உனது பெயரென்ன?

சிறுவன்:—எனது அப்பா கூப்பிடும் பெயரைச் சொல்லவா அல்லது எனது தாய் கூப்பிடும் பெயரைச் சொல்லவா.

உபாத்தியாயர்:—இரண்டையும் சொல்.

சிறுவன்:—எனது தந்தை "குரங்குப் பிள்ளை" என்றும், தாய் "கழுதை மகன்" என்றும் கூப்பிடுவார்கள். ஆகவே தங்களுக்கு எது சம்மதமோ அதைக் எழுதிக் கொள்ளுங்கள்.

✦ ✦ ✦

தங்களுடைய மாப்பிள்ளைக்கு என்ன வேலை?

நண்பர்:—கலெக்டர் வேலை.

மற்றவர்:—எந்த ஜில்லாவுக்கு?

நண்பர்:—முனிசிபாலிடிக்கு.

✦ ✦ ✦

தங்களுடைய குதிரைப் பந்தய விருப்பமெல்லாம் எப்படி ஆய் விட்டது.

இன்ஸால்வென்ட்டு கொடுக்கும்படி ஆய்விட்டது.

✦ ✦ ✦

எனது தகப்பனார் இறந்து விட்டபடியால் நானே அந்த வேலையை ஒப்புக் கொண்டு விட்டேன்.

என்ன வேலை.

காவி கட்டிக் கொண்டு பிச்சை எடுப்பது.

✦ ✦ ✦

புருஷன்:—சில தினங்களுக்கு முன் இழந்த எனது மூக்குக் கண்ணாடியை கண்டு பிடித்து விட்டேன்.

பெண்சாதி:—எங்கு கிடந்தது.

புருஷன்:—எனது ஜேபியில் இருந்த பொத்தல் வழியாக தான் விழுந்திருக்குமென ஊகித்துக் கொண்டேன்.

✦ ✦ ✦

தம்பி:—தாங்கள் என்னை விட்டு பிரிவதற்கு ஒருவித காரணமுமில்லையே அண்ணா!

தமையன்:—எனது மாமனார் வக்கீலாயிற்றே என்ன செய்வது.

✦ ✦ ✦

வைதீகர்:—(ஓட்டல்காரனை பார்த்து) இரண்டு பூரி உருளைக் கிழங்கு இலையில் வைத்துக் கொண்டு வா.

ஓட்டல் காரன்:—ஐயா! ஜலமும், காபியும் கூட இலையில் தான் கொண்டு வர வேண்டுமா?

✦ ✦ ✦

சர்ரண உபாத்தியாயர்:—கிணறுக்காக குழி வெட்டிக் கொண்டிருக்கும் ஒருவன் தவறி விழுந்து விட்டால் என்ன செய்ய வேண்டும்.

மாணவன்:—அவன் கையிலுள்ள மண் வெட்டியை வாங்கி மேலே குவிந்துள்ள மண்ணைத் தள்ளி விடவேண்டும்.

✦ ✦ ✦

ஏகாதசியை முன்னிட்டு நாடகத்திற்குப் போனீர்களே. எப்படி யிருந்தது.

விரதக்காரன்:—தூக்கத்தில் மறந்து விட்டேன்.

✦ ✦ ✦

இரவெல்லாம் நாய் அழுதுக் கொண்டே யிருந்தது. சாப்பாடு போட மறந்து விட்டீர்களா?

நண்பர்:—இல்லேங்கோ சார். நம்ம சமுசாரம் அர்மோனியப் பெட்டியுடன் சங்கீதம் பாடிக் கொண்டிருந்தார்கள்.

பெண்சாதி:—புகைகுடிப்பதை விட்டு விட்டதாக சொன்னீரே!

புருஷன்:—ஆமாம்! அதனுல் தான் சிகரெட்டை பிடித்துக் கொண்டு, புகையை விட்டு விடுகிறேன்.

✦ ✦ ✦

எனது புருஷன் பிழைப்பது கஷ்டமாக யிருக்கிறது. ஏதாவது உபாயம் சொல்லுங்கள்.


டாக்டர்:—வியாதியைச் சொல்லுங்கள். மருந்து தருகிறேன்.

பெண்சாதி:—வியாதி ஒன்று மில்லே. வேலையில்லாம லிருக்கிருர்.

டாக்டர்:—அப்படியானுல் ஆஸ்பத்திரிக்கு போங்கள்.

---


**P. KOTHANDARAM PILLAY**



SON OF LATE

**P. S. PONNUSAMY PILLAY**

**ESTD. 1854.**

உயர்ந்த மர சாமான் வியாபாரிகள்;

நம்பிக்கையான இடம்.

நேர்த்தியான கட்டில், நாற்காலி, மேஜை, பீரோ மற்றும் பல மரசாமான்கள் உடனுக்குடனே செய்து கொடுக்கிறோம்.

**பி. கோதண்டராம் பிள்ளே,**

பி. எஸ். பொன்னுசாமி பிள்ளே கட்டிடம்,

39, எஸ்பிளனேட் (மேற்கு) மதருஸ்.


# சாமுத்திரிகா லக்ஷணம்.

## 1. புருஷன் பாதாதிகேசம்.

### கேபியேல் அவர்கள் எழுதியது.

(உரிமை ஆசிரியருக்கு உரியது.)

———:O:———

(சென்ற மாதத் தொடர்ச்சி.)

வீரியம் நல்ல புஷ்ப மண முடையதாகவும் துல்லியமாகவு மிருந்தால் பூபதி போல் அஷ்ட ஐஸ்வர்யம் படைத்தவனுவான். தேன் போல் பரிமள முடையதாக விருந்தால்-ஐஸ்வர்யவானுகவும், ஸ்திரீ போகத்தில் சிக்கியவனுகவும் இருப்பான். மச்ச கந்த முடையதாக விருந்தால்-ஜாரத்துவமும் அதிகாரமும் உடையவனுயும் சந்தான முடையவனுயு மிருப்பான். நாற்றமாக விருப்பினும் கருப்பாக விருந்தால்-செல்வக் குறைவு, மாமிச மண மடித்தால்-அதிபோகி, தன்னேப் போன்ற மணமுடையதாகில்-புத்திரவானுகவும், கர்ம நிஷ்டை யுள்ளவனுயு மிருப்பான். உவர் வாசனே யானுல்-தரித்திரம்; நீர் போலிருந்தால்-பெண் சந்தானப் பிராப்தி, வீர்யம் துரித ஸ்கலிதமானுல்-பூரண ஆயுள்.

கால்கள் நீண்டிருந்தால்-துரித நடையுள்ளவனுயும், ஜனங்களால் மதிக்கப்படுவான்; குட்டையா யிருந்தால்-தரித்திரம்; முழங்காலுக்கு மேல் உயரமாயும், அதற்குக் கீழ் குட்டையாயு மிருப்பது-நன்மை; மிருதுவாக விருந்தால்-சர்வ வாகனங்கள் உண்டாகும்.

இடுப்பு அதிகப் பெரியதா யிருந்தால்-தரித்திரம். மாமிசம் புஷ்டியா யிருந்தால்-சுக ஜீவனம். இருக்க வேண்டிய அளவுக்கு குறைந்து பாதியாயிருந்தால் ரோகி. தவளே இடுப்பைப் போலிருந்தால் ராஜ்ய பரிபாலனம் சித்திக்கும்.

பிருஷ்டபாகம் சிங்கத்தினுடையது போலிருந்தால் பூபதி. குரங்கு ஒட்டகம் இவற்றினேயுடையது போலிருந்தால் தரித்திரம்.

அடிவயிறு வித்தியாசமின்றி சமமாயிருந்தால் போகி; பானேயைப் போலிருந்தால் தரித்திரம். வயிறு எடுப்பா யிருந்தால்-பூபதி; ஏற்றக்குறைச்சலாக விருந்தால்-மர்ம முடையவன். வித்தியாசமில்லா திருந்தால்-சுக ஜீவனம். உள்ளுக்கு அடங்கி யிருந்தால்-கஷ்ட ஜீவனம். சர்ப்பத்தின் வயிறுபோன்றிருந்தால் தரித்திரம்; விசாலமா யிருந்தால் புத்திர பாக்கியம்; வயிற்றில் ரேகைகளிருந்தால்-சுக ஜீவனம்.

நாபி அகலமாயும் சுற்றுப்புறம் எடுப்பாயும் இருந்தால் வெகு போகி. சிறிதாக சுழிதென்படாம லிருந்தால்-துக்கம். ஒரு மூடிப்பு மத்தியிலிருந்தாலும் எடுப்பா யிருந்தாலும் தரித்திரத்தோடு அவஸ்தை. வலது புற மிருந்து இடது புறம் சுழி திரும்பி யிருந்தால்-மோசக்காரன். இடது புறத்திலிருந்து வலதுபுறம் சுழி திரும்பி யிருந்தால்-சத்விஷயத்தில் இச்சை யுள்ளவனுயும், பூர்ண ஞாபக சக்தி யுள்ளவனுயும் இருப்பான். இருபுறத்திலும் குறுக்கே வியாபித்திருந்தால்-பூர்ண ஆயுள்; உயரமாய் மேலுக்கு வியாபித்திருந்தால் ஐஸ்வர்யம்; உயரமாய்க் கீழ்புறம் இறங்கி யிருந்தால் பசுபால் விருத்தி; உரோமங்களிருந்தால்-ஏராளமான சந்தான விருத்தி,

தாமரை மலரைப்போல் இருந்து வலது புறம் திரும்பியிருக்கிற சுழி இருந்தால் பூபதி. மடிப்புகள் ஒன்று மில்லா திருப்பது அதிக கியாதியுள்ள சர்வ சம்பத்துகள் உண்டாம். ஒரு மடிப்பு இருந்தால் ஆயுதத்தினுல் கண்டம். இரண்டு மடிப்புகள் இருந்தால் ஸ்திரீ லோலன். அதனுல் கண்டம்; மூன்று மடிப்புகள் இருப்பின் அதிக பாண்டித்யம்; அதனுல் சுக ஜீவனம். நான்கு மடிப்புகள் இருந்தால் புத்திர பாக்கியமும், அதிக தனமும், பாண்டித்தியமும் இருக்கும். மடிப்புகள் கோணலாக விருந்தால் துஷ்டர்களாகவும் பரதார கமனம் உள்ளவர்களாகவும் இருப்பர். நேராக விருப்பின் மரியாதையுடன் சுக ஜீவனத்தை மேற் கொள்வார்கள். மூனைகள் கோணலா யிருந்தால் சந்தோஷி; பக்கங்களுக்குத் திரும்பி யிருந்தால் தரித்திரம்.

பக்கங்கள் கொழுமை வாய்ந்து மிருதுவாய் இடது புறத்திலிருந்து வலது புறம் சுழியுள்ள உரோமங்கள் இருந்தால் பூபாலன். சுழியின்றி கொழுத்திருக்குமாயின் ஐஸ்வரிய வந்தன்; சதையில்லாம லிருக்குமாயின் துக்க முள்ள தரித்திரவான்; ரேகைகளிருந்தால் அதிகமான தரித்திரம்.

முலைகள் கோணலாய் ஒன்றோடொன்று நெருங்கி யிருந்தால் சொற்ப நாள் வாழ்வு. நடுப்பாகம் விசாலமா யிருந்தால் செல்வம். விழி மேலுக்குத் தோன்றினுல் புத்திர சிந்தை; முலைக்காம்பு எடுப்பாக விருந்தால் உலக சன்மானம்; இரண்டும் சமமாக விருந்தால் தரித்திரம். பெரியதாக விருந்தாலும், உள் அடங்கி யிருந்தாலும் மகா தனவானுக வாவது, அரசனுகவாவது இருந்து புத்ர சிந்தை அடைவான். சமமாயிருந்தால் போகி, விசாலமாயிருந்தால் கஷ்டஜீவனம்.

மார்பு எடுப்பாகவும், விசாலமாகவும், திடமாகவும், புஷ்டியாகவு மிருந்தால் இராஜா; உள்ளடங்கியும் சன்னமாக யிருந்தாவது துர்ப்பலமாயு மிருந்து முறட்டு ரோமங்களோடு கூடி யிருந்தால் அதிக துர் நடத்தை யுள்ளவனுக இருப்பான். தட்டையாயிருந்தால் ஐஸ்வர்ய வந்தன்; அதிக விசாலமா யிருந்தால் அதிக பிரக்யாதி யுடையவன். நெருங்கி யிருந்தால் கஷ்ட ஜீவனம். உரோமங்கள் ஒன்று மில்லாதிருந்தால் மர்மியாக வாவது சமர்த்தனுக வாவது இருப்பான். சமமா யில்லாமல் மேடுபள்ளமா யிருந்தால் தரித்திரம்; எலும்புகள் காணப்பட்டுமேடு பள்ளமா யிருந்தால் விசனம். சிவப்பா யிருந்தால் சுகம்; கறுப்பாயிருந்தால் தரித்திரம்.

புஜங்கள் சமானமா யிராமலிருந்தால் துர் நடத்தை; அழகோடு எடுப்பாயிருந்தால் எசெஸ் பெருத்திருந்தால் தரித்திரம். நீண்டிருந்தால் ஐஸ்வரியம்; புஜங்கள் விசாலமாய் சதை பிடித்து இரண்டும் சமானமா யிருந்தால் செல்வமும் சுக போகமும் உண்டாகும். சதையில்லாமல் சிறிதாக மயிர் முளைத்திருந்தாலும் யானையினுடைய கும்பஸ்தலம் போல் உயர்ந்து சதை யில்லாமல் வலது புறத்திலிருந்து இடது புறத்திற்கு மடிப்புகளும் உரோமங்களும் இருந்தால் உலக பரிபாலனம். பள்ளம் விழுந்து ரோமங்கள் அதிகமா யிராமலிருந்தால் வறுமையும், சிந்தையும் உள்ளவனுவான். பள்ளங்கள் விழுந்திருந்து இடது புறத்திலிருந்து வலது புறத்திற்குச் சுழிகள் இருந்தால் கஷ்ட ஜீவனம்.

கக்ஷங்கள் (அக்குள்) வியர்வை விடாமல் விசாலமாயும் உயர்ந்தும் நன் மணத்தோடு அதிக ரோமங்கள் இருந்து இரண்டும் ஒரே அளவாக இருக்கும் பட்சத்தில் அரசனுகவாவது மகா செல்வவந்தனுகவாவது இருப்பான். இரண்டும் சமமாக விருந்தால் போகி; வித்தியாசமாக விருந்தால் ஐஸ்வரியமும்; நெருங்கி பள்ளங்கள் விழுந்திருந்தால் தரித்திரம்.

முதுகு செழுமையுடன் எலும்புகள் தென்படாமல், ரோமங்களிருந்தால் செல்வமும் சுக போகங்களும் உண்டாகும். மாமிசமும் குறைந்து எலும்புகள் தோன்று மாயின் தரித்திரமும் துக்கமும் இருந்து கொண்டே யிருக்கும். குட்டையா யிருந்தால் ஐஸ்வரியம்.

கரங்கள் அழகாயும், உருண்டு யானைத் தும்பிக்கையைப் போல் ஏரவா சிறந்து நீளமாய் முழங்கால் வரையிலும் இரண்டும் வித்தியாசமின்றி ஒன்றைப்போல் ஒன்று இருந்தால் அரசன்; அல்லது யாவராலும் மதிக்கப்படும்படியான அதிக செல்வம் உண்டாகும். இதில் எதாகிலும் சில லட்சணங்கள் குறைவாக விருந்தால் ஐஸ்வரிய வந்தன்; குட்டையாயிருந்து ரோமங்கள் அடர்ந்திருந்தால் தரித்திரத்தோடு தரித்திர ஜீவனம்; வித்தியாசமாயிருந்தால் பாபி. கெட்டியா யிருந்தால் செல்வம்; குரங்கு கைகளைப் போலிருந்தால் ஐஸ்வரியம்; புலியின் முன் கால்களைப் போலிருந்தால் கொடூர சித்தம் படைத்தவனு யிருப்பான். முழங்கைகளுக்குப் பலன் முழங்கால் பலன்களாம்.

மணிக்கட்டுகள் சதைக்குள்மறைந்து கெட்டியாகவும் இரண்டும் வித்தியாசமின்றி சமமா யிருந்தால் பூபதி. முடிகள் தென்பட்டால் தரித்திரம்; தளர்ந்து ஆடுமானுல் ஆயுத கண்டம் உண்டாகும். மணிக்கட்டில் இரண்டு ரேகைகள் இருந்தால் அதி சுகபோகி; மூன்று ரேகைகளிருந்தால் அதிக காமி. நான்கு ரேகைகளிருந்தால் அதிக ராஜ்ய லாபம். இந்த ரேகைகளைக் கங்கண ரேகைகள் என்றும் சொல்வதுண்டு.

உள்ளங்கை விசாலமாயும், பிரகாசமாகவும், அதிக ரேகைகள் இல்லாமலுமிருந்தால் பூரண ஆயுளுள்ளவராயும், சுகியாயும் இருப்பார். சிவப்பாயிருந்தால் ஐஸ்வரியம் பச்சையா யிருந்தால் காம இச்சை. அதிக சிவப்பா யிருந்து நான்கு மூலைகளும் சமானமான உயரத்தோடு தட்டையாயும் மிருதுவாயு மிருந்தால் அரசன். நடுவில் பள்ளமாயிருந்தால் தரித்திரம்; பள்ளமா யிருப்பதோடு உருண்டையா யிருந்தால் அதிக செல்வம். அழுத்தமா யிருந்தால் அதிக காமம். மெதுவாக விருந்தால் ஈகை யுள்ளவனுவான். இரண்டும் ஒரே மாதிரியாயிருந்தால் பாப சிந்தனை. செழுமையாக விருக்குமானுல் தரும சிந்தை. உலர்ந்து வறண்டிருந்தால் வறுமை.

சுண்டு விரலுக்குக் கொஞ்சம் தொலைவிலிருக்கும் பெரிய ரேகைக்கு ஆயுள் ரேகை என்று பெயர். அது சுண்டு விரல் வரையிலும் நீண்டிருந்தால் அப்புருஷனுக்கு வயது நூறு.



124293

அந்த ரேகை எந்த விரலின் கீழ் முடிகின்றதோ அவ்வளவு 25 வருடங்களென ஆயுள் நாளை நிச்சயிக்க வேண்டியது. ஆயுள் ரேகை மத்தியில் இரண்டாகப் பிரிந்தாவது அல்லது குறுக்கே வேறு ரேகைள் எத்தனை ஓடுகின்றனவோ அத்தனை கண்டங்கள் உண்டாகும். ஆயுள் ரேகையின் கீழிருக்கும் பெரிய ரேகைக்குப் பெண் ரேகை என்று பெயர். கட்டை விரலின் கீழ் மணிக்கட்டின் சமீபத்திலிருந்து மேலுக்குப் போகும் ரேகை புருஷ ரேகை எனப்படும் இவ்விரண்டும் பெரு விரலுக்கும் சுண்டுவிரலுக்கும் நடுவில் கலந்திருந்தால் சதிபதிகள் அதிகப் பிரிய முள்ளவர்களா யிருப்பார்கள். அவை சேராமலிருந்தால் பிரீதி யற்றவர்களாகவும், மதிப்பில்லாதவர்களாகவு மிருப்பார்கள். ஆண் ரேகை அதிகமாக நீண்டிருந்தால் புருஷ சந்தானமும், பெண்ரேகை நீண்டிருந்தால் ஸ்திரீ சந்தானமும் உண்டாகும். இந்த ஆண்பெண் ரேகைகள் சேராமலிருந்தால் சிலருக்கு கலியாணமே ஆகமாட்டாது. ஒரு வேளை அப்படி கலியாணம் ஆகி யிருந்தாலும் பிரயோஜனப் படாது. இரண்டு ரேகைகளும் ஒன்ருகச் சேர்ந்து எதுவும் மேல் போகாம லிருந்தால் சந்தானக் குறைவு. ஆயுள் ரேகையும் ஆண் பெண் ரேகைகளும் இம்மூன்றும் நன்ருகத் தெரியும்படி உள்ளங்கையில் இருந்தால் அஷ்ட ஐஸ்வரியம் உண்டாகும். நேராயிராமல் அநே ரேகைகள் கோணலா யிருந்தால் அதிர்ஷ்ட ஈனம் துக்கம் உண்டாகும். உள்ளங்கையில் ரேகைகள் ஒன்றுமே யில்லாமலிருந்தால் கஷ்ட ஜீவனம், தரித்திரம். மணிக் கட்டினுடைய நடுப்பாகத்தில் இருந்து ஆண்பெண் ரேகைகளுக்கு நடுவில் நீளமாய் வந்து பெண் ஆயுள் ரேகைகளின் மேரில் நடுவேபோகும் ரேகைக்குத் தனரேகை என்று பெயர். அது நன்ருய்த் தெரியும்படி இருந்தால் பிறந்த நாள் முதல் தனவந்தனுகவும் இருந்து, தானும் தனம் சம்பாதிக்கக் கூடும். அது முதலில் வளைந்து ஆண்ரேகையோடு கலந்திருந்தால் தான் பிறந்துதான் பணம் சேர்ந்திருக்க வேண்டும். அப்படி யிராமலிருந்தால் தான் விவாகம் செய்த பிறகு தனம்

சேரும். தனரேகைக்கு நடுவில் கத்திரி ரேகைகள் குறுக்கே தடையாக இருந்தால் தனம் சம்பாதிக்க எத்தனித்த காரியங்களில் தடை யுண்டாகும். அப்படிச் சேர்க்கும் தனத்தில் நஷ்டமுண்டாகும். தனரேகை நடுவில் கத்திரி ரேகை ஒன்றிருந்தால் கொஞ்சம் நஷ்டம் உண்டாகும். ஒன்றுக்குமேல்பட்டு இருந்தால் கத்திரி ரேகைகள் எத்தனை இருக்கின்றனவோ அத்தனை தடவை சம்பாதித்த பொருள் நஷ்டமாகும். தனரேகை நடுவில் சேராமல் துண்டு துண்டாயிருந்தால் சொற்பகாலம் தனம் சம்பாதிக்கின்றவனும் கொஞ்சகாலம் சம்பாதிக்காதவனுகவும் இருக்க நேரிடும் தனரேகை இல்லாமலிருந்தால் ஒருவரை எதிர் பார்த்து ஜீவிக்க வேண்டியதாயிருக்கும். தனரேகை விசாலமாயில்லாமல் தெரிந்தும் தெரியாததாயு மிருந்தால் சொற்ப வரும்படியோடு ஜீவனம். ஆயுள் ரேகைக்கு மேல் தனரேகை வலது புறம் நீளமா யிருந்தால் அந்த ரேகைக்கு வித்தியா ரேகை என்று பெயர். இது எவ்வளவு பிரபலமாய் இருக்கின்றதோ அவ்வளவு பிரபல்யமான வித்துவானுக இருப்பான். உள்ளங்கையின் ஓரத்தில் சுண்டு விரலின் கீழ்ப்பாகத்திற்கும் ஆயுள் ரேகைக்கும் நடுவிலிருக்கும் குறுக்கு ரேகைகளை தார ரேகைகள் என்று சொல்லுவார்கள் இந்த ரேகைகள் எத்தனை இருக்கின்றனவோ அத்தனை மனைவிமார்களுண்டு. யானை, குதிரை, பல்லக்கு, கொடை, கிரீடம், சங்கம், சாரம், பத்மம், கொடி, சத்ரம் இந்த ரேகைகள் உள்ளங்கையிலிருந்தால் அரசனும் சிந்தை யில்லாதவராகவும் இருப்பர். சூரிய சந்திர ரேகைகளில் ஏதாவதொன்று இருக்குமானுல் அதிக தெய்வ பக்தி. இரண்டும் இருந்தால் உலக பூஜ்யதை. மச்ச ரேகை யிருந்தால் தனவானும், புண்ணியவானும் புத்திரவந்தனுகவும் இருப்பார். துலா ரேகையிருந்தால் அதிக செல்வந்தன், விரல்களின் நுனியில் ஒரு விரலில் ஒரு சக்கரமிருந்தால் அதிக சுகவான். இரண்டு விரலில் சக்கரமிருந்தால் பிரபு சன்மானம். மூன்று விரல்களில் சக்கரமிருந்தால் நானு தேசங்களைப் பார்ப்பான். நான்கு விரல்களில் சக்கரமிருந்தால் பண்டிதன். ஐந்தில் சக்கர மிருந்தால் ஞானி, புருஷனுக்கு வலது கையைப்பார்த்து அதிலிருக்கும் ரேகைகளுக்குப் பலாபலன்கள் நிச்சயிக்க வேண்டும். புருஷனுடைய இடது கையிலிருக்கும் ரேகைகளைப்பார்த்து சுபா சுபங்கள் அவர் சம்சாரத்திற்குச் சம்பந்தப்பட்டவை யாக விருக்கும்.

கைவிரல்கள் நீளமாக இருந்தால் சுகபோகியாவான். தோல் மடிப்புகள் இல்லாமலிருந்தால் உலகத்தில் மதிப்புள்ளவனுவான். சிறியதாக இருந்தால் விவேகசாலி. அகலமாயிருந்தால் ஊழிய ஜீவனம். கனமாக இருந்தால் தரித்திரம். மேலுக்கு வளைந்திருந்தால் ஆயுதத்தால் கண்டம் அல்லது தரித்திரம். அடியில் பெருத்து, நீட்டியபோது விரல்களின் மத்தியில் சந்துகள் இல்லாமலிருந்தால் பணம் செலவழிக்க இஷ்டமில்லாதிருப்பான். சந்துகள் இருந்தால் பணம் செலவழிக்க இஷ்டமுள்ளவனுயிருப்பான். (தொடரும்.)

**நீங்கள்**

மலச்சிக்கல், தேக அசதி, நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை முதலிய வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே எங்கள்

**ஆதங்க நிக்ரஹ மாத்திரை**

களை உபயோகியுங்கள். 50 வருஷங்களாக புகழ் பெற்று வருகின்றன. 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1-0-0. 5 டப்பிகள் ரூ. 4-0-0.

விபரங்களுக்கு எங்கள்

**காம சாஸ்திரம்**

புஸ்தகத்தைப் பாருங்கள் தபாற்செலவின்றி இனமாக அனுப்பப்படும்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
26, பிராட்வே, மதராஸ்.




# ஸரோஜனி

### ஓர் இனிய தமிழ் நாடகம்.

ஸ்ரீமான். கீ. பி. சேஷாத்திரி ஐயங்கார் எழுதியது.

(உரிமை ஆசிரியருக்குச் சொந்தம்.)

—:o:—

**இரண்டாம் அங்கம் :** **முதற் களம்:**

இடம் :—கானகம். காலம் :—நண்பகல்.

(பிரதாபனும், பாலநேசனும் காயம்பட்டுப் பிரவேசம்,)

பால :—பிரதாபரே! தெய்வம் நம்மைக் காப்பாற்றாது போலிருக்கிறதே. நமது சேனைகளெல்லாம் ஓடிவிட்டன. பிரதானத் தலைவர்களும் அவர்களுடன் சேர்ந்து உயிர் தப்ப முயல்வதைப் பார்த்தீரோ? நாம் சேனைகளைத் திரட்டிச் சேர்க்க முயல்வது வீணே. ஜயம் நமது பக்கமில்லை.

பிர :—நமது சேனை ராஜேந்திரனது சேனைக்கும் கீழ்ப்பட்டதோ? இந்த யுத்தத்தின் காரணமும் சிரமம் தானே. அவ்விதமிருந்தும் நமது பக்கம் தோல்வி யடைவது எப்படி? பகவானும் பக்ஷபாதமாகவன்றோ இருக்கின்றார்? எவ்வளவு போர் செய்தபோதிலும் தர்மமான காரியமும் அதிர்ஷ்டமில்லையேல் கைகூடுவது அசாத்தியமே! இது சமயம் நாமெல்லோரும் அதிர்ஷ்ட ஈனர்களே.

பால:—நான் வேந்தரை எதிரிகளினின்றும் காக்க மூன்றுதரம் பிரயத்தனப்பட்டேன். அன்று அம்முயற்சிகள் யாவும் வீணாயின. வியர்த்தமானதுமன்றி, நானும் அடிப்பட்டு வந்தேன். நமது சபையின் கண் வீற்றிருந்த புண்ணிய புருஷர் ஸுரேந்திரர் தான் நமது காஞ்சேயரைக் குத்த வந்த வீரனைத் தடுத்து அவனையும் எமனுலகத்துக்கு அனுப்பினுர். நாம் இருந்தும் என்ன பயன்? ஓர் அன்னியன் நம் இறைவருக்குச் சகாயம் புரிய நாம் கொஞ்சமும் வெட்கமின்றிப் புறங்காட்டி ஓடி வந்தோமே! இதுவும் யுத்த வீரர்களுக்கு அழகோ!

பிர :—நேசரே! நான் திறமைகொண்டு செருக்கினுல் அந்த மகானை நிந்தித்தேன். அவர் எனக்குச் சகாயம் புரியாதிருந்தாரானுல் அந்தோ! என் எண்ணமெல்லாம் ஒழிந்திருக்கும்

ஒழிந்து போயிருக்கும். ராஜேந்திரனது ஈட்டியினால் நான் தாக்கப்பட்டு குதிரையின் மேலிருந்து கீழ் விழுந்துவிட்ட சமயம், அந்த ஸுரேந்திரப் புண்ணியவான் என்னைக் குதிரை மீது உட்கார வைத்து என் செவியில் 'பிரதாபரே! தைரியமாய் சண்டை செய்யும். ஸரோஜனியின் அருளைப் பெறுவதற்கு வேறு மார்க்கம் கிடையாது. சண்டை செய்யும்' என்று உரைத்தார். ஹா! என்ன அருமையான குணம்! என்ன முதிர்ந்த காதல்!!

பால :—நன்மையே செய்தார்.

பிர :—நேசரே! என்ன நன்மையை அவர் செய்தாலும், நான் அவருக்கு இழிந்தவனாக வன்றோ ஆகிவிட்டேன்?

பால :—சந்தேகமில்லாமல் பிரதாப! நம்மை யாரோ துரத்தி வருகிறார்கள் போலிருக்கிறது.

பிர :—எதோ! எதோ! (ஸுரேந்திரரும் காஞ்சேயரும் பிரவேசம்.)

பால :—நமது வேந்தர் நீடூழி வாழ்க!

காஞ் :—உங்களது வந்தனங்களை இந்தத் தீர புருஷருக்கு அளியுங்கள். இவர் செய்த அரிய காரியங்கள் யாவும் மனிதனால் செய்ய முடியாதவைகள். ஹே! புண்ணிய புருஷா! என் குலத்தைக் காக்க வந்த தேவதையே.

ஸுரே :—அரசே இல்லை! நான் தேவதை யல்ல; ஓர் அசக்தனான பாவி! நான் உமக்கு ஏதோ கொஞ்சம் உதவி புரிந்திருந்த போதிலும், உன்னதப் பதவியடைய மார்க்கம் ஒன்றும் எனக்கில்லை. இப்பொழுது உமக்கு கெட்ட காலமாயிருப்பினும், இரவை எப்படி பகல் தொடருகிறதோ அதுபோல் சீக்கிரம் உமது பதவியைப் பெறுவீர். ஆனால், இன்று முதல் நான் எப்பொழுதும் சக்தியற்றவனாக இருக்கும் காலமும் கிட்டியது.

காஞ் :—என்ன! ஸுரேந்திரரே! என்ன விசேஷம்? நீர் வருத்த மடைவதற்கு.

ஸுரே :—வேந்தரே! ஒரு விஷயத்தில் உமது மன்னிப்பைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

காஞ் :—நானோ உம்மை மன்னிப்பது. எனது உயிரைக் காப்பாற்றியவரை மன்னிப்பது நானோ! சொல்லும் அப்புறம்.

ஸுரே :—மன்னவர்! நான் உமது புத்திரியைக் காதலித்தேன். எப்படி தெரியுமோ? ஒரு தரித்திரன் கஷ்டமுறும் சமயத்தில் சக்கரவர்த்தியாக நினைப்பதைப்போல நான் காதலித்தேன். நெடுநாள் மனதில் சஞ்சல மடைந்தேன். அந் நங்கையினிடமிருந்து ஒரு பதிலையும் அடைந்தேனில்லை. நான் அன்னியனாயும், பிறவி பேதமுடையவனாயும், ஜாதி பேதமுடையவனாயுமிருந்த போதிலும் இளவரசி எனக்குக் கொஞ்சம் மனச்சாந்தியைக் கொடுத்தாள்.

காஞ் :—எந்த விதத்திலோ?

பிர :—எப்படி! எப்படி!

ஸுரே :—ஸரோஜனியின் நிமித்தம் இந்தச் சண்டையில் ஊக்கங்கொண்டு என்னால் ஆனமட்டும் போர் புரிந்தேன்.

காஞ் :—ஆமாம்! புகழத்தக்க மாதிரியாகவே நீர் போர் புரிந்தீர்.

பிர :—ஸுரேந்திர! இளவரசியை நான் காதலித்த போதிலும் உமது வீரத்தை என்னால் புகழாமலிருக்கக் கூடவில்லை.



ஸுரே :—பிரதாபரே! மிகவும் என்னைப் புகழ்கின்றீரே! அப்புகழ்ச்சிக்கு நான் அருகனல்லேன். என் எண்ணமும், காதலும், யௌவனமும் எவ்வளவோ காரியத்தைச் செய்யும் என்று கருதினேன். இன்றைய விஷயம் அவைகளெல்லாம் வீண் என்று தெற்றெனக் காட்டிவிட்டது. நான் என்னென்ன செய்தேனோ அவைகளுக்கெல்லாம் சுக்ரன், மணிதான் காரணம். அத்தருணியின் பகவத்பக்தியே அவள் தந்தையைக் காப்பாற்றியது. அந்நங்கை உமது விஷயத்தில் காட்டிய நன்றிக்காக அப் பெண்மணியையே மனமொழி காயத்தால் நினைக்கும் நான் உம்மைச் சண்டையில் காப்பாற்றினேனே யொழிய வேறெதனாலுமன்று. நான் இந்தச் சமரில் வெற்றிமாலை தரிப்பேன். என்னை ஸரோஜனி வந்தனமளித்து, நல்வரவு கூறி ஸந்தோஷப்படுத்துவாள் என்று எண்ணி இப்போர் புரிந்தேன். அந்தோ! அவ்வெண்ணமெல்லாம் வீணாயிற்றே. சக்தியற்றவனாகத் தோற்கடிக்கப் பட்டேன். ஸரோஜனியின் பயத்திற்கும், அபாயத்திற்கும் காரணமாயிருந்த ராஜேந்திரனைச் சிறை பிடித்துச் செல்லாமல் அம் மங்கைக்கரசியைக் காண்பதில்லை என்று ஒரு பிரதிக்ஞை செயதுவிட்டேன். ராஜேந்திரனை வெற்றிபெறுவது முடியாத காரியமாகி விட்டதே.—(தாரை சப்தம் கேட்க) அதோ! சத்துரு பின்னே தொடருகின்றான் போலும், நீங்களாவது பிழைத்திருங்கள். என்னால் ஆனவரையிலும் சண்டையிட்டேன் என்றும் உபயோகமில்லாதவன் மீது 'இவ்வளவு பட்சம் காட்டினோமே என்று ஸரோஜனி மனம் சஞ்சலமடையா வண்ணமிருக்க நான் வேண்டிக் கொண்டதாகவும் சொல்லும். அந்த அரகனைக்கு உதவிபுரிய நீங்களாவது பிழைத்திருங்கள். இந்தக் கட்கத்தை நீங்கள் கொண்டுபோய் உபயோகியுங்கள். எனக்கு ஒருவித ஆயுதமும் வேண்டாம். மனித சஞ்சாரத்தை அறவே ஒழிக்கின்றேன் யான். நான் எங்கேனும் ஒரு கானகத்தை அடைந்து காதலுக்காக என் பிராணனைத் தியாகம் செய்கின்றேன். (விரைந்து செல்கிறான்.)

காஞ் :—பின்சென்று அழைத்து வாருங்கள். நேசரே! அழைத்து வாரும்.

பிர :—அழைக்கச் செல்வது வீணே! வேந்தே! என் கண்ணுக் கெட்டிய வரையிலும் அவரைக் காணோம். அதிவேகமாக எங்கேயோ சென்றுவிட்டார்.

காஞ் :—அந்தோ! அவருக்காக நான் மிகவும் வருத்தப்படுகின்றேன்.

பால :—நானும் வெகுவாகத் துயரப்படுகின்றேன். மன்னா! நமது க்ஷேமத்தை நாம் மறந்துவிடக் கூடாது. சீக்கிரம் தப்பித்துச் செல்லவேண்டும் சத்துருக்களிடமிருந்து.

பிர :—காஞ்சேயரே! சண்டையில் உமக்கு உதவி புரிந்த நான் இறக்கும் வரையில் உமது பின் வருகின்றேன்; சகாயமும் புரிகின்றேன்.

காஞ் :—நாம் இவ்வாறு பிரிவது தர்மமன்று; ஹா! என் அருங் கண்மணி; ஸரோஜனி, (பொறுத்து) இன்னமும் உங்களுக்கு அரசனாக நானிருந்தாலும் அல்லது உயிர் நண்பனாயிருந்தாலும் நான் சொல்வதை நீங்கள் கேட்க அதன்படி நடக்கவேண்டும். என்னைப்போல் நீங்களும் உடையை மாற்றிக்கொள்ள வேண்டும். இவ்வுடையைக் களைந்து விட்டேனானால் ராஜரீகமும் என்னைவிட்டுச் செல்லுகின்றது. ஆகவே, தெய்வச் செயலாக இங்கே ஓர் இடையனின் உடை இருக்கின்றது. இதை எடுத்துக்கொண்டு என் உடையை இங்கு வைத்து விடுகின்றேன். நீங்கள் என்னைக் காட்டாணில் காணலாம். மகபதிக்குச் சொல்லிய வண்ணம் ஸரோஜனியுடன் அவர் நம்மை அங்கு சந்திப்பார். நாம் பிரியவேண்டியது தான்.

பால :—எமது உடல் மாத்திரம் எங்களுடன் இருக்குமே தவிர மனம் முழுமையும் உம்மிடம் தான். (செல்கை.) (காட்சி முடிகிறது.)

—:o:—

## ஜோதிட நிபுணர்.

அஷ்ட மங்கள பிரசன வல்லபர்.

சுமார் ஒரு வருஷத்திற்கு மேல் மிஸ்டர். வி. சுப்பிரமணிய சாஸ்திரிகளைத் தெரியும். அவருடைய ஜோதிடத்தை அநேக தடவைகளில் பரிக்ஷித்தேன். அவர் சொன்னதில் ஒரு தரமாவது தவறுபவிருந்தது மிகவும் மெச்சத்தகுந்தது. எப்பொழுதும் எனக்கு நம்பிக்கையுண்டு.

பி. பி. ஸ்ரீ அரிராவ்,
*I. G. of Registration,*
மதறாஸ். 3-5-'31

ஒரு ஜாதக பலன் நேரில் கேட்க ரூ. 5, ஒரு வருஷ பலன் எழுத ரூ. 8, 3-வருஷ பலன் ரூ. 7, ஒரு ஜாதகம் குறிக்க ரூ. 3, நான்கு கேள்விகளுக்குப் பதில் ரூ. 1, வி. பி. சார்ஜ் தனி. முழு ஜாதக பலன் எழுத ரூ. 25. ஜாதகமாவது பிறந்த வருஷம், மாதம், தேதி, நாழிகையாவது வேண்டும். எதிர் காலத்தை உள்ளபடி உரைப்பவர் என்று பாரிஸ்டர் வி. கே. ஜானும், ரிடையர்டு போலீஸ் சூப்பரின்டெண்டு எ. சுப்பாராவும், ரிஜிஸ்டிரேஷன் இன்ஸ்பெக்டர் ஜெனரல், ராவ்பகதூர் பி. டி. குமாரசாமி செட்டியார் அவர்களும் கூறுகின்றனர்.

வித்வான் கே: வி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்,
302, லிங்கச்செட்டி தெரு, மதறாஸ்.



## பிரைஸ்! நஷ்டமே கிடையாது பிரைஸ்!!

### 50 சான்ஸுகளுண்டு.

ரூ. 150—முதல், ரூ. 275—வரையில் பெறலாம்.

பிரைஸ் கிடைக்காவிட்டால் கட்டின தொகை முழுவதும் லாபத்தோடு வாபீஸ் செய்யப்படும். முதல் சீட்டு 15-2-32ல் குலுக்கப்படும். சொற்ப டிக்கட்டுகளே யிருக்கின்றது. ஆகையால் உடனே எழுதவும்.

தீ ஷன் பாங்கி லிமிடெட்.,
34, ராமசாமி தெரு, ஜி. டி. சென்னை.

எல்லா விடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.


# மதிப்புரை.

### "முஹம்மதலி"

காலஞ் சென்ற தேசபக்தர் மௌலானா முகம்மதலி அவர்களின் ஞாபகார்த்தமாக இலங்கையிலிருந்து "முஹம்மதலி" என்னும் வாரப் பத்திரிகையின் முதல் நான்கு இதழ்கள் வரப் பெற்றோம். இப்பத்திரிகை ஹிந்து முஸ்லீம் என்ற வகுப்பு பிணக்கின்றி, தேசத்தொண்டே, பிரதானமாகக் கொண்டுள்ளமையால், யாவரும் இதை சிறப்பாக ஆதரிப்பார்களென நம்புகிறோம். இதன் ஆசிரியர் ஜனாப் ஓ. கே. மொயிதீன் சாயபு அவர்கள். தனி பிரதி 0—0—3
வருஷ சந்தா ரூபா 3—0—0

கிடைக்குமிடம்:—
ஓ. கே. மொயிதீன் சாயபு
சிலோன்.

### ஜான்ஸி மஹாராணி

சுதந்திர பிரசுரத்தின் முதல் இதழ் ஜான்ஸி மஹாராணி லக்ஷ்மிபாய் சரித்திரம் வரப்பெற்றோம். இவ்வீர மங்கையின் சரித்திரத்தை மிகத் தெளிவாகவும் எளிய நடையில் எழுதி யுள்ளது. இதைப் படித்த மாத்திரத்திலேயே ஒவ்வொருவருக்கும் தேசபக்தி ததும்பும் என்பதில் ஐயமில்லை. விலை அணா 2.

கிடைக்குமிடம்:— மானேஜர்,
பாரதி ஆலயம்,
உத்தம பாளையம், மதுரை ஜில்லா.

### இங்கித மணவியல் அல்லது திருமண நிகழ்ச்சி விளக்கம்.

மக்கள் வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதது திருமணம் என்பது நாம் சொல்லாமலே யாவர்க்கும் எளிதில் விளங்கும். ஆனால் இதற்கு செய்யும் சகல கிரியைகளும் நமக்கு புரியாத சமஸ்கிருத பாஷைகளில் மந்திரங்களைச் சொல்லி வருகிறார்கள். இதை திருவாளர் மடிகைக்கிழார் அ. சிதம்பரனாரவர்கள் ஆராய்ச்சி முறையால் தமிழர்களுக்குரிய மண முறைகளை பல ஆதாரத்துடன் வகுத்துக் காட்டி தமிழ் மந்தரங்களால் எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகம் நம் நாட்டவர்களுக்கு மிகவும் பயன் படும் என்று நம்புகிறோம். விலை அணா 6.

கிடைக்குமிடம்:—
மறை மலை யடிகள்
கல்விக் கழகம்,
பரங்கிமலை.

### விநோத கதா மாலிகை.

ஸ்ரீமான். திரு. என் வேங்கட ரமணன் அவர்களால் எழுதப் பெற்ற விநோத கதா மாலிகை முதற்பாகம் வரப் பெற்றோம். இப்புத்தகம் சிறந்த நீதிகளையே கதை ரூபமாக கொண்டுள்ளது. இது சிறுவர்களுக்கு நீதிபோதிப்பதற்கு மிகவும் அத்யாவசியமானது. விலை அணா 3.

கிடைக்குமிடம்:—
ஆனந்த நிலைய புத்தகசாலை.
வடகம் பாளையம்,
சேலம்.

### ஸ்ரீ கந்த பெருமானார் என்னும் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலய வைபவம்

என்னும் நூல் வரப்பெற்றோம். இது ஆலய வைபவத்தின் வரலாறுகளைப் பற்றி தெரிந்த வரையில் சை. ர. நமச்சிவாய ராஜயோகி என்பவரால் வெகு சிறப்பாக எழுதப் பெற்றுள்ளது. இம்மாதிரியான பல புஸ்தகங்களை வெளியிட்டு மக்களுக்கு கடவுள் பக்தி உண்டு பண்ணுமாறு ஸ்ரீ சை. ந. பால சுந்தரம் செட்டியாரை கேட்டுக் கொள்ளுகிறோம். விலை அணா 6.

கிடைக்குமிடம்:—
சாது ரத்ன சற்குரு புஸ்தகசாலை,
பார்க் டவுன், சென்னை.

### சோதிட ஆசிரியன்

என்னும் முதல் 2 பாகம் வரப் பெற்றோம். இதில் ஜோசியம் கற்பதற்குறிய சகல முறைகளையும் தெளிவாக எழுதப் பட்டுள்ளது. இதில் குறிப்பிட்டுள்ளபலன்கள் அனுபவத்திலும் ஒப்புக்கொள்ளக் கூடியதாக யிருப்பதால் இப்புத்தகம் சகலருக்கும் பிரயோஜனப்படுமெனநம்புகிறோம் இரண்டுபாகமும், விலை ரூபா. 2.

கிடைக்குமிடம்:—
சாது ரத்ன சற்குரு புஸ்தகசாலை,
பி. டி. சென்னை.

# "காயசித்தி மகரத்வஜம்"

(ரிஜிஸ்டர்ட்)

உயர்ந்த பலவிருத்தி மருந்து. தங்கத்தைக்கொண்டு செய்யப்பட்டது.

இம்மருந்து ரத்தத்தை சுத்திசெய்து, நரம்புக்கு வலிவைக்கொடுத்து, இந்திரியத்தை கெட்டிப்படுத்தி போக சத்தியை கொடுக்கக்கூடியது.

40-மாத்திரைகள் 20-நாளைக்கு ரூபா 5—0—0.

## "மன்மத கல்பம்" (வெள்ளைக்கு மருந்து)

மிதமிஞ்சிய போகத்தாலும், ரோகமுள்ள ஸ்திரீ சம்பந்தத்தாலும் பல மாதர் கூட்டுறவாலும் ஏற்படும் பயங்கர ரோகங்களை இது இருந்தவிடம் தெரியாமல் ஓட்டி குணப்படுத்தக்கூடியது. புட்டி ஒன்றுக்கு ரூபா 5—0—0

## மஹா காயாமிருதம் (ரிஜிஸ்டர்ட்)

ஸ்திரீகளுக்கு உண்டாகும் ரத்த பெரும்பாடு பெரும்பாடு முதலிய வியாதிகளை குணப்படுத்தக்கூடியது. புட்டி ஒன்றுக்கு ரூபா 2—0—0

## கேஸரி மாத்திரை.

ஸ்திரீகளுக்கு உண்டாகும் எல்லாவித சூதக வாய்வுகளையும் குணப்படுத்தக் கூடியது. புட்டி ஒன்றுக்கு ரூபா 2—0—0

## மஹா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) சுகப்பிரசவ எண்ணெய்

கர்ப்ப முண்டான 5-வது மாதம் முதல் 9-து மாதம் வரையில் சாப்பிடக்கூடியது. மரத்திலிருந்து பழம் பழுத்துத் தானே உதிர்வதுபோல் சுகப்பிரசவமாகிவிடும். சிசுவுக்கும் செவ்வாப்பு முதலியன அணுகா. 12-அவுன்ஸ் ரூ. 2—0—0

**தமிழ் நாடு ஆயுர்வேத வைத்தியசாலை, லிமிடெட்.**

44, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, தபால் பெட்டி 278, மதராஸ்.

கேட்லாக், ஏஜென்ஸி நிபந்தனை இனமாக அனுப்பப்படும்.



### இந்துநேசன் வருஷ அநுபந்தம்.

இந்த அனுபந்தம் 100 பக்கங்கள் வரையில் உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் பலவிதமான சிறந்த இங்கிலீஷ், தமிழ் வியாசங்களுடனும், பல அழகிய படங்களுடனும் வெளி வந்துள்ளது. பலரும் படித்து ஆனந்தம் அடையும் படி விலை ரூபா 1. என குறிப்பிட்டுள்ளது மிகவும் போற்றத் தக்கது.

கிடைக்கு மிடம்:— **இந்துநேசன் ஆபீஸ்.**
அர்மெனியன் தெரு, சென்னை.



### கேஸரீஸ் டேன்டல் கிரீம்

என்னும் பல்பசை வரப் பெற்றோம். இதன் சிறப்பை கண்டு போற்றாதார் ஒருவருமிரார் என்பது நமது துணிபு. தேசப் பற்றுள்ளவர்கள் ஒவ்வொருவரும் இதை உபயோகிக்க தவற மாட்டார்கள் என்று நம்புகிறோம். அணா 8.

கிடைக்கு மிடம்:—
**கேஸரி குடீரம்.** எழும்பூர்.



### 1932 காலண்டர் வரவு.

குமரன் பிரஸிலிருந்து தினசரி கிழிக்கும் சீட்டு கொண்ட காலண்டர் ஒன்று வரப் பெற்றோம். விலை அணா 8.

கிடைக்கு மிடம்:—

**குமரன் பிரஸ்.**
காஞ்புரம்.

P. கோபால்சாமி நாயுடு அண்டு சன்ஸ், S. R. பாலுசாமி ஐயர், கேசரி குடீரம், ஆந்திர வின் கம்பெனி, ஜெனரல் சுதேசி ஸ்டோர்ஸ், விக்ஸன் கம்பெனி & சன்ஸ். முதலியவர்களிடமிருந்து பலவிதமான காலண்டர்கள் வரப் பெற்றோம்.




# விஜய ரக்ஷித கவசம்.

நீங்கள் என் கவலைப் படுகிறீர்கள்? நீங்கள் நற் கியாதியுடனும் தனசமர்த்தியுடனும் இருக்க விரும்புகிறீர்களா? புத்திர சந்தானத்தை விரும்புகிறீர்களா? கிரக தோஷங்களிலிருந்து விடுபட்டு, ஆரோக்ய ஐஸ்வர்யத்தை விரும்புகிறீர்களா? தரும நியாயமான எக்காரியத்திலும் ஜெயத்தை விரும்புகிறீர்களா? தங்கள் தொழிலில் மேன்மையடைய எண்ணுகிறீர்களா? குடும்ப வாழ்க்கையில் ஒற்றுமை வேண்டுமென்கிறீர்களா? அப்படியாயின் ஓர் அபூர்வ மூலிகையினாலும், ஜப, தப, ஹோமாதிகளாலும் தயாரிக்கப்படும் விஜய ரக்ஷித கவசத்தை அணியுங்கள்.

வெள்ளி ரூ. 5. தங்கம். ரூ. 15.

விலாசம்:-பிரபசர். கா. கோவிந்தாச்சாரியார்,
"சரஸ்வதி" 4, எல்டாம்ஸ் ரோட், தேனம்பேட்டை போஸ்ட், மதராஸ்.









# கணித ஜோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ் செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும், விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் 2. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் 1. விவாக விஷயம் ரூபாய் 1. விவாக விஷயத்தைப் பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும் புருஷனுக்குப் பெண்ணும் இன்னொன்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக ஜோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப் பலன்களாயிராமல், விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது, வடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

விலாசம்:—தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.




# பி. நடேச முதலியார்

இரும்புப்பெட்டி வியாபாரம்,

நெ 59, பிராட்வே, சென்னை.

இந்தியா, சிலோன் முழுமையும் அநேக கவர்ன்மெண்டு ஆபீஸ்கள், பாங்கிகள், ஜில்லாபோர்டு முனிசிபல் ஆபீஸ்கள், சமஸ்தானங்கள், ரயில்வே கம்பெனி முதலிய எல்லா இடங்களுக்கும் நீண்ட வருஷங்களாக கெட்டி இரும்புப் பெட்டிகள் சப்ளை செய்து நற்கியாதி பெற்று வருகின்றோம்.



## நடராஜன் இஞ்ஜினீரிங் தொழிற்சாலை,

ப்ரோப்ரைட்டர், பி. நடேச முதலியார்.

எங்களுடைய நடராஜன் இன்ஜினீயரிங் தொழிற்சாலையில் ரைஸ்மில் அல்லர்கள் நெ. 1, நெ. 2, நெ. 7, நெ. 8. தயார்செய்து இங்கிலீஷ் கவர் பிரேம் பிடிங் செய்து கொடுப்பதுடன் மேற்படி அல்லருக்கு வேண்டிய ரைஸ்மில் சிலிண்டர்கள் காலர்கள், ஷாப்டிங் புல்லிகளும் பிளவர் மில்லுக்குவேண்டிய பிளேட்டுகள், பேரிங்குகள், குடங்கள் முதலிய எல்லா சாமான்களும் எப்போதும் தயாரில் கிடைக்கும். தவிர மோட்டார் & ஆயில் இன்ஜின்கள் முதலிய மெஷினரி சாமான்கள் ரிப்பேர் செய்து கொடுக்கப்படும்.

தொழிற்சாலை: லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை.

---

## சாதன ஔஷதாலயம், டெக்கா, (பெங்கால்.)

— ஆதக்யர் —

கோகல் சந்திரபோஸ், M.A.F.C.S., (London.)

பாகல்பூர் காலேஜ் மாஜி பிரபொஸர்.

ஆயுர்வேத சாஸ்திர முறைப்படி செய்த பிரசித்தி பெற்ற மருந்துகள். கேட்லாக் இனும்.

**மகரத்துவஜா** (ஸ்வர்ண செந்தூரம்)

அசல் தங்கம் கலந்த செந்தூரம், தோலா 1-க்கு விலை ரூபா 4

எல்லாவித பல வீனங்களுக்கும் சிறந்தது.

**சராபாடி சரசா.**

வெள்ளை, வெட்டை, முதலிய மேக வியாதிகளுக்கு சிறந்தது.

விலை சேர் 1-க்கு ரூபா 3.

**சுகர சஞ்சீபன்.**

ரம்பு தளர்ச்சிக்கும், தாது புஷ்டிக்கும் சிறந்தது. சேர் 1-க்கு விலை ரூபா 1—6—0.

---

## கிங். காபி மில்க்.


இந்த பொடியை சுடு ஜலத்தில் கலந்தவுடன் காபி தயாராகும் பால், சக்கறை தேவையில்லை.

விலை விளம்பரம் 1-பவுண் பாக்கெட் 1—4—0 போஸ்ட்டேஜ் பிரத்யேகம்.

ஜில்லா யேஜண்ட் தேவை விலாசம்:—இண்டியன் மில்க் புட் ஒர்க்ஸ்,

141, வரதா முத்தையன் தெருவு, G. T. மதராஸ்.

# வைரங்கள்.



ஆண்ட்வெர்ப், அம்ஸ்டர்டாம் முதலிய இடங்களிலிருந்து நேராக ரொக்கக் கொள் முதலுக்கு வைரங்கள் வரவழைப்பதால் நாங்கள் கொடுக்கும், சகாய விலைக்கு யாரும் கொடுக்க முடியாது. சிறு ஆர்டர் செய்து பார்த்தால் உண்மை விளங்கும்.

**THE DIAMOND IMPORT CO.,**

247, CHINA BAZAAR ROAD,

*Upstair, opposite to Flower Bazaar Police Station,*

MADRAS

SOLE DISTRIBUTORS
FOR
SOUTHERN INDIA




C. KRISHNASWAMI NAID

2-105, ARMENIAN STREET

MADRAS

LODHRA PRESS, COLOUR PRINTERS, MADRAS.